ஜைன இளைஞர் மன்ற வெளியீடு

# நரிவிருத்தம்

திருத்தக்க தேவர்

உரை: வித்வான் வீ. ஆறுமுகஞ் சேர்வை

# நரிவிருத்தம்

'மூவுலகு உணர்ந்த மூர்த்தி'

மகாவீரரின் 2500 ஆவது

வீடுபேறு அடைந்த ஆண்டு

நினைவு வெளியீடு

*Lord Mahavira's*

*2500th Parinirvana year*

*Commemorative Publication*

ஜைன இளைஞர் மன்ற வெளியீடு-4

திருத்தக்க தேவர் அருளிய

# "நரிவிருத்தம்"

விருத்தியுரையாசிரியர் :
மதுரை மாவட்டம் செம்பூர் வித்வான்
வீ. ஆறுமுகஞ் சேர்வை

வெளியீட்டாளர் :
ஜைன இளைஞர் மன்றம்
சென்னை-600017

© Jain Youth Forum, Madras.

NARIVIRUTTAM

Commentary by
VIDWAN V. AARUMUGAN SERVAI

*Publisher*:
JAIN YOUTH FORUM
1-A, Boag Road
Madras-600 017

Second Edition: January 1975

Price: 2-50

*Printers*:
Srēmati Printers Madras-600 002

# பதிப்புரை

மெய்ப்பொருள் காட்டி உயிர்கட்கு அரணாகித்
துககம் கெடுப்பது நூல்

உலக வாழ்க்கை துன்பக் கடலாக உள்ளது; உயிர்களோ இன்பத்தையே நாடுகின்றன. இங்ஙனம், உயிர்கள் இயல்பு வேறாகவும் அவை வாழும் சூழலின் இயல்பு வேறாகவும் முரண்பட்டுக் கிடக்கின்றன. இம் முரண்பாட்டை ஆய்ந்து, மெய்யாய இன்பம் எது என்று சுட்டுவதுதான் இலக்கியங்களின் நோக்கமாக இருக்கின்றது. அந்த வகையில் 'நரிவிருத்தம்' மிக அருமை வாய்ந்த அற இலக்கியமாகும். இந்நூலை ஆக்கித் தந்தவர் திருத்தக்க தேவராவார். இந்நூலை யாத்தமைக்குக் காரணம் கூறும் மரபுவழிச் செய்தியொன்று உண்டு. அதனை முதற்பதிப்பு முன்னுரையில் உரைகாரர் கூறியிருக்கிறார்.

'நரிவிருத்தம்' மூலம் மட்டும் முதலில் அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது. பிறகு 1907ஆம் ஆண்டில் திரு. மு. இராகவையங்கார் அரும்பத உரையுடன் இந்நூலை வெளியிட்டுள்ளார். இதுதவிர வேறு உரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. தருமசீலன் உரிமையாளர் திரு. தீ. ஆதிநைனார் மதுரை மாவட்டம் செம்பூர் வித்வான் வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்களைக் கொண்டு இந்நூலுக்கு ஒரு விருத்தியுரையை வெளிப்படுத்தினார். இவ்விருத்தியுரை தருமசீலனில் தொடர்ந்து வெளியிடப்பட்டுப் பின்பு தனி நூலாக 1923ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 'தருமசீலன்' முதல் இதழில் [மே, 1918] தொடங்கப்பெற்ற இவ்விருத்தியுரை நான்கு ஆண்டுகளுக்குப் பின்னே 1922, நவம்பர் இதழில் முடிவு பெற்றுள்ளது. திரு. ஆதிநைனார் அவர்

களுக்குப் பின் வேறு யாரும் இந்நூலைப் பதிப்பித்ததாகத் தெரிய வில்லை. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக வேறு பதிப்பு இல்லாத காரணத்தால் இந்நூல் இப்பொழுது கிடைப்பது அருமையாக இருக் கிறது. எனவே, இந்நூல் மீண்டும் வெளிவர வேண்டும் என்று பலர் விரும்புகின்றனர். மறுபதிப்பின்றி அருமையாகக் கிடக்கும் நூல்களை மீண்டும் அச்சிடுதலை ஒரு பணியாகக் கொண்டுள்ள ஜைன இளைஞர் மன்றமும் இந்நூலை மறு பதிப்புக்குக் கொண்டுவர முயன்றது. இம் மன்றத்தின் முயற்சிக்குத் தக்க நேரத்தில் வேண்டிய பொருள் தந்து துணைநின்றார் கல்பூண்டி பெரியார் திரு. நாகேந்திர ஜெயின் அவர்கள். அவர்களுடைய நன்கொடை வழியாகவே இந்நூல்,

பகவான் மகாவீரர் 2500ஆம் பரிநிர்வாண நினைவு ஆண்டு வெளியீடாக வெளியிடப்படுகிறது. கொடை வழங்கிய அப்பெரி யாருக்கு அன்பு மிகுந்த ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலை வெளியிடுதற்குத் தன் கைப்படியையும், 'தருமசீலன்' இதழ்களையும் தந்து உதவிய ஆரணி திரு. V. தேவேந்திர நைனார் அவர்களுக்கும் ஆரணி V. சந்திரநாத நைனார் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறோம். இந்நூல் வெளியீட்டுப் பணியினை மேற் கொள்ள ஒரு வாய்ப்பு அமைத்துவிட்டுச் சென்ற திரு. தி. ஆதிநைனார் அவர்களுக்குப் புகழ் அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினர்க்கு இந்த நேரத்தில் நன்றி பாராட்டுகின்றோம்.

நூலை அழகாக அச்சிட்டுக் கொடுத்த ஸ்ரீமதி அச்சகத்தார்க்கும் அன்பான நன்றியைக் கூறிக்கொள்கிறோம்.

தமிழ் கூறும் நல்லுலகம் இந்நூலை வரவேற்று இம்முயற்சிக்குத் துணை நிற்க வேண்டும் என்று விரும்பிக் கேட்டுக் கொள்கின்றோம்.

முக்குடையான் தாள் வாழ்க

ஜைன இளைஞர் மன்றத்தார்



நரிவிருத்தம் அச்சேற
நன்கொடை வழங்கிய பெரியவர்
திருமிகு நாகேந்திர ஜெயின், கல்பூண்டி.

# நாகேந்திரனார் வரலாறு

தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

உலகில் உண்பதற்காக வாழ்பவர் பலர்; வாழ்வதற்காக உண்பவர் சிலரே. அச்சிலரையே 'உலகம்' என்று குறிப்பர் உயர்ந்தோர். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பது அவர்தம் மொழியல்லவா! அத்தகு உயர்ந்தோர் வரிசையில் வைத்து போற்றப் படுபவர் திருமிகு கல்பூண்டி பா. நாகேந்திரனார் அவர்கள்.

## ஊர், மரபு

வற்றாத வளம் பெற்ற பகுதி அன்று வடஆற்காடு மாவட்டம். ஆனால், பற்றார்வம் உடையார் தொட்டால் துலங்காதது இல்லை இங்கே! உழைப்புண்டானால் ஊழையும் உப்பக்கம் காணலாம் இப்பக்கத்தில் என்று இன்று நம்மிடையே சான்று காட்டி நிற்கும் திரு மிகு நாகேந்திரனார் இவ் வடஆற்காடு மாவட்டம் ஆரணி வட்டம் கல்பூண்டி சிற்றூரில் பிறந்தார். தந்தையார் பெயர் திரு. பாகுபலி நைனார்; தாயார் பெயர் புஷ்பாவதி. அவர்கள் திருமகனாக மன்மத ஆண்டு கார்த்திகைத் திங்கள் பதின்மூன்றும் நாள் பிறந்தார்.

## விளையும் பயிர்

'விளையும் பயிர் முளையிலே' என்னும் முதுமொழிக்கு இணங்க வேளாண்மைக் குடியில் பிறந்த இவர் இளமையிலேயே தன் குலத் தொழிலிலே குன்றாத ஊக்கம் காட்டினார். இன்று மங்காதப் புகழ் நாட்டினார். உழைப்பு! உழைப்பு! அதுவே இவர் உயிர் மூச்சு! இந்த வயதிலும் இவர் இளைஞனைப் போல இயங்கிக் கொண்டிருப்பதற்கு பின்பலமாக நிற்பது இவர் உழைப்பு மீது கொண்டிருக்கும் உறுதியான பிடிப்பேயாகும். ஜைன இளைஞர் மன்றத்தினர் அண்மையில் காணச் சென்ற போது தம் பண்ணைத் தொழிலாளி ஒருவருக்குத் துணையாக இவரும் பணியில் ஈடுபட்டிருப்பதைக் கண்டனர். உழைப்பின்பால் அவர் காட்டும் ஊக்கத்தைக் கண்டு மகிழ்ந்தனர்.

## உழைப்பின் வெற்றி

எளிய குடும்பத்தில் பிறந்து உழைப்பால் உயர்ந்துள்ள பெரியார் நாகேந்திரனுர் வேளாண்மைத் துறையில் பெற்ற வெற்றிகள் பலவாம். அவருடைய பண்ணையைப் பாராட்டாத அறிஞர்கள் இல்லை. வேளாண்மைத் துறையில் காட்டிய சாதனைக்கு மாவட்ட முதல் பரிசைப் பெற்ற இப்பெரியார் மேற்கொள்ளும் விவசாய முறைகள் திரு. பாஸ்கரத் தொண்டைமான், திரு. கௌடய்யா போன்றோருடைய பாராட்டுதல்களைப் பெற்றுப் புகழைச் சேர்த்திருக்கின்றன. மூன்று அமெரிக்க இளைஞர்கள் பத்து நாள்கள் இவர் பண்ணையில் தங்கிப் பண்ணை நடைமுறையை ஆராய்ந்து புகழ்ந்து சென்றனர் என்ருல் அவருடைய வெற்றியின் எல்லையை ஓரளவுக்கு அறியலாம். சுருங்கச் சொன்னுல் ''பயிர்த் தொழிலில் ஜி. டி. நாயுடு'' எனலாம்.

வேளாண்மையோடு தொடர்புடைய கால்நடையைப் பற்றியும் இவர் ஆழ்ந்த அறிவு படைத்தவர். கால் நடைகளின் இலக்கணத்தில் நல்ல தேர்ச்சிப் பெற்றவர் இப் பெரியார்.

## இல்லற வாழ்க்கை

புற வாழ்க்கையில் இவர் அடைந்த வெற்றிக்கு அகவாழ்க்கையில் இவருக்கு இருந்த துணையே காரணம் என்ருல் அது மிகையன்று. இப்பெரியாரது அருமை துணைவியார் திருமதி ஜெயாவதி அம்மையார் ஆவார். அன்பும் அடக்கமும் இறைநெறியும் ஈகை குணமும் இயல்பாக உடைய அம்மையார் கொழுநரே தன் தெய்வம் என்று கொண்டு ஒழுகும் பான்மையர். இப்பெரியாருக்கு அகவாழ்க்கையில் நல்ல துணையாக நின்று இல்லறத்தை நடத்தி வருகின்ருர்கள். இவர்களுக்கு நான்கு குமாரர்கள் இருக்கிருர்கள். அவர்கள் திரு. சௌதர்மேந்திரன் திரு. இராமநாதன், திரு. சாந்திராஜன், திரு. குணபாலன் ஆவர். அனைவரும் மணமானவர்கள்.

## கொடை வாழ்க்கை

பகுத்துண்டு வாழும் பகுத்தறிவுக் கோட்பாட்டிலே இப்பெரியாருக்குப் பெருத்த ஈடுபாடு உண்டு. சாதி பாகுபாடு கடுமையாக இருந்த இவர்தம் இளமைக் காலத்தே கீழ் சாதிக்காரரோடு 'சமபோ

சனம்' கொண்டவர் இவர் என்றால் இவருடைய அன்பு புலப்படும். ஈ. வே. ரா. பெரியாருடைய கோட்பாட்டிலே நம்பிக்கை உடைய இவருக்கு 'சமபோசனம்' என்பது சாதாரணம் அல்லவா! நற்பண்புகளின் உறைவிடமாகத் திகழும் இப்பெரியார் வழங்கிய நன்கொடைகள் பலவாம். அலகாபாத் அனாதைச் சிறுவர் இல்லத்திற்கு இவர் வழங்கிய நன்கொடையும் சைன இளைஞர்களது கல்லூரி கல்விக்கு வழங்க ஒப்புக் கொண்டுள்ள நன்கொடையும் குறிப்பிடத் தக்கனவாம். இப்பெரியாருடைய நன்கொடை வழியாகவே இந் "நரிவிருத்தம்" இப்பொழுது வெளியிடப்படுகிறது. 'இவர்தம் கொடை உள்ளம் வாழ்வதாகுக! மேலும் பல கொடைகளைப் பெற இவர் வளம் மிகுவதாகுக'! என்று முக்குடையான் தாள் போற்றி அமைகின்றோம்.

ஜைன இளைஞர் மன்றத்தார்

# இப் பதிப்பு பற்றி . . .

முன் பதிப்பில் இல்லாது இப்பதிப்பில் இடம் பெற்றுள்ளவை.

1. விருத்தி உரையில் எளிமை கருதி சில இடங்களில் பதப் புணர்ச்சிப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது.

2. மேற்கோள் நூற்பாக்கள், செய்யுள்கள், செய்திகள் வரும் இடங்கள் குறிப்பாகச் சுட்டப்பட்டு அடைப்புகளில் காட்டப் பட்டுள்ளன.

3. இந் நூலில் இடம் பெற்றுள்ள கதைகளின் அட்டவணைத் தரப்பட்டுள்ளது.

4. இலக்கண இலக்கிய மேற்கோள் அகரவரிசை ஆகியவை பாடல், பக்க எண்களுடன் அமைக்கப் பெற்றுள்ளன.

5. மேற்கோள் நூல்களின் அகரவரிசையும் தரப்பட்டுள்ளது.

6. ‘‘மாலு நான்முகனும் ..’’ என்ற செய்யுள் சேர்க்கப் பெற்றுள்ளது.

7. சில செய்யுள் உரைகளுக்கு அடிக்குறிப்புகள் தரப்பட் டுள்ளன.

8. எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோள் நூல்கள் அகர வரிசை யில், பக்க எண்களுடன் தரப்பட்டுள்ளன.

# முன்னுரை

நரிவிருத்தமென்பது, சங்க இலக்கிய நூல்களுள் முதன்மை பெற்றதாகிய ஜீவக சிந்தாமணியை இயற்றிய ஆசிரியராகிய திருத்தக்க தேவரால் செய்யப்பட்ட அருமை வாய்ந்த நீதிநூல். இந்நூலாசிரியராகிய தேவர் சோழர் குலத்திலுதித்தவர்; வஞ்சிப் பகுதியிலிருந்த பொய்யாமொழி யென்பவராற் புகழப்பெற்றவர். இவர் இளமையிலேயே ஆசிரியரையடுத்து வடமொழியிலும் தென் மொழியிலும் மிக்க பாண்டித்திய முடையராய்த் தம் அருகமத நூல்களை யெல்லாங் கற்றுத் துறவு பூண்டு தம் ஆசிரியருடனே யிருந்து அவர் கருத்தின்படியே நடந்து கடைச்சங்கம் நடைபெற்ற காலத்தில் ஒருசமயம் அவருடன் மதுரைக்குச்சென்று சங்கப் புலவரோடு பழகி வந்தனர். அப்போது ஒருநாள் சங்கப்புலவர் தேவரை நோக்கி, ''அருகசமயப்புலவர் துறவு நூல்களைப்பாடும் திறம் பெற்றிருக்கின்றனரே யன்றிச் சிற்றின்பச் சுவை பொருந்திய நூலைப்பாடுந் திறம்பெற்றாரில்லை,'' என்று சொல்ல, தேவர், ''ஜைனர் சிற்றின்பச் சுவையை வெறுத்துத் தள்ளினரேயன்றிப் பாடத் தெரியாமல் தள்ளவில்லை,'' யென்று கூறினார். அதைக் கேட்டுச் சங்கப்புலவர், ''அங்ஙனமாயின் நீரே சிற்றின்பச் சுவை பொருந்திய ஒரு நூலை இயற்றி எங்கட்குக் காட்டுவீராக,'' என, உடனே தேவர் இசைந்து தம் ஆசிரியர்பாற் சென்று தம்கருத்தை வெளியிட, அவர், தம் மாணாக்கராகிய தேவர் அங்ஙனம் நூலியற்ற வல்லவர்தாமென்பதை யுணர்ந்திருந்தும் அவருடைய திறமையை அளந்தறியக்கருதி, அங்கே ஒரு நரியோட, அதனை அவருக்குக் காட்டி, 'இந்த நரிக்குலத்தின் இயற்கையை ஆதாரமாக எடுத்துக் கொண்டு நும் மனத்திற் றோன்றியபடி ஒரு சிறிய நூலியற்றுவீராக,' என்று கூறினர். தேவர் அங்ஙனமே அதனை ஆதாரமாகக் கொண்டு, தேகம் செல்வம் முதலியனவெல்லாம் நிலையற்றனவென்பது தெளி வாக விளங்கும்படி விரைவில், 'நரிவிருத்தம்,' என்னும் இந்நூலை இயற்றிக் காட்டினர். ஆசிரியர் இதனைப்பார்த்து மகிழ்ந்து பின்னர் ஜீவகனுடைய கதையை, காவியமாகப் பாடும்படி உத்தரவளிக்க அவர் அங்ஙனமே அதனைப் பாடிப் புகழ் பெற்றனர்.

இவ்வாறு தேவரால் பாடப்பெற்ற இந் நரிவிருத்தமானது மிகச்சிறிய நூலாயினும், ஞானத்தைப் போதிப்பதில் மிகவும் உயர்ந்ததாகும்; "உலகவாழ்வோ நிலையற்றது; இதனை நம்பிப் பேராசை கொண்டு வீண் ஆலோசனை செய்து நாசமடையலாகாது: நிலையான தருமங்களைச்செய்து முத்தியடைதற்குரிய வழிகளையே தேடவேண்டும்," என்னும் விஷயங்கள் இதில் மிகவும் விளக்க மாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றிற்குதாரணமாக முதலில் நரியைப்பற்றிய கதை யொன்றும், பின்னர் அதன் சார்பாக வேறு பதினெட்டுக் கதைகளும் கூறப்படுகின்றன. இவையனைத்தும் ஐம்பது செய்யுட்களாலேயே கூறப்படுகின்றன. இவற்றுள் முதலி லெடுத்துக் கொள்ளப்பட்ட நரிவிருத்தாந்தங் கூறுவன எட்டுச் செய்யுட்களேயாம். மற்றைய பாடல்கள் வேறு கதைகளையும் நீதிகளையும் கூறுவனவாம்.

இந்நூல் இவ்வாறு எளிதில் ஞானத்தைப் போதிக்கக்கூடியதா யிருப்பதினாலே இதனை எல்லா மதத்தினரும் கொண்டாடி வருகின் றனர். எனினும், இதன் மூலம் மாத்திரம் அச்சிடப்பட்டிருப்பதால் அது தமிழில் மிக்க பாண்டித்தியமுடைய பண்டிதருக்கேயன்றி ஏனையோர்க்குப் பயன்படாததாயிருக்கின்றது. ஆதலின், இந் நூலின் செய்யுட்களுக்கு உரையெழுதித் தருமசீலன் பத்திரிகையில் சிறிது சிறிதாக வெளியிட்டுவரின் ஜைன சகோதரர்க்கும், மற்றைய தமிழ் விருப்புடையார்க்கும் அவ்வுரை மிக்க பயன்படுவதாகும் என்று சில அறிஞர் என்பாற் றெரிவித்தமையின் அங்ஙனமே நான் எழுதி இவ்வுரையை வெளிப்படுத்தி வந்தேன்.

இப்போது இவ்வுரை பூர்த்திபெற்றமையின், இதனை ஒருங்கு சேர்த்துத் தனிப்புத்தகமாக வெளியிடின், தருமசீலன் சந்தாதாரர் களல்லாத ஏனைய தமிழ் நாட்டினர்க்கும் இஃது என்றும் பயன்படு மென்று இராயபுரம் கனம். P.R. வஜ்ஜிரபாகு நயினாரவர்கள் இதற்குப் பொருளுதவிசெய்ய தருமசீலன் பத்திராதிபர்-கனம். தி. ஆதிநயினா ரவர்களால் இந்நூல் புத்தகரூபமாக வெளியிடப் பெற்றிருக்கிறது. இதில், என்னுடைய அறியாமையாலும், பிற காரணங்களாலும் சிற்சில பிழைகளும் நேர்ந்திருத்தல் கூடும். அங்ஙனம் காணப்படும் வழுக்களை அறிஞர் எனக்கறிவித்தால் நான் அவற்றை வந்தனத் துடன் ஏற்று மறுபதிப்பில் திருத்திக் கொள்வேன்.

இந்த நற்பயன் மிக்க பனுவலைத் தமிழபிமான முள்ள கனவான்கள் அபிமானித்தாதரித்து மேன்மேலும் இத்தகைய புத்தகங்களை வெளிப்படுத்தும் உற்சாகத்தை எனக்குதவுமாறு அவர்களை வந்தனத்துடன் நான் வேண்டுகிறேன்.

தங்கள் மகோபகார சிந்தையால் இந்நூல் வெளி வருவதற்குப் பேருபகாரம் புரிந்த, தருமசீலன் பத்திராதிபராகிய கனம்-தி. ஆதிநயினாரவர்கட்கும், இராயபுரம் கனம் P.R. வஜ்ரபாகு நயினாரவர்கட்கும் என்றென்றும் இறைவன் திருவருள் புரிவானாக.

இந்நூல் முழுவதையும் ஆராய்ந்து இதற்குத் தகவுரை யெழுதிய, சென்னை பிரிஸிடென்ஸி காலேஜ் போதகாசிரியராகிய ஸ்ரீமத் A. சக்கரவர்த்தி நயினார் M.A.L.T.I.E.S. அவர்கட்கு என் மனமார்ந்த வந்தனம் செலுத்துவதற்கு நான் என்றும் கடப்பாடுடையேன்.

இங்ஙனம்.

**வீ. ஆறுமுகன்**

சென்னை பிரிஸிடென்ஸி காலேஜ் தத்துவபோதகாசிரியராகிய

ஸ்ரீமத்:

A. சக்கரவர்த்தி நயினார் M. A. L. T. I. E. S.

அவர்களால் எழுதப்பெற்ற

## தகவுரை

The Tamil public will welcome this edition of a classical Tamil poem called "Nariviruttam" It is supposed to be a youthful experiment at poetic composition made by that illustrious Bard who sang the great Tamil classic "Jivaka Chintamani." This small work may be said to be a rendering in verse of the famous rule of life—"Be in the world, but not of it." It adopts the method of teaching through fable. It opens with the story of a greedy fox; hence the name "Nariviruttam." It contains other stories besides, illustrating the truth that the spiritual life is far higher and richer that all the worldly possessions. He that longeth to have more of this world loseth his own soul. Hence avoid greed and avarice; and accumulate the treasure in Heaven. Again, share what you have with the needy. Restrain the vice of greed and practice the virtue of charity. Rid yourself of "Loba," and fill yourself with the joy of "Dana," This is the message of this little gem in Tamil language.

The edition contains an excellent commentary which is clear and elegant; and exhaustive without being redundant. It manifests not merely a sound scholarship in Tamil literature, but also a thorough grasp of religious traditions and technicalities pertaining to Jainism. I have no doubt that this will have its well-merited appreciation from the students of Tamil literature.

A. CHAKRAVARTHI, M A.L.T.,I.E.S.,
*Professor of Philosophy.*
**Presidency College, Madras.**

இதன் தமிழ் மொழி பெயர்ப்பு:—

நரிவிருத்தம் என்கிற தமிழ் நூலின் இந்தப் பதிப்பைத் தமிழ்ப் பொதுஜனங்கள் பிரியத்துடன் வரவேற்பார்கள் என்பது திண்ணம். தமிழில் பெருங்காவியமாகிய ஜீவக சிந்தாமணியை இயற்றிய சிறப்பிற்றேங்கிய கவிசிரேஷ்டர், இளமையில் தம் கவித்திறமையை விளக்க இந்நூலை இயற்ற முயன்றதாகக் கருதப்படுகிறது. ''உலகிலிரு; ஆனால் அதனுட்கட்டுறதே'' என்கிற சிறப்பான வாழ்க்கை விதியைப் பாடல்கள் வாயிலாக எடுத்தோதுகிறதாகவும் இச்சிறிய நூலைக்கருதலாம். கட்டுரைகளால் உண்மையைப் போதிக்கும் வழியை இந்நூல் மேற்கொண்டுள்ளது. பேராசையுற்ற நரியைப்பற்றி இந்நூல் தொடங்குதலால், இதற்கு 'நரிவிருத்தம்'' என்று பெயர் வாய்ந்தது. ஆத்ம விசாரணையுடன் கூடிய வாழ்க்கையானது எல்லாவித உலக இன்ப வாழ்க்கைகளைக் காட்டிலும் மிக மேன்மையும் சிறப்பும் வாய்ந்ததென்கிற உண்மையை எடுத்துக்காட்டும் இதர கதைகளையும் இந்நூல் கொண்டுள்ளது. இவ்வுலகப்பற்றை எந்த அளவில் ஒருவன் விரும்பு கிறானோ அந்த அளவிலே ஆத்ம சுகத்தை இழக்கிறான். ஆகை யால், பேரவாவையும், பேராசையையும் ஒழித்துப் பேரின்ப வீடடைய முயலுங்கள். அன்றியும், ஏதிலார்க்குத் தம் பொருளைப் பகிர்ந்து கொடுத்துப் பேராசை என்பது தலையெடாது அதனை அடக்கித் தருமம் என்கிற நற்குணத்தைப் பயிலுங்கள். லோபத்தை விலக்கித்தானம் என்கிற இன்பத்தை அனுபவியுங்கள்.'' என்பது தான் இரத்தினம் போன்ற இச்சிறு தமிழ் நூலின் உபதேசமாகும்.

. இந்தப்பதிப்பு தெளிவாயும் ஒழுங்காயும் எழுதப்பெற்ற மேன்மை யான உரையைக் கொண்டுள்ளது; அன்றியும், கூறியது கூறல், மிகைப்படக் கூறல் என்ற குற்றங்களற்ற விரிவுரையுடைய தாயுமிருக் கிறது. தமிழ் நூலில் பூரண திறமை மாத்திரமன்றி, ஜைனமதத்திற் குரிய பழைய சரித்திரங்களையும் சொற்களையும் இவ்வுரையாசிரியர் நன்குணர்ந்தவரென்று இந்தப் பதிப்பினால் நன்குணரலாம். ஆகை யால், தமிழ்ப்பயிலும் மாணவர்கள் இப்பதிப்புரைக்குரிய பெருமையை நன்குணர்ந்து ஏற்றுக் கொள்வார்களென்பதில் எனக்கையமில்லை.

**ஏ. சக்கரவர்த்தி**, எம். ஏ. எல். டி. ஐ. இ. எஸ்.
தத்துவ போதகாசிரியர்,
பிரஸிடென்ஸி காலேஜ், சென்னை.

# நரிவிருத்தம் மூலமும் உரையும்

## காப்பு

1. பானிலா மதிய மூன்று பன்மணி மிடைந்த பாங்காய்
மேனிலா விரித்த போலும் விளங்குமுக் குடையி னீழல்
தேனவாங் குளிர்கொள் பிண்டிச் செல்வன்சே வடியை வாழ்த்தி
யூனவா நரியி னூர்த மூரைசிறி துரைக்க லுற்றேன்.

(இதன் பொருள்) பால் நிலா—பால்போலும் வெண்மைநிறம் பொருந்திய அமுத கிரணங்களைக் கொண்ட, மூன்று மதியம்—மூன்று சந்திரர்கள், பல்மணி—பல இரத்தினங்கள், மிடைந்த—தம்மிடத்தே நெருங்கி யிருக்கின்ற, பாங்காய்—விதமாகி அழகுடன் தோற்றி, மேல்—ஆகாயத்தில், நிலா-ஒளியை, விரித்தபோலும்—பரப்பியது போல், விளங்கும்—பிரகாசிக்கின்ற, முக்குடையின்-மூன்று குடைகளின், நீழல்-நீழலின் கண், தேன்—வண்டுகள், அவாம்—விரும்புகின்ற, குளிர்கொள்-குளிர்ச்சியைக்கொண்ட, பிண்டி-அசோகமரத்தினடியில் வீற்றிருக்கின்ற, செல்வன்-சிறப்பை யுடையவனாகிய அருகக்கடவுளின், சேவடியை - செம்மையாகிய பாதங்களை, வாழ்த்தி—துதித்து, ஊன்-மாமிசத்தை, அவாம்—விரும்புகின்ற, நரியினூர்தம்—நரியினுடைய, உரை—சொற்கள் அடங்கிய கதையில், சிறிது—கொஞ்சம், உரைக்கலுற்றேன்—நான் செய்யுட்களாகக் கூறுகிறேன், என்றவாறு.

(விசேட வுரை) அருகக்கடவுளுக்கு மூன்று குடைகளும், அசோக விருக்ஷ நிழலும் மிக உரித்தானவை யாதலின், அவற்றை இக்காப்புச் செய்யுளில் ஆசிரியர் விசேஷமாக எடுத்துக் கூறினர்; இவை அருகக்கடவுளுக் குரியனவென்பதை, ''பொன்னுநன் மணியு முத்தும் புனைந்த முக்குடை நிழற்ற, மின்னு பூம்பிண்டி நீழல் வீற்றிருந்தவனை வாழ்த்தி,'' என்னும் நிகண்டு [பாயிரம் 1]ச் செய்யுளடிகளானும், ''கொலையிலாழிவலனுயர்த்த குளிர் முக்குடையினிழலோய் நீ,'' என்னும் சிந்தாமணி பதுமையாரிலம்பகம் 78-ஆஞ் செய்யுளீற்றடியானும், ''கடல்வண்ணன் முக்குடைக்கீழ்க் காசின்

றுணர்ந்தான்,'' என்னும் சிந்தாமணி கேமசரியாரிலம்பகம் 57-ஆஞ் செய்யுள் இரண்டாமடியானும், ''திங்கண் மூன்றடுக்கிய திருமுக் குடைக்கிழ்'', என்னுஞ் சிலப்பதிகாரச் செய்யுளடியானும், ''பூமலிய சோகின் புணை நிழலமர்ந்த நான்முகற்றொழுது நன்கியம்புவனெழுத்தே'' ''முச்சகநிழற்று முழுமதி முக்குடை அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே,'' என்னும் நன்னூற் [எழு. 55, சொ. 257] சூத்திரங் களானு முணர்க. முக்குடை :- சந்திராதித்தியம், நித்தியவிநோதம், சகலபாசனம் என்பனவாம்; இவை முத்தாலும் இரத்தினத்தாலும், பொன்னாலும்அமைக்கப்பட்டவை. 'மதியமூன்று பன்மணி மிடைந்த பாங்காய் நிலாவிரித்தபோலும் முக்குடை', என்பது இல்பொருளு வமை. முக்குடைகளிலும் முத்துக்களும், இரத்தினங்களும், பொன்னும் செறிந்திருப்பதுபற்றி, 'மதியமூன்று பன்மணிமிடைந்த பாங்காய்', என்று கூறினர் ஆசிரியர். (க)

## நூல்

2. சென்றுயர் மதிய முட்டுஞ் சிகரமால் வரைகள் சூழ்ந்த
குன்றியிற் குறவர் வாழுங் குறிச்சியுள் ளானோர் வேடன்
கன்றியூன் கிழங்கு காய்தேங் கனியொடு தேன்க டுய்ப்பான்
நன்றியில் செய்கை தம்மால் நாரகர் தம்மோ டொப்பான்.

(இ-ள்) வரைகள் சூழ்ந்த-மூங்கில்களாற் சூழப்பட்டதும், சென்று-மேலேவளர்ந்துபோய், உயர்-உயர்ந்த, மதியம்-சந்திரனில், முட்டும்-மோதுகின்ற, சிகரம்-கொடுமுடியையுடையதுமாகிய, மால்-பெரிய, குன்றியில்-மலைச்சாரலிலே, குறவர்-வேடர்கள், வாழும்-வாழ்கின்ற, குறிச்சி-குறிஞ்சி நிலத்தூரில், உள்ளான்-உள்ளவனுகிய, ஓர் வேடன்-ஒருவேடுவன், கன்றி-கோபித்து, (மிருகம் முதலியவை களைக் கொன்று), ஊன்-அவற்றின் மாமிசத்தையும், கிழங்கு-கிழங்கு களையும், காய்-காய்களையும், தேம்-தித்திப்பாகிய, கனியொடு-பழங் களையும், தேன்கள்-மதுக்களையும்,துய்ப்பான்-புசிப்பவனுயிருந்தவன், (அவன் எத்தகையனெனில்), நன்றியில்-நன்மையில்லாத, செய்கை தம்மால்-தன்னுடைய கொடுஞ்செய்கைகளினுலே, நாரகர் தம்மோடு-நரகலோகவாசிகளுடனே, ஒப்பான்-சமமானவன், எ-று.

(வி-ரை) மலையானது சந்திரமண்டலம் வரை வளர்ந்தது என்பதை விளக்கும்பொருட்டு, 'சென்றுயர் மதியமுட்டுஞ் சிகரமால் குன்றி', என்றனர் ஆசிரியர். மலைச்சாரலில் குறிஞ்சி நிலத்தில்

வேடர்கள் குடியிருக்கும் ஊருக்குக் குறிச்சியென்று பெயர். 'கன்றி', என்பதற்குப்பின், 'மிருகம் முதலியவற்றைக் கொன்று,' என்னுஞ் சொற்கள் இசை யெச்சமாக வருவிக்கப்பட்டன. நரகலோக வாசிகள் மிக்க பாவச்செய்கை யுடையவர்களாதலின், கொலை முதலிய பஞ்சமாபாதகத் தொழில்களையுடைய வேடனும் அவர்களுடன் ஒப்பிடப்பட்டான். 'கன்றி' என்பதற்கு, 'தன் தொழிலில் முதிர்ந்து', எனப்பொருள் கூறினும் பொருந்தும். (உ)

3. வாங்குவிற் கலப்ப வீசி வளைகடன் முகந்து வானம்
பாங்கினு லெழுந்து மின்னிப் படுமழை பொழிந்த காலைத்
தேங்கமழ் சிலம்பின் வாழுங் குறவர்கள் நறவு மாந்தி
வேங்கைபூ விரித்த நன்னாள் விளைவுநாட் செய்ய
லுற்றார்.

(இ-ள்) (இவ்வாறு வேடன் இருப்ப), வேங்கை-வேங்கை மரங்கள், பூவிரித்த-மலர்களை அலர்த்திய, நன்னாள்-நல்லகாலத்திலே, வாங்கு-வளைந்த, வில்-இந்திரவில்லை, கலப்ப-ஆகாயத்திலே பொருந்தும்படி, வீசி-பரப்பி, வானம்-மேகமானது, வளை-பூமியைச் சுற்றியிருக்கின்ற, கடல்-சமுத்திர ஜலத்தை, முகந்து-மொண்டு, பாங்கினால்-அதனால் ஏற்பட்ட அழகுடனே, எழுந்து-மேலுயர்ந்து, மின்னி-மின்னலைச்செய்து, படுமழை-தன்னிடத்தே உண்டாகிய மாரியை, பொழிந்தகாலை-சொரிந்தபோது, தேம்கமழ்-வாசனை பரிமளிக்கின்ற, சிலம்பின்-மலையினிடமாக, வாழும்-ஜீவிக்கின்ற, குறவர்கள்-வேடர்கள், நறவு-கள்ளை, மாந்தி-குடித்து, (மகிழ்ச்சியடைந்து), விளைவுநாள்-தினைப்பயிர் விளைதற்குரிய நல்லநாளிலே செய்யத்தக்க சிறப்பை, செய்யலுற்றார்-செய்தார்கள், எ-று.

(வி-ரை) இந்திரவில்-மழைபெய்யுங்காலத்தில் மேகத்தா லிடப்படும் வானவில். வேங்கைமரம் பூவைத்தருங்காலம் தினைவிதைத்தற்குரிய பருவமாதலால், அக்காலத்தில் மழைபெய்தவுடன் வேடர்கள் கூடித் தினைப்பயிர் செய்வதற்கு நாளிட்டார்கள்; நாட்செய்தலாவது: நல்லநாளில் குறிஞ்சிநிலக் கடவுளுக்குச் சிறப்புச் செய்து தினை நன்றாக விளைய வேண்டுமென்று அவனைப் பணிந்து தினைவித்தும் நாளையுங் குறிப்பிட்டு, தினைவித்தை யெடுத்து வைத்தலாம் 'நாள்' என்பது அதிற் செய்யப்படும் சிறப்பை யுணர்த்திற்று. நாட் குறிப்பிடுதலுக்கு நாட் செய்தலென்றும், முதலில் நல்லநாளில் ஏருழத் தொடங்குவதற்கு ஏரிடுதல் என்றும் சொல்லுதல் பாண்டி நாட்டு வழக்கு. (௩)

4. கருவியா லகிலொ டாரங் கற்புரந் திமிசு நூறி
மருவியாங் குறவர் நீக்கி வளைத்தன காடு மாணப்
பரவியாங் கருவி வீழும் சாரற்பைந் தினையை வித்திக்
குருவியுங் கிளியு மோப்பிக் குறமகள் காக்கு நாளாள்.

(இ-ள்) (அங்ஙனம் நாட்செய்த பின்னர்), மருவி ஆம்-அக் காட்டில் தங்கள் தொழில்களிலே சார்ந்து பழகி விருத்தியடைந்து வரும், குறவர்-அந்த வேடுவர்கள், கருவியால்-கோடரி அரிவாள் முதலிய ஆயுதங்களினாலே, அகிலொடு-அகில் விருக்ஷத்தினோடு, ஆரம்-சந்தனமரம், கற்புரம்-கற்பூரமரம், திமிசு-வேங்கைமரம்(ஆகிய வற்றை), நூறி-வெட்டியழித்து, நீக்கி-விலக்கி, வளைத்தன-வட்ட மாகச் சீர்ப்படுத்தியனவாகிய, காடு-தினைப்புனங்கள், மாண-மாட்சிமைபெற, ஆங்கு-அவ்விடத்திலே, அருவி-மலையருவிகள், பரவி-விசாலித்து, வீழும்-வீழ்ந்து பாய்கின்ற, சாரல்-மலைச்சாரலான இடங்களிலே, பைந்தினையை-பசுமையாகிய தினைவித்தை, வித்தி-விதைக்க, (அது முளைத்துப் பயிராகி விளைந்ததனால்), குருவியும்-குருவிகளையும், கிளியும்-கிளிகளையும், ஓப்பி-(அதில் விழாதபடி) கடிந்து நீக்கி, குறமகள்-வேடுவப்பெண், காக்கும்நாள்-அதனைக் காத்து வருகின்றநாளிலே, எ-று.

(வி-ரை) கருவி-ஆயுதங்கள்; இவை பலவாயினும், சாதி யொருமைபற்றி இவற்றை, 'கருவி' என ஒருமையாகக்கூறினர் ஆசிரியர். 'அகிலொடு,' என்பதில், ஒடு-எண்ணொடு. 'கற்பூரம்,' என்பது குறுக்கல் விகாரம்பெற்று, 'கற்புரம்,' என வந்தது. மருவல்-பொருந்துதல். குறம்-குறி; குறவர்-குறிசொல்வோர்; காட்டில் வாழும் இக் குறவர்கள், நாட்டிலுள்ளாரிடம் வந்து, அவர் விருப்பப்படி தங்கள் குறிஞ்சித் தெய்வத்தை வேண்டி வெறியாட்டயர்ந்து வரும்கால பலன்களைக் கூறித் தானியம் முதலியன பெற்றுச்செல்லுதல் வழக்கம்; இவ்வழக்கம் இப்பொழுதும் நடைபெறுவதைக் காணலாம். புன்செய்ப் பயிர் செய்வதற்கு, காட்டை வெட்டி இடத்தைச் சீர்ப்படுத்துதல் முறைமையாதலின், 'அகிலொடாரங் கற்புரந்திமிசு நூறி நீக்கி வளைத்தன காடு,' என்றார். அருவி-மலையிலிருந்துவரும் ஆறு. சாரல்-மலைப்பக்கம்; மலையைச் சார்ந்தவிடம். பைந்தினை-பண்புச் சொற்றொடர்; 'பசுமை தினை,' என்பது 'பைந்தினை என விகாரப்பட்டு வந்தது. 'வித்த' என்னும் செயவெனெச்சம், 'வித்தி,' எனச் செய்தெனெச்சமாகத் திரிந்து வந்தது. 'ஓம்பி' என்பது, 'ஓப்பி', என வலித்தல் விகாரம் பெற்று வந்தது. ஓம்பல்-பரிகரித்தல், நீக்குதல்,

'கண்ணெனக் குவளையுங் கட்டலோம்பினுர்,' என்பது சிந்தாமணிச் [செய். 51] செய்யுளடி. 'நாளால்,' என்பதில், ஆல்-ஈற்றசை. (௪)

5. விண்ணிஞர் வரையின் ருழ்வில் வேழமென்
றினையை மாந்த
நண்ணிஞன் குறவ னண்ணி நனிவெகுண்
டோடி யேறி
மண்ணிஞர் புற்றி னுச்சி நின்றுவார்
சிலையை வாங்கிக்
கண்ணிஞ லமர்ந்து நோக்கிக் களிற்றின்மத்
தகத்தி னெய்தான்.

(இ-ள்) விண்ணின் ஆர்-வளர்ச்சியிஞலே ஆகாயத்தில் சென்று பொருந்திய, வரையின்-அந்த மலையினது, தாழ்வில்-அடிவாரத்திலே உள்ள, மெல்திணையை-மென்மையாகிய திணைக்கதிரை, வேழம்-ஒரு யானையானது வந்து, மாந்த-தின்ன (அதைக்கண்டு), குறவன்-முற்கூறியவேடன், நண்ணிஞன்-அங்கே வந்து சேர்ந்தான், நண்ணி-அங்ஙனம் சேர்ந்து, நனி-மிகுதியாக, வெகுண்டு-கோபித்து, ஓடி-விரைந்து போய், மண்ணின் ஆர்-பூமியிற் பொருந்தியிருந்த, புற்றின் உச்சி-ஒரு பாம்புப் புற்றின்மேலே, ஏறி-தாவிப்போய், நின்று-நிமிர்ந்து நின்று, வார்-நீண்ட, சிலையை-வில்லை, வாங்கி-வளைத்து, கண்ணிஞல்-தன்னுடைய பார்வையிஞலே, அமர்ந்து நோக்கி-அமைதியாகக் குறிவைத்துப் பார்த்து, களிற்றின்-அந்த யானையினுடைய, மத்தகத்தின்-நெற்றியிலே, எய்தான்-அம்பை ஏவிஞன், எ-று.

(வி-ரை) மலையானது மிகவும் உயர்ந்ததென்பது தோன்ற, 'விண்ணிஞர்வரை,' என்ருர். வரை-மூங்கில்; இஃதாகுபெயராய் மலையை உணர்த்திற்று. மென்திணை-மென்மைதிணையென்னும் பண்புச் சொற்ருெடரின் விகாரம் நண்ணி-விணையெச்சம். நனி-மிகுதியெனப் பொருள்படும் உரிச்சொல். 'மண்ணிஞர்புற்று,' என்பதற்கு, மண்ணுலே உண்டாகிய புற்று எனப் பொருள் கொள்ளினும் அமையும். அமர்தல்-அடங்குதல். 'அமர்ந்து நோக்கி,' என்பதற்கு, 'அவசரப்படாமல் பொறுமையாகக் குறிபார்த்து,' என்பது பொருள். மத்தகம்-மஸ்தகம் என்னும் வடசொல்திரிபு. 'வேழம் திணையை மாந்தக் குறவன் வெகுண்டோடிப் புற்றினுச்சியேறிநின்று,' என இயைத்துக் கொள்க. (௫)

6. விடுகணை நுதலி னுங்க வேழமும் வெகுண்டு மற்ருேர்
தொடுகணை தொடாம லந்தப் புற்றின்மே லோடி யேறிப்
படுகணை யுருவப் பாயப் பாம்பழ லுமிழ்ந்து பொங்கிக்
கொடுவிலுங் கணையும் வீழக் குறவற்கொன் றிட்டதன்றே.

**(இ-ள்)** *விடுகணை-அங்ஙனம்ஏவிய அம்பானது, நுதலில்-அந்த யானையின் நெற்றியில், நுங்க-பாய்ந்துமூழ்க, வேழமும்-அந்த யானையும், வெகுண்டு-கோபித்து, மற்ருேர்-பின்னும்ஒரு, தொடுகணை-தொடுக்கப்பட்ட அம்பை, தொடாமல்-அந்தவேடன் வில்லில் தொடுத்துவிடாதபடி, (அதற்குமுந்தியே), ஓடி-விரைந்து சென்று, அந்தப் புற்றின்மேல் ஏறி-வேடன் நின்ற அந்தப் பாம்பின்புற்றின் மேல் ஏறி, படுகணை-தன்நெற்றியிற் பட்டுத் தங்கியிருந்த அம்பானது, உருவ-அப்புற்றின் ஊடே செல்லும்படி, பாய-மோதியதனுலே, பாம்பு-அந்தப் புற்றிலிருந்த பாம்பானது, பொங்கி-கோபித்தெழுந்து சீறி (கடித்து), அழல் உமிழ்ந்து-விஷாக்கினியைக் கக்கி, கொடுவில் லும்-வளைந்த வில்லும், கணையும்-கையிலிருந்த அம்பும், வீழ-அவன் கையைவிட்டு நீங்கி வீழும்படி, குறவன்-அந்தவேடனை, கொன்றிட்டது-வதைத்துவிட்டுத் தானும் வீழ்ந்து இறந்தது, எ-று.*

**(வி-ரை)** *விடுகணை-வினைத்தொகை 'வேழமும்' என்பதிலுள்ள உம்மை இறந்தது தழுவியது. தொடுகணை-வினைத்தொகை. படுகணை-வினைத்தொகை. உருவ-வினையெச்சம். பாய-வினையெச்சம். அழல்-நெருப்பு; இஃது இங்கே விஷத்தை யுணர்த்திற்று. 'கொடுவில்' என்பதற்கு, 'கொடுமையானவில்,' எனவும் பொருள் கொள்ளலாம். பாம்பு-எழுவாய். கொன்றிட்டது-பயனிலை.* (சூ)

7. நாகத்தைக் குறவ னல்ல பத்திர முருவிக் கொண்டு
பாகத்தைப் படுத்து வீழ்ந்தான் வீழ்தலிற் பசியின்வாடி
மோகத்தாற் சென்று கண்டோர் முழைநரி முழுதுந் தின்பான்
ஆகத்தானமைக வென்ன வாய்ந்தது வகுக்கு மன்றே.

**(இ-ள்)** (அவ்வாறு வேடன் விஷத்தினுலே இறக்கும்போது அந்த நாகத்தின்மேல் கோபமுற்று), குறவன்-அவ்வேடன், நல்ல-நல்லதாகிய, பத்திரம்-வாளை, உருவிக்கொண்டு-உறையினின்றும் வாங்கிக்கொண்டு, நாகத்தை-அந்தப் பாம்பை, பாகத்தைப்படுத்து-இரண்டு துண்டாக்கிவிட்டு, வீழ்ந்தான்-வீழ்ந்து இறந்தான், வீழ்தலின்-

அங்ஙனம் வேடனும் யானையும் பாம்பும் வீழ்ந்து இறந்ததனாலே, ஓர்-ஒரு, முழை-குகையில் வசிக்கின்ற, நரி-நரியானது, பசியின்வாடி-பசியினாலே வாட்டமுற்று, சென்று-அங்குப்போய், கண்டு-வேடன் தேகம் முதலியவற்றைப் பார்த்து, மோகத்தால்-பேராசையினாலே முழுதும் தின்பான்-எல்லாவற்றையும் தின்னும்பொருட்டு, ஆகத்தான்-இச்சரீரங்களினாலே, அமைக-ஆகாரம் நிரம்புவதாக, என்ன-என்று, ஆய்ந்தது-அவற்றைப்பற்றி ஆராய்ந்ததாய், வகுக்கும்-கூறுபடுத்திச் சொல்வதாயிற்று, எ-று.

(வி-ரை) 'பாம்பு அழல் உமிழ்ந்து,கொடுவில்லும் கணையும் வீழக் குறவற் கொன்றிட்டது' என, குறவன் இறந்ததை முன்செய்யுளில் முடித்துக் கூறியிருப்பினும், அவன் இறக்குங்காலத்தில் பாம்பையுங் கொன்று இறந்தானுதலால் அதனை விளக்கிக்காட்டும் பொருட்டு 'நாகத்தைப் பாகத்தைப்படுத்து வீழ்ந்தான்,' என்று இச்செய்யுளிற் கூறினர் ஆசிரியர். நாகம்-புற்றிலிருப்பது; நாகு-புற்று, அம்-வினை முதற்பொருள் விகுதி. 'நாகத்தை பாகத்தை' என்னும் இரண்டாம் வேற்றுமைத்தொகா நிலைத்தொடர் ஈருபேற்றது; 'பசுவைப் பாலைக் கறந்தான்,' என்பதுபோல. நல்ல-நன்மையென்னும் பண்படியாகப் பிறந்த பெயரெச்சம். பசியின் வாடி-மூன்றும் வேற்றுமைத் தொகை; இஃது இன் சாரியைமட்டும் பெற்றுவந்தது. மோகம் என்பது பெண்ணாசையைக் குறிப்பதெனினும்,இங்கு உணவு விருப்பத்தை யுணர்த்திற்று. ஆய்ந்தது-முற்றெச்சம். அமைக-வியங்கோள். (எ)

8 களிறறு திங்சட் காகுங் கானவ
னுகு மேழ்நா
ளொளி றுவா ளெயிற்று நாக முண்டோர்நாட்
கிரையென் றெண்ணி
வெளிறிலாச் சிலையிற் கோத்த நாரிவாய்க்
குதையைக் கவ்விக்
குளிறுபேழ் வாயி லுய்ப்பக் கொடுவிற்கோத்
திட்ட தன்றே.

(இ-ள்) (அங்ஙனம் வகுக்கத் தொடங்கிய அது), களிறு-இந்த யானை, அறுதிங்கட்கு-ஆறுமாதத்திற்கு, ஆகும்-இரையாகும், கானவன்-வேடன், ஏழ்நாள்-ஏழுதினங்களுக்கு, ஆகும்-ஆகாரமாவன், ஒளிறு-பிரகாசிக்கின்ற, வாள்-வாள் போன்ற (கூர்மையாகிய),

எயிறு-பற்களையுடைய, நாகம்-பாம்பு, ஓர்நாட்கு- ஒருதினத்திற்கு, இரை உண்டு-உணவாக இருக்கின்றது, (ஆதலின் இப்பொழுது இந்தவில் நாரியாகிய சிற்றுண்டியைத்தின்போம்; மற்றவைகளைத் தினந்தோறும் சிறிது சிறிதாக உண்டு அதிகநாட்கள் தள்ளுவோம்), என்று எண்ணி-என்று நினைத்து, (பேராசை கொண்டு), வெளிறு இல்லா-குற்றமற்ற, சிலையில்-வில்லிலே, கோத்த-கோக்கப்பட்ட, நாரி-நாணை, வாய்-தன்னிடத்தே கொண்ட, குதையை-விற்கடையி லுள்ள வரையை, கவ்வி-கடித்து, குளிறு-ஓசையிடுகின்ற, பேழ்-பெரிய, வாயில்-தன்னுடையவாயிலே, உய்ப்ப-செலுத்த, (உடனே நாரி அறுந்து வில்லின்வளைவு நிமிர்ந்தபடியினாலே), கொடுவில்-அந்த வளைவாகிய வில்லானது, கோத்திட்டது-அதன் தொண்டையில் பாய்ந்து கோத்துக்கொண்டு அதனைக்கொன்றது, எ-று.

(வி-ரை) 'ஆறு' என்பது, 'அறு' எனக்குறுக்கல் விகாரம் பெற்றது. 'இரை' என்பது மற்றைய இடங்கட்குங் கூட்டப்பட்டது. ''பல்லோர்படர்க்கை முன்னிலை தன்மையிற், செல்லாதாகும் செய்யு மென்முற்றே,'' என்றவிதிபற்றி [நன்னூல், 347], கானவன் என்னும் உயர்திணை ஆண்பாலொருமைப்பெயர், 'ஆகும்,' என்ற முற்றை ஏற்றது. கானவன்-காட்டில் வாசஞ்செய்பவன். 'எயிறு நாகம்' என்பதில், எயிறு, உயிர்த் தொடர்க் குற்றியலுகரமாதலின் ஒற்றிரட்டியது. 'நாரிவாய்க்குதை' என்பதற்கு, 'நாணைத் தன்னிடங் கொண்ட விற்கடைவரை,' என்று பொருள்கொள்க; வாய்-இடம். அன்றே-ஈற்றிசை. (அ)

9. அத்தியு மரவின் வீழ்ந்த வேடனும்
வேடன் கொன்ற
துத்திமா நாகந் தானுங் கிடப்பவிற்
குதையைக் கவ்விச்
செத்தவிந் நரியைப் போலச் செய்பொரு
ளீட்டு வார்கள்
சித்தம்வைத் தறங்கள் செய்யார் தேர்ச்சியின்
மாக்க ளந்தோ.

(இ-ள்) அத்தியும்-வேடனாலே கொல்லப்பட்ட யானையும், அரவின் வீழ்ந்த-பாம்பின் விஷத்தினாலே வீழ்ந்திறந்த, வேடனும்-குறவனும், வேடன் கொன்ற-அவ்வேடனால் கொல்லப்பட்ட, துத்தி-படப்பொறியையுடைய, மா-சிறந்த, நாகந்தானும்-பாம்பும், கிடப்ப-

கீழே கிடப்ப, (இந்த உடல்களைத் தின்னுமல் தன்னுயிர் நிலையென்றெண்ணி வீண் ஆலோசனை செய்து), விற்குதையை—நாரி கோக்கப்பட்டிருந்த வில்நுனியின் வரையை, கவ்வி-கடித்து, (அதனுல்), செத்த-இறந்துபோன, இந்நரியைப்போல-இந்த நரியைப்போலவே, (சிலர்), செய்பொருள்—நிலங்களையும் திரவியங்களையும், ஈட்டுவார்கள்—தேடித் தாமும் அவற்றை அனுபவியாமல் பாதுகாப்புச் செய்து வைத்து விரைவில் அழிந்துபோவார்கள், சித்தம்வைத்து—மனம் பொருந்தி, அறங்கள் செய்யார்-அப்பொருள்களின் மூலம் தருமங்களும் செய்யமாட்டார்கள், (இவர்கள்), அந்தோ—ஐயோ, தேர்ச்சியில்-வாழ்வு அநித்தியமென்னும் தெளிவில்லாத, மாக்கள்-மிருகங்களாவார், எ-று.

(வி-ரை) அத்தி-கையுடையது. வேடன்—வேட்டைத் தொழிலுடையவன். 'நாகந்தானும்' என்பதில், தான்-அசையிடைச்சொல்; இது, முதல் வேற்றுமைச் சொல்லுருபாகவுங் கொள்ளப்படும். செய்பொருள்-உம்மைத்தொகை; செய்யும்பொருளும் என விரியும்; இதற்கு, 'விருத்திசெய்யத்தக்க பொருள்' எனக் கூறினும் பொருந்தும். 'ஈட்டுவார்கள்' என்பதற்குப்பின், 'தாமும் அவற்றை அனுபவியாமல் பாதுகாப்புச்செய்து வைத்து விரைவில் அழிந்துபோவார்கள்' என்ற சொற்கள் வருவித்து உரைக்கப்பட்டன. வாழ்வு நிலையற்றதென்பதை யுணராதவர், அறிவில்லாத மிருகங்களோடு ஒப்பார் ஆதலின், 'இவரை, தேர்ச்சியில் மாக்கள்', என்ருர். (கூ)

10\. சுற்றினுர் வில்லின் வீழ்ந்த சூழ்ச்சியி
 னரியைப் போலப்
பற்றினுர் பெரிதும் வவ்விப் பகுத்துணு
 தீட்டி னுர்கள்
மற்றுணு வெறுக்கை தன்னை மன்னரும்
 பிறரும் வவ்வத்
தெற்றென வெளிறு நீரார் செல்வ மு
 மிழப்ப ரன்றே.

(இ-ள்) சுற்றின் ஆர்—கட்டினுலே வலிமை நிறைந்த, வில்லின்-வில் நிமிர்ந்ததினுலே, வீழ்ந்த-இங்ஙனம் வீழ்ந்திறந்த, சூழ்ச்சியில்-அறிவில்லாத, நரியைப்போல-நரியினைப்போல, பற்றினுர்—உலகப்பொருளில் மிக்க ஆசையுடையவராய், பெரிதும்—மிகவும், வவ்வி-பிறரிடம் இருந்து அப்பொருள்களை மோசத்தால் கைப்பற்றி, பகுத்து

உண்ணாது-தம்மிடம் இருப்பவற்றைத் தம்மைச்சார்ந்தவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்துத்தாமும் உண்ணாமல், ஈட்டினார்கள்-பலவழியிலும் பொருளைச் சம்பாதித்தவர்கள், மற்று-பின்பு, (தங்களிடமுள்ள), உணா-உணவாகும் தானியங்களையும், வெறுக்கை தன்னை-தனத்தையும், மன்னரும்-குறும்பர்களாகிய அரசர்களும், பிறரும்-திருடர் முதலிய மற்றையரும், வவ்வ-அபகரிக்க, தெற்றென-நிச்சயமாக, வெளிறும் நீரார்-அறிவற்ற தன்மையராய், செல்வமும்-ஐசுவரியத்தையும், இழப்பர்-கைவிடுவார்கள், எ-று

(வி-ரை) ''இங்கே அகப்பட்ட உணவைப் பகுத்து உண்ணாது பேராசைகொண்டு தானும் உண்ணாமல் வில்லினால் இறந்த இந்நரியைப் போலவே, பொருளைக் கெட்ட வழியில் தேடி, தாமும் அனுபவியாமல் பிறருக்கும் உதவாமல் புதைத்துவைப்பவர், அதனைப் பிறர் கைப்பற்றுமாறு இழந்து ஒரு பயனும் இல்லாமற் சாவார்,'' என்பது இதன் கருத்து. சுற்று-கட்டு. சூழ்ச்சி-அறிவு. பற்றினார்-முற்றெச்சம். உணாவெறுக்கை-உம்மைத்தொகை. வெளிறும் நீர்மை-வெள்ளையாந் தன்மை; அதாவது, மதியின்மை. செல்வம்-சிறப்பு; இதிலுள்ள உம்மை அசைநிலை பொருளது * (௧௦)

11. குடற்படு முடையைக் கண்டு குறுநரி
தின்று மான்றேர்க்
கடற்படை யியக்கங் கண்டே கள்ளத்தாற்
கிடப்ப யாருந்
திடற்பகை யின்மை யாலே செவிகொய்வான்
வால்கொய் வானாய்
உடற்புறம் போர்த்த புன்றோ லுரித்திட்டங்
கொருவன் கொன்றான்.

(இ-ள்) குறுநரி-ஒரு குள்ளநரியானது, (ஓரிடத்தில்), குடற்படும்-குடலில் உண்டாகிய, முடையை-மாமிசத்தை, கண்டு-கிடக்கப் பார்த்து, தின்று-உட்கொண்டு, (சமீபத்தில்), மான்தேர்-குதிரைகளும் தேர்களும் நிறைந்த கடல்-சமுத்திரம் போன்ற, படையியக்கங்கண்டு-சேனைசெல்லும் தோற்றத்தைப் பார்த்து, ('இங்கே இந்தப் படைகள் செல்வதனாலே சண்டை உண்டாகும்; அவ்வாறு உண்டாயின் நமக்கு வேண்டிய மாமிச உணவு அகப்படும்; நாம் இங்கே உலவினால் நம்மை எவரும் அடித்துத்துரத்துவார்கள்; நாம் இறந்து

*இக்கதையை ஸ்ரீபுராணத்தில் (பக். 546) காண்க.

போலுற்போல் கிடந்தால் நம்மை ஒருவரும் கவனிக்கமாட்டார்கள்; போர்முடிந்து எல்லோரும் சென்றபின்னர் நாம் எழுந்து மாமிசங்களை வயிறுர உண்ணலாம்; ஆதலின், இப்போர் முடியும்வரை இங்கே செத்தபிணம் போற் கிடப்போம்' என்று), கள்ளத்தால்-வஞ்சனை யினுலே, கிடப்ப-அங்கே இறந்தது போற் கிடக்க, (அச்சேனையானது அங்கே போர்செய்தலின்றி வேருேர் இடத்திற்குப் போய் விட்டது; அங்ஙனம் அது போய்விட), யாரும்-எவரும், திடன்-வலிமைபொருந் திய, பகையின்மையாலே-போர்செய்தல் இல்லாமையினுலே, அங்கு ஒருவன்-அவ்விடத்திற் சென்ற வழிப்போக்கன்ஒருவன், (அங்ஙனம் செத்ததுபோலக் கிடந்த நரியைப்பார்த்து, 'இங்கே ஒருநரி இறந்து கிடக்கின்றது; இதன் செவியும் வாலும் தோலும் நமக்கு ஏதேனும் ஒரு காரியத்திற்கு உதவும்,' என்று கருதி), செவிகொய்வான்-அதன் காதை அறுப்பவனும், வால்கொய்வான்-வாலைத்துண்டிப்பவனும், ஆய்-ஆகி, (அதாவது: செவியையும் வாலையும் அறுத்து), உடற்புறம்-தேகத்தின் வெளிப்பக்கத்திலே, போர்த்த-மூடிய, புன்தோல்-அற்ப மாகிய அதன்தோலையும், உரித்திட்டு-உரித்தெடுத்து, கொன்றுன்-அந்த நரியைக்கொன்றுன், (ஆதலின் இந்த நரியைப்போல பேராசை யால் வீண் சூழ்ச்சி செய்வோர் அபாயத்திற்குள்ளாவர்), எ-று:

**(வி-ரை)** 'கிடைத்ததுகொண்டு மகிழ்ந்து நன் மார்க்கத்தைத் தேடுதலை யொழித்து, மேலும் பேராசை கொண்டுபொருள்தேட வீண்சூழ்ச்சி செய்வார், குடல்மாமிசத்தைத் தின்று மேலும் ஆகாரந் தேடப்பேராசைகொண்டு செத்தது போற்கிடந்து உயிரிழந்த நரியைப் போல அழிவார்', என்பது இச்செய்யுட்கருத்து. இதிற்கூறிய நரியின் கதையாவது: ''ஓரிடத்தில் குடல்மாமிசத்தைக்கண்டு தின்று கொண் டிருந்த ஒருநரி, பக்கத்தில் ஒருசேனை செல்லக்கண்டு, 'இங்கே சேனை செல்வதால் யுத்தம் நிகழும்; அங்ஙனமாயின் நமக்கு மிக்க ஊன் அகப்படும்; போர்முடியும்வரை நாம் இவ்விடத்தி லிருக்க வேண்டும்; நாம் இப்படியே திரிந்தால் நம்மை எவரும் அடித்துத் துரத்துவார்கள்; செத்தபிணம்போற் கிடந்தால் ஒருவரும் கவனிக்க மாட்டார்கள்; பின்னர் எழுந்து சண்டையில்மாய்ந்த பிணங்களைத் தின்னலாம்,' என்று கருதி அங்கே இறந்ததுபோற் கிடந்தது; அதன் உத்தேசப்படி அங்கே சண்டையொன்றும் நிகழவில்லை. சேனை வேற்றிடம் சென்றுவிட்டது; அச்சமயத்தில் வழிப்போக்கனெருவன் அங்கு வந்து அந்நரியைக்கண்டு அஃது இறந்தது என்று நினைத்து, 'இதன் செவிமுதலியவை நமக்கு எதற்கேனும் உபயோகப்படும்,' என்று தீர்மானித்து உடனே அதன் செவியையும் வாலையுங்கொய்து தோலையும் உரித்துச்சென்றுன். அந்நரி உயிர் துறந்தது.'' என்பதாம் இச்செய்யுள் பிறிதுமொழிதலாக அமைந்தது. 'இந்நரியைப்போல சூழ்ச்சிசெய்வார் அழிவர்,'- என்னும் உபமேயம் இசையெச்சமாக

வருவித்துரைக்கப்பட்டது. குறுநரி-பண்புத்தொகை. தின்று-வினையெச்சம். கடற்படை-உவமைத்தொகை. கிடப்ப - வினையெச்சம். கொய்வான்-முற்றெச்சம். ஒருவன்-எழுவாய்; கொன்றான்-பயனிலை. (கக)

12. நாட்டினு முரைக்கப் பட்ட முழைநரி
யனைய நீரார்
ஈட்டிய பொருள்க டம்மை யீதலுந்
துய்த்த றானும்
மாட்டில ரகழ்ந்து பார்க்கீழ் நிலங்கொள
வைப்பர் மாதோ
பாட்டரு மக்கள் யாக்கைப் பயன்கொளாக்
கழிப்ப ரன்றே.

(இ-ள்) நாட்டில்-இந்த நாட்டின்கண்ணே, நாம் உரைக்கப்பட்ட-நம்மால் சொல்லப்பட்ட, முழை—குகையில் வாசஞ்செய்யும், நரி அனைய-நரியை நிகர்த்த, நீரார்-தன்மையை உடையவர்கள், ஈட்டிய-சம்பாதித்த, பொருள்கள் தம்மை-திரவியங்களை, ஈதலும்-பிறர்க்குக் கொடுத்தலும், துய்த்தல் தானும்-தாம் அனுபவித்தலும், மாட்டிலர் - பொருந்திச்செய்யார்கள், பார்க் கீழ் - பூமியின் கீழ், அகழ்ந்து-தோண்டி, நிலம்கொள்ள - அந்தப்பூமியானது தனக்குச் சொந்தமாகக்கொள்ளும்படி, வைப்பர்-அப்பொருள்களைப் புதைத்து வைப்பவராய், பாட்டரும்-புகழ்தற்கரிய, மக்கள்யாக்கை-மானிட தேகத்திற்குரிய, பயன்கொளா - பிரயோசனத்தை அடையாமல், கழிப்பர்—வீணே தம் ஆயுளைக் கழிப்பார்கள், எ-று.

(வி-ரை) "ஈட்டிய பொருள் கடம்மை யீதலுந் துய்த்தறானு மாட்டிலர்," என்றதால், 'முழைநரி யனையநீரார்,' என்றது முன்விற்குதைகவ்வி இறந்த நரியையே குறிக்கும் ஒருவன் சம்பாதித்த பொருளை நல்வழியிற் செலவிட்டு அறத்தைத் தேடவேண்டும்; தான் அனுபவித்துச் சுகமடையவேண்டும்; இவைதாம் தேகத்தோடுகூடிய ஜன்மமெடுத்ததற்குரிய பயன். அப்பொருளை இவ்விருவகையிலும் உபயோகிக்காமல் அவன் புதைத்துவைப்பானாகில் அந்த மானிடஜன்மம் எடுத்ததால் ஒருபயனும் இன்றாம். இதுபற்றியே இத்தகையரை, 'யாக்கைப்பயன்கொளாக் கழிப்பர்,' என்றார் ஆசிரியர். நம்மால் என்னும் மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவானது, நாம் என முதல் வேற்றுமைக் கருத்தாவாக மயங்கிவந்தது. நீரார்-எழுவாய்; இது, வைப்பர்,

கழிப்பர் என்னும் இரண்டு பயனிலைகளைக்கொண்டது. மாட்டிலர்—எதிர்மறைக்குறிப்பு வினைமுற்று. அகழ்ந்து—வினையெச்சம். மாதோ, அன்றே என்பவை ஈற்றசைகள். பாடு—புகழ். (கஉ)

13. உண்டலோ டுறங்க லச்ச மிணைதலு மொருங்கு நாடின்
மண்டிணி யுலகின்வாழு மாக்களும் விலங்கு மொப்பாம்
கண்டதொன் றுண்டு நல்ல வறங்களைப் பிடித்த நீரார்
பண்டித ரேனை மாக்கள் பசுவினுங் கடைய ரன்றே.

**(இ-ள்)** திணி—வலிமைபொருந்திய, மண் உலகின் - இம்மண்ணுலகத்திலே, உண்டலோடு-நல்ல ஆகாரங்களை உண்ணுதலும், உறங்கல்-நித்திரை செய்தலும், அச்சம்-பயப்படுதலும், இணைதலும்-மருவுதலும், ஒருங்கு நாட்டின்—ஒருசேர ஆராய்ந்து பார்த்தால், (இவற்றை அனுபவித்தலிலே), வாழும்-இங்கு வாழுகின்ற, மாக்களும்-மனிதர்களும், விலங்கும்-மிருகங்களும், ஒப்பாம்-சமமாம், (ஆனாலும் இவற்றிலே நாம் விசேஷமாக), கண்டது-ஆராய்ந்து அறிந்தது, ஒன்றுண்டு-ஒன்றுளது, (அதுயாதென்றால்), நல்ல—நன்மையாகிய, அறங்களை-தர்மங்களை, பிடித்த-பற்றிய, நீரார்-தன்மையுடையவர்கள், பண்டிதர்-மனிதர்களுக்குள்ளே வித்தைகளை அறிந்த அறிவுமுடையவராவர், ஏனைமாக்கள்-மற்றைய மனிதர்கள், பசுவினும்-ஐந்தறிவுள்ள மாட்டைக் காட்டினும், கடையர்-கடைப்பட்டவராவர், எ-று.

**(வி-ரை)** உலகத்தில் உண்ணல், உறங்கல், பயப்படுதல், மருவுதல், ஆகிய தொழில்கள் மிருகங்களுக்கும் உண்டு மனிதர்க்கும் உண்டு; இவற்றை ஆராயுமிடத்து மனிதரும் மிருகங்களும் ஒரே தன்மையர் ஆவர்; அப்படியிருப்ப மனிதர் எதனால் உயர்த்திக்கூறப் படுகின்றார்களெனில், ஐயறிவுடனே ஆறும் அறிவாகிய மனமும் உடைத்தாயிருத்தல் பற்றியே; மனத்தைக்கொண்டு நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து நன்மைகளைச் செய்தால் மாத்திரந்தான் ஒருவன் ஆறறிவுடைய மனிதனென்று சொல்லப்படுவான்; அங்ஙனஞ்செய்யாதவன் பகுத்தறிவற்ற ஐயறிவுயிராகிய மிருகமேயாவன்; இதுபற்றியே ஆசிரியர், ''அறங்களைப்பிடித்த நீரார் பண்டிதர் ஏனைமாக்கள் பசுவினுங்கடையர்,'' என்று கூறினர். பகுத்தறிவற்றவர்கள் மிருகத்தன்மை யுடையவர்களென்பதையும், பகுத்தறிவாகிற ஆறும் அறிவும் உள்ளவர்களே மக்கள் பண்புடையார் என்பதையும், ''மாவு மாக்களும் ஐயறிவுயிரே,'' ''மக்கள் தாமே ஆறறிவுயிரே,'' என்னும் **தொல்காப்பியச்** சூத்திரங்களான் (மரபியல், 32, 33)

உணர்க. பகுத்தறிவில்லார் மிருகங்களை நிகர்ப்பர் என்பதை உணர்த்தற்கே அவர்களை, 'மாக்கள்,' என்றார். (கரு)

14. கடிமணக் கோல மாதர் காளைக்குக்
காட்டி மீள்வர்
நடுவிடப் பட்ட தெல்லா நயப்புறக்
கேட்டு நாய்கன்
கெடியெனக் கூறி யாங்கே யுணர்தலிற்
கேட்டு வந்த
வுடையது மொருங்கு கொண்டே விடையமுங்
கடிவித் திட்டான்.

(இ-ள்) நாய்கன் - வணிகனாகிய, காளைக்கு - சுகுமாரன் என்னும் குமாரனுக்கு, (அவன் துறவியாய்ப் போய்விடுவானென்று ஒரு முனிவர் சொல்ல அவனுடைய தாய் கேள்விப்பட்டு அங்ஙனம் போகாதிருக்கும் வண்ணம் அழகுள்ள முப்பத்திரண்டு மாதர்களை மணம் செய்துவைக்க), மாதர்—அப்பெண்கள், கடி - வாசனைமிகுந்த, மணக்கோலம்—கல்யாணக்கோலத்தை, காட்டி—தினந்தோறுகாட்டி அவனைக்கலந்து அவன்மனதை மகிழச்செய்து, மீள்வர்-திரும்பிச் செல்வாராயினர், (இப்படிச் செல்கின்ற காலத்திலே ஒருநாள் தபோதனர் ஒருவர் அவன் வசிக்கும் மாளிகைக்கருகிலுள்ள ஜினாலயத்தி லிருந்து நடுராத்திரியில் அவனுக்குக் கேட்கும்படி தேவமானுஷ்ய நரகலோக ஸ்திதிகளையும், பத்மகுல்மமென்னும் விமானவிசே ஷத்தையும் உரைத்தனர்; அவ்வாறு சொல்லும்போது), நடுவு-மேற் கூறிய மூவுலகங்களிலும் மத்தியில் உள்ளதாகிய இம்மானுஷ்யலோ கத்தால், இடப்பட்டதெல்லாம்-கொடுக்கப்பட்ட மாயாசம்பந்தமான காரியத்தையெல்லாம், நயப்புஉற-நன்மையாக, கேட்டு-கேள்விப் பட்டு, நாய்கன்-அந்தவணிகன், கெடியென - இந்த உலகவாழ் வானது பயமுடையதாம் என்று, கூறியாங்கே—முனிவர் சொல்லிய படியே, உணர்தலின்—அறிந்ததனாலே, கேட்டுவந்த—தான் இவ்விஷ யத்தோடு அவர் கூறக் காதிற்கேட்டுவந்ததாகிய, உடையதும்— தனக்கு நிலையான உடைமைப்பொருளாகிய ஞானத்தையும், ஒருங்கு கொண்டு - ஒருமிக்க மனதிற்கொண்டு, விடையமும்-நிலையற்றதாகிய உலகப்பொருளையும், கடிவித்திட்டான் - மனத்தால் நீக்குவித்துத் துறவுபூண்டு நற்கதியடைந்தான், (ஆதலால் அறிவுடையார் நிலை யற்ற இவ்வுலகப் பொருள்களைத்தள்ளி நிலைத்த பொருளாகிய ஞானத்தைத் தேடவேண்டும்), எ—று.

(வி-ரை) இச்செய்யுளிலடங்கிய கதையானது சுகுமாரன் என்னும் வைசியன் கதையையே குறிக்கின்றதாதலின், 'நாய்கன்,' என்பதற்குச், 'சுகுமாரன்,' என்று பொருளுரைக்கப்பட்டது. சுகுமாரன் கதையாவது: ''உஞ்சயினியென்னும் நகரத்திலே, இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என்னும் மூவகைவணிகருள், இப்பர் குடியிற் பிறந்து இராஜசிரேஷ்டியாயிருந்த, ஸ்ரீ: தத்தனென்பான், யசோபத்ரை யென்னும் பெண்ணை மணந்து நெடுங்காலம் புத்திரனின்றி யிருந்து, பிறகு சுகுமாரன் என்னும் ஒரு புத்திரனைப்பெற்று வைத்து விட்டுத் துறவுபூண்டு தீக்ஷை அடைந்தனன். அங்ஙனமாகவே, யசோபத்ரை, தன் புதல்வனாகிய சுகுமாரனுடன் ஒரு முனிவரிடம் சென்று தனக்கு நன்மை பகர்வாரென்று அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினாள். அம்முனிவர் அவளை நோக்கி, 'உன்னுடைய புதல்வன் சீக்கிரம் துறவியாவான்,' என்றனர். யசோபத்ரை அதைக் கேட்டு விசனித்தவளாய் வீட்டிற்குவந்து, தன் மகன் துறவியாய்ப் போவதற்கு அஞ்சி, அவன் அங்ஙனம் துறப்பதற்கு ஏதுவான ஸம்சார துக்கம் அவனுக்குத் தோன்றாதிருக்கும்படி சகல சுகபோக பொருள்களையும் வீட்டில் நிறைத்து, தேவமாதரை நிகர்த்த முப்பத்திரண்டு பெண்களை அவனுக்கு மணஞ்செய்வித்து, அவனை அவர்களோடு கூடிச்சுகிக்கும்படி செய்தனள். அந்த மாதரும் தினந்தோறும் புது மணப் பெண்களைப்போலவே அலங்கரித்துக்கொண்டு அவனைக் கூடி அவன் மனதிற்கு மிக்க ஆனந்தத்தை உண்டாக்கிக்கொண்டு வந்தார்கள். அவன் உலகபோகத்தில் மூழ்கியிருந்தான். இப்படி இருக்குங் காலத்தில் அவனுக்கு ஞானம்பெறும் பக்குவம் வந்தது. அதை யுணர்ந்து ஒரு முனிவர், ஓரிரவில் நடுச்சாமத்தில் அவன் வசித்த மாளிகைக்கு அருகிலுள்ள ஜினாலயத்தில் தங்கி அவனுக்குக் கேட்கும்படி, தேவமானுஷ்ய நரகலோக தன்மைகளைக் கூறிப் பின்னர், பத்மகுல்ம மென்னும் விமான விஷேத்தையும் உரைத்தனர். சுகுமாரன் முந்தின ஜென்மத்தில் அந்த விமானத்தில் இருந்தவனாதலால், ஜாதி ஸ்மரணையடைந்து, உடனே ஸம்ஸாரத்தில் வெறுப்புற்று, வாயில்காப்போரும் அறியாமல் வீட்டைவிட்டு வெளியேறிப் போய் அம்முனிவரைக்கண்டு பணிந்து அவர் உபதேசத்தால் துறவடைந்தனன்'' என்பதாம். இக் கதை ஜீவசம்போதனை [செய்யுள் 284-304] கூறப்பட்டுள்ளது. 'உடையது,' என்பதற்கு, 'சுகுமாரன் பூர்வஜன்மத்தில் தனக்குடைத்தானதாக பெற்றிருந்த பத்மகுல்ம,' மென்று பொருளுரைப்பினும் அமையும். கடிமணம்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. 'மாதர், நாய்கனாகிய காளைக்கு மணக்கோலங் காட்டி மீள்வர்' எனக்கூட்டி முடிக்க. மணம்-பண்பாகு பெயராய் அதனையுடைய கலியாணத்தை யுணர்த்தும். காட்டி-வினையெச்சம். கேட்டு-வினையெச்சம். கெடி-பயம். உடையது-வினையாலணையும் பெயர். 'விடையமும்,' என்பதிலுள்ள உம்மை இறந்தது தழுவிய

எச்சப்பொருளது. 'உடையதும்,' என்பதின் உம்மை எதிரது தழுவியது. நாய்கன்-எழுவாய். கடிவித்திட்டான்–பயனிலை. (கச)

15\. இளமையும் வனப்பு நில்லா வின்பமு நின்ற வல்ல
வளமையும் வலிது நில்லா வாழ்வுநா ணின்ற வல்ல
களமக ணேச நில்லா கைப்பொருள் கள்வர் கொள்வார்
அளவிலா வறத்தின் மிக்க தியாதுமற் றில்லை யன்றே.

(இ-ள்) (உலகத்தில் மானிடர்க்கு), இளமையும்-இளமைப் பருவமும், வனப்பும்-அழகும், நில்லா-நிலைநிற்கமாட்டா, இன்பமும்-சுகங்களும், நின்ற அல்ல–நிலைபெற்றனவல்ல, வளமையும்-செல்வத்தின் வளப்பமும், வலிதும்-தேகவலிமையும், நில்லா-நிலைபெறமாட்டா, வாழ்வுநாள்-வாழ்கின்ற நாட்களும், நின்றவல்ல-நிலைபெற்றனவல்ல, களமகள்-மனைவியின், நேசம்-பலவிதமான நேயங்களும், நில்லா-நிலைநிற்கமாட்டா, கைப்பொருள்-கையிலுள்ள திரவியத்தை, கள்வர் கொள்வர்-திருடர் அபகரிப்பார்கள், (ஆதலின்), அளவிலா-கணக்கில்லாத, அறத்தின் மிக்கது-தருமத்தைக்காட்டிலும் அதிகரித்து நிலைபெற்றது, மற்று-வேறே, யாதும் இல்லை-எதுவும் இல்லை, (ஆதலின், அறத்தைத் தேடவேண்டும்), எ-று.

(வி-ரை) 'மனிதர்க்கு இளமை முதலியவைகள் நிலைநிற்கமாட்டா; தருமமொன்றே நிலைத்து நிற்பது; ஆதலின் நிலையற்றவற்றைச் சதமென்று எண்ணாமல், நிலைத்த பொருளாகிய அறத்தைத் தேடவேண்டு,' மென்பது இச்செய்யுட் கருத்து. இன்பம், நாள், நேசம் என்பன பன்மைகுறித்த வொருமைச்சொற்கள். ''ஒருமையிற்பன்மையும் பன்மையிெனொருமையு, மோரிடம் பிறவிடந் தழுவலுமுளவே,'' [நன்னூல் 379] என்பதுபற்றி வந்தன. 'நில்லா' என்பது எதிர்மறைக் முறிப்பு வினைமுற்று. நின்றவல்ல-எதிர்மறுத்தற் பொருளில் வந்த தெரிநிலை. வினைமுற்று. அன்றே-ஈற்றசை. (கரு)

16\. நின்றன வல்ல வாண ணிதியமு
நின்ற வல்ல
சென்றுசென் றணுகி நாளுஞ் சினவரன்
சொன்ன நன்னூ
லொன்றிய மனத்த ராகி யூதியங்
கொள்வர் நல்லோர்
அன்றெனி லதனைக் காண வாதனே
போலு மன்றே.

**(இ-ள்)** (இன்னும்), வாணுள்—வாழுகின்ற நாள்களும், நின் றனவல்ல-நிலைபெற்றனவல்ல, நிதியமும்-திரவியங்களும், நின்ற வல்ல-நிலைத்தனவல்ல, (ஆதலின் இவற்றின் நிலைமையை உணர்ந்த), நல்லோர்-நல்லறிவாளர்கள், நாளும்-தினந்தோறும், சினவரன்—அரு கக்கடவுள், சொன்ன-கூறிய, நன்னூல்-நல்லசாஸ்திரங்கள், ஒன்றிய-பொருந்திய, மனத்தராகி-மனத்தினை யுடையவராகி, சென்று சென்று-அவற்றின்வழியிலே போய்ப்போய், அணுகி-சார்ந்து, ஊதி யம்-ஞானமாகியபயனை, கொள்வர்-அடைவார்கள், (ஒருவன்), அன் றெனில்-இங்ஙனம் நல்வழியில் செல்வதில்லையாணுல், அதனை-அந்த ஞானமாகிய பயனை, காணு-அறியாத, ஆதனேபோலும்-மூடனை நிகர்ப்பான், எ-று.

**(வி-ரை)** 'மனிதர்க்கு ஆயுளும், செல்வமும் நிலைபெற்றன வல்ல; ஆதலால், உண்மையுணர்ந்த நல்லோர் இவற்றை நிலையென்று எண்ணுமல், இறைவன்சொன்ன நூன்முறைப்படி யொழுகி ஞானத்தையடைவர்; அதன்வழி நடவாதவன், ஞானமற்ற மூடனை நிகர்ப்பான்,' என்பது இதன்கருத்து; ஆகவே, எல்லோரும் அருகத் பரமேஷ்டி சொன்ன நீதிப்படி நடந்து ஞானம் பெறவேண்டுமென்பது இதனுற் பெறப்படும். 'வாழ்நாள்' என்பது, 'வாணுள்,' என்ருயது. சினவரன்சொன்னநன்னூல்-அறநூல்கள். நூல்களை, நூல் என்றது சாதியொருமைப்பற்றி யென்க. ஒன்றிய-பெயரெச்சம். ஆகி-வினை யெச்சம்; இது, 'கொள்வர்' என்ற முற்ருேடுமுடியும். நல்லோர்-எழுவாய், கொள்வர்-பயனிலை, ஊதியம்-செயப்படு பொருள். 'போலும்,' என்றபயனிலைக்கேற்ப, 'ஒருவன்,' என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது. (கசா)

17. கேத்திர நன்ற தாகிற் கேடின்றி
யிட்ட வித்து
வாய்த்ததா வெழுந்து நன்ருய் விளைதலைக்
காட்டு மாபோல்
ஏத்தருந் தவத்தின் மிக்க வெல்லையில்
குணத்தி ஞர்க்குப்
பாத்திர தான மீந்தாற் பயனுமற்
றதனை யற்றே.

(இ-ள்) கேத்திரம்-நிலமானது, நன்றதாகில்-நன்மையுடையதாயிருக்குமேயானல், இட்டவித்து-அதில்விதைக்கப்பட்ட விதையானது, கேடு இன்றி-கெடுதல் இல்லாமல், வாய்த்ததா-பலித்ததாக, எழுந்து-முளைத்துயர்ந்து, நன்ருய்-நன்மையாக, விளைதலை-பயனுண்டாதலை, காட்டுமாபோல்-காட்டுகின்றதன்மைபோல, ஏத்தரும்-துதித்தற்கு அரிய, தவத்தின்மிக்க-தவத்திஞலேமிகுந்த, எல்லையில்-அளவற்ற, குணத்திஞர்க்கு-நற்குணங்களையுடைய தபசிகளுக்கு, பாத்திரதானம் ஈந்தால்-சற்பாத்திரத்தில் (அதாவது: தகுதியானவிடத்தில்), நவபுண்ணியக்கிரமத்தால் இடக்கூடிய நால்வகைத் தானங்களையுங் கொடுத்தால், பயனும்-அத்தானத்தால் உண்டாம் பிரயோசனமும், அதனையற்று-அந்நன்னில விளைவின் அளவேயாம், (ஆதலால் தானத்தையே மிகுதியாகச் செய்யவேண்டும்), எ-று.

(வி-ரை) 'நன்னிலத்திட்டவித்து நற்பயனைத் தருதல்போல சற்பாத்திரங்களாகிய தபோதனர்க்குத் தானஞ்செய்தால் அஃது அந்நிலத்தைப்போலவே நற்பயனைத்தரும். சற்பாத்திரதானத்தை நவபுண்ணியக்கிரமத்தால் அவசியம் செய்தல்வேண்டும்'' என்பது இதன் கருத்து. இங்ஙனம் உத்தமர்க்கு இடும்தானம் சிறப்புடையதென்பதை இச்செய்யுளிற்காட்டிய உவமை முதலியவற்றுடனே, **சீவகசிந்தாமணி** முத்தியிலம்பகத்தில் இவ்வாசிரியரே **உ௨ரு**-முதல், **உ௩0**-வரையுள்ள செய்யுட்களில் விளக்கமாகக் கூறியிருத்தல் காண்க. நால்வகைத்தானங் களாவன:-சாஸ்திரதானம், ஆகாரதானம், அவுஷததானம், அபயதானம் என்பனவாம். இந்நான்குமே நால்வகைத்தானங்களா மென்பதை இந்நான்கிற்கும் உதாரணமாக எழுதப்பட்டிருக்கும் புண்ணியாஸ்ரவ கதைகளால் உணர்க. 'பாத்திர தானம்' என்பதற்கு, 'சற்பாத்திரங்களிலிடுந்தானம்,' என்பது பொருள். பாத்திரம்-தானஞ்செய்யத்தக்க நல்லிடம்; இது, 'கேந்திர நன்றதாயின்,' என்ற உவமையானே உணரப்படும். பாத்திரம் என்பது, தகுதியான இடமெனப் பொருள்படினும் தகுதியுடைய பெரியோரை உணர்த்தும். இங்ஙனம் உத்தமர்க்கே நவபுண்ணியக் கிரமத்தால் தானஞ்செய்ய வேண்டுமென்பதை, ''உத்தமர்க் கொன்பது புண்ணியத்தாலீவ, துத்தமதானமெனல்,'' என்னும் **அருங்கலச்செப்பு** [137]ச் செய்யுளானு முணர்க. நவபுண்ணியங்களாவன: எதிர்கொள்ளல், அடியில் வீழ்ந்து வணங்கல், துதித்தல், அமர்தற்குத் தூமணி நிலங்காட்டல், பாதங்களைச் சுத்திசெய்தல், அளவிற்கு அருச்சனைபுரிதல், மனந்தூயராதல், வாக்குத் தூயராதல், மெய்தூயராதல் என்பனவாம். கேத்திரம்-க்ஷேத்திரம் என்னும் வடமொழித்திரிபு; க்ஷேத்திரம்-தலம். வித்து-எழுவாய், காட்டும்-பயனிலை. விளைதல்-செயப்படுபொருள். பயன்-எழுவாய். அற்று-பயனிலை.

(கஎ)

18. ஓக்கத்தான் மதிய முட்டு முறுதவ
னகரி முன்னே
யாக்கையா லழகி தாயோர் பொன்மயி
லாடக் கண்டு
தோக்கையைப் பற்ற லோடுந் தொட்டவன்
காய நூக்கிக்
காக்கையாப் பறந்தே யோடக் கவர்ந்தங்கை
சோர்ந்து விட்டான்.

(இ-ள்) ஓக்கத்தால்-உயர்ச்சியினுலே, மதியமுட்டும்-வளர்ந்து சந்திரன் வரையிலும் போய் முட்டுகின்ற, உறு-மிகுதியாகிய, தவன்-தவத்தினையுடைய ஜினனது, நகரிமுன்னே-கோவிலுக்கு எதிரே, யாக்கையால்-தேகத்தினுலே, அழகிதாய்-அழகினையுடையதாய், ஓர்-ஒரு, பொன்மயில்-பொன்னுலாகிய மயில், ஆட-ஆடுதல்செய்ய, கண்டு-அதனை ஒரு அர்ச்சகன் பார்த்து, (பேராசைகொண்டு அதன் இறகு முழுமையும் கைப்பற்றவேண்டுமென்று நினைத்து), தோக்கையை-அதன் கலாபத்தை, பற்றலோடும்-பிடித்த மாத்திரத்தில், (அது), தொட்டவன்-அவ்வாறு கைப்பற்றிய அர்ச்சகனுடைய, காயம்-தேகத்தை, கவர்ந்து-தூக்கிக்கொண்டு, காக்கையா-காக்கை வடிவமாக, பறந்து-பறந்துசென்று, நூக்கி-அதனைத்தள்ளிவிட்டு, ஓட-ஓடிப்போக, (அவன்), அங்கைசோர்ந்து-அழகியகை தளர்ச்சியடைந்து, விட்டான்-பிடித்த பிடியைவிட்டுக் கீழே வீழ்ந்திறந்தான். (இவன் போல் பேராசை கொள்பவனுக்கு இத்தகைய தீங்குநேரிடுவது திண்ணம்), எ-று.

(வி-ரை) இச்செய்யுள் பிறிது மொழிதலாக அமைந்தது. 'ஒருவன் பேராசையால் மயிற்றேகையைப்பற்றி யிறந்தான்,' எனவே, 'அவனைப்போல பேராசையால் செய்யத்தகாதன செய்வார், தங்களெண்ணங் கெட்டொழிவர்,' என்பது தானே போதரும். ஒருவன் மயிற்றேகைபற்றி யிறந்தகதையாவது:—''தர்மிஷ்டனாகிய ஒரு சிராவகன், ஒரு ஜினசைத்தியாலங்கட்டி, ஜினபிம்பப் பிரதிஷ்டையியற்றியும் அதற்கு நித்தியபூஜைக்குத்தக்க படித்தரமொன்றும் ஏற்படுத்தாமல் மரணமாகித் தேவருலகிற்பிறந்து, அவதிஜ்ஞானத்தால் முன் ஜன்மத்தில் ஜினுலயத்திற்குப் படித்தர மேற்படுத்தாததை யுணர்ந்து, அக்குற்றத்தை நிவர்த்திப்பான் வேண்டி ஒரு பொன்மயில் ரூபமாக அந்த ஜினுலயத்தைச்சார்ந்து, அருகக்கடவுளுக்கும் அர்ச்சகனுக்கும் உபயோகமாம்படி தினந்தோறும் இரண்டு பொன்னிறகு போட்டு

வந்தான். அவ்விறகுகளால் அந்த அர்ச்சகன், கடவுள் பூஜாவிதிகளை நிறைவேற்றிக்கொண்டு தானும் சுகமாக ஜீவித்து வந்தான். அப்படியிருக்கும்போது அவன் ஒருதினம், 'இந்த மயிலையே பிடித்துக் கொண்டால் அநேகம் பொன்னிறகுகள் அகப்படும்; அவற்றால் நமக்குப் பொருள் குவிந்துவிடும்,' என்று பேராசைகொண்டு, அம்மயில் வந்திருக்கும்போது அதன் தோகையைப் பற்றினான். அஃது அப்படியே அவனைத் தூக்கிக்கொண்டு காக்கைவடிவமாக ஆகாயத்திற் பறந்தது. அங்ஙனமாகவே அவன் பயந்து கைப்பிடியைவிட்டு நிலத்தில் வீழ்ந்து நிமிஷத்தில் மாண்டான்,', என்பதாம். 'மதியமுட்டுந் தவம்,' என்பது தவத்தின் மிகுதியை உணர்த்தும். அவன்–தோன்றா எழுவாய். 'தொட்டவன்,' என்பதை எழுவாயாகக் கொள்ளினும் அமையும். விட்டான்–பயனிலை. (கஅ)

## வேறு

19. நல்ல சூழ்ச்சியி லாநரி யெய்திய
அல்லல் கேட்டு மறஞ்செய்கி லாதவர்
செல்ல லெய்திய செம்பொனி னிட்டிகை
புல்லி தாக்கொண்ட வாணிகன் போல்வரே.

(இ-ள்) நல்ல சூழ்ச்சியல்லா–நல்ல ஆலோசனையில்லாத, நரி–இந்நூலின் தொடக்கத்திற் சொல்லப்பட்ட நரியானது, எய்திய–பேராசையினாலே அடைந்த, அல்லல்–துன்பத்தை, கேட்டும்–இதன் மூலம் கேட்டும், அறம்–தருமத்தை, செய்கிலாதவர்–செய்யாதவர்கள், செல்லல் எய்திய–(ஜிநாலயத்தின் பொருட்டு ஜயசேன மகாராஜனால் அழைப்பிக்கப்பட்டு ஆங்குச்) சென்ற, செம்பொன்னின் இட்டிகை–சிவந்த பொன்னையுடைய செங்கற்களை, புல்லிதா-அற்பமாக நினைத்து, கொண்ட–பேராசையால் கைப்பற்றிய, வாணிகன் போல்வர்–லோலுபன் என்னும் பிட்டுவாணிகன்போலத் துன்பத்தை அடைவார்கள், எ–று.

(வி-ரை) ''பின்வரும் துன்பத்தை யுணராது பேராசையால் செய்யத்தகாதன செய்து, துன்பத்தையடைந்த இந்நரிக்கதையைக் கேட்டும், பயனற்ற செய்கைகளைத் தள்ளி நிலைத்த நற்செயலாகிய அறத்தைத்தேடாதவர், ஜிநாலயத்திற்கு உபயோகமான பொற்செங் கற்களைப் பேராசையால் கைப்பற்றிய லோலுபன் என்னும் பிட்டு வாணிகன்போலத் துன்பத்தையடைவார்கள்,'' என்பது இதன் கருத்து. ஆகவே, எல்லோரும் பயனற்றன தள்ளி அறத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்பது இதனாற் பெறப்படும். பொற்செங்கற்களைக் கவர்ந்த லோலுபன் கதையாவது:—''ஜயசேனமகாராஜனென்

பான், ஒரு ஜினாலயங்கட்டுவிக்கும்பொருட்டுச் செங்கற்களைத் தன் பரிஜனங்களால் அழைப்பித்துக் கொண்டிருந்தான். அப்போது அம் மன்னனது நகரத்திலிருந்த லோலுபன் என்னும் பிட்டுவாணிகனொரு வன், செங்கற்கள் கொண்டுவந்த அந்தப்பரிஜனங்களுள் ஒருவனுக்கு ஆகாரம்கொடுத்து அவனிடத்தில் சில செங்கற்களைத் தன் பிரயோஜ னத்தின் பொருட்டு வாங்கிவைத்தான்; அவற்றுள், ஒரு செங்கல்லில் சுவர்ணதுண்டம் காணப்பட்டது. அதைக்கண்டவுடனே அவன் சந் தோஷித்து எல்லாவற்றிலும் இப்படியே சுவர்ணதுண்டம் இருக்கு மென்று நினைத்து, மேலும் செங்கற்களை வாங்கி வைக்கவேண்டு மென்று பேராசை கொண்டு, முன் செங்கற்கள் கொடுத்தவனுக்கு மேலும் ஆகாராதி பலவித தானங்களைச்செய்து அவனிடத்தில் இரகசியமாகத் தினந்தோறும் செங்கற்களை வாங்கித் தன் வீட்டில் பத்திரப்படுத்திவந்தான். அங்ஙனம் அவன் நடத்திவரும்போது ஒரு நாள், தன் புத்திரியைக் காணும்பொருட்டு அவளிருக்கும் கிராமத் திற்குப் போகவேண்டிய அவசரம் நேர்ந்தமையால், அங்ஙனம் செல் லும்போது, செங்கற்கள் வாங்குந்தொழில் ஒருநாளேனும் தவறக் கூடாதென்று கருதித் தன் மகனையழைத்து அவனிடம், செங்கற்கள் கொடுப்பவனுக்கு ஆகாராதி தானங்கள்செய்து அவன்பால் அவற்றை வாங்கிச் சேர்க்குமாறு கூறிச்சென்றான். அவனுடைய புத்திரன் அவன் சொற்படி அக்காரியத்தைச் செய்யாமல் மறதியாயிருந்து விட்டான். லோலுபன் கிராமத்திற்குச்சென்று மீண்டுவந்து பார்க்க, புத்திரன், அவன் கட்டளையிட்டகாரியத்தை நிறைவேற்றாது இருந்தது தெரிந்தது. உடனே அவனுக்குப் பேராசையால் கோபமூண்டது. அதனால் அவன் தன் புத்திரனுடைய மஸ்தகத்திலடித்ததோடு, செங் கற்களை வாங்குவதை விட்டு ஊருக்குச்சென்ற தன் கால்களையும் அடித்தனன். இந்த விருத்தாந்தம் அரசனுக்குத் தெரிந்தது. உடனே அம்மன்னன் அவனைத் தண்டிக்குமாறு தன் பரிஜனங்களுக்குக் கட்டளையிட்டனன். அவ்வாறே அவர்கள் அவனைச் சித்திரதண்டம் புரிந்தனர்; பின்னர் அவன் மரணமடைந்து கீரியாயினன்,'' என்ப தாம். இக்கதை ஸ்ரீபுராணத்துள்ளது (ஆதிபுராணம், ப. 61). செய்கிலாதவர்–எழுவாய், போல்வர்–பயனிலை. எய்திய–பெயரெச்சம். செய்கிலாதவர் என்பதிலுள்ள, கில்-ஆற்றல் பொருண்மையுணர்த்தும் ஒருவகை இடைநிலை. செய்கிலாதவர்–வினையாலணையும்பெயர். வாணிகன்–வாணிஞ் செய்வோன் ; வணிகம்-வியாபாரம்.

20. மெய்பொரு டேறலன் பற்றுள மேபுரிந்
திப்பை யாக்கையிற் றேர்ச்சியில் வாணிகன்
கப்பி யாப்பிறந் தானெனுங் கட்டுரை
ஒப்ப நூலுணர்ந் தார்சொலக் கேட்டுமால்.

**(இ-ள்)** இப்பை-இந்தப்பைபோன்ற கூடான, யாக்கையில்-தேகத்தில், தேர்ச்சியில்-(இது மிகவும் இழிவானதென்றும், நிலையற்ற தென்றும் ஆராய்ந்து இதன் நிலைமையை) அறிதலில்லாத, வாணிகன் -நாகதந்தன் என்னும் வணிகன், மெய்ப்பொருள்-உண்மைப்பொருளாகிய ஞானத்தை, தேறலன்-அறியாதவனாய், உள்ளம்-மனதில், பற்றேபுரிந்து-பேராசையையே விரும்பி (செய்யத்தகாதனசெய்து), கப்பியா-குரங்காக, பிறந்தான் என்னும்-ஜனித்தானென்கிற, கட்டுரை-உறுதிவாக்கியத்தை, ஒப்ப-எல்லோரும் சம்மதிக்கும்படி, நூல் உணர்ந்தார்-உண்மைச் சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தவர்கள், சொல்ல-உரைக்க, கேட்டும்-நாம் கேட்டிருக்கின்றோம், (ஆதலின் நாம் நிலையற்ற உலகவாழ்வில் பற்றுவைக்காமல், அறத்தைத் தேடக் கடவோமாக), எ-று.

**(வி-ரை)** ''மெய்ப்பொருள் தேருதவனாகிய நாகதந்தனென்பான் பற்றுள்ளமுடையவனா யிருந்தமையின், குரங்காகப் பிறந்தானென்பதைப் பெரியோர் சொல்லக்கேட்டிருக்கின்றோமாதலின், நாம் அங்ஙனமின்றி அறத்தைத் தேடுவோமாக,'' என்பது இதன்கருத்து. பற்றுளத்தால் குரங்கான நாகதந்தன் கதையாவது :—''தான்யபுரத்திலிருந்த குபேரதத்தனென்னும் சிரேஷ்டிக்கும், சுதத்தையென்னும் அவன் பத்தினிக்கும் பிறந்த நாகதந்தன் என்பான், அஞ்ஞானத்தால் மாயையில் அழுந்தி மிக்க பேராசையுடையவனாயிருந்தான்; அப்போது, அவன், தன் தங்கையின் கல்யாணவிதியின் பொருட்டுத் தன் பிதாவின் கடையில் தன்னுடைய அன்னை ஸாரரத்தினங்களைத் தெரிந்து வாங்கிய தருணம், வஞ்சனைசெய்ய இடங்கிடைக்காமையால், அந்தந் கவலையுடனே உயிர் விட்டுக் குரங்காயினன்,'' என்பதாம். (ஸ்ரீபுராணம் ப. 60) நாம்-தோன்ரு எழுவாய்; கேட்டும்-பயனிலை. 'யாக்கை' என்பதற்குப், 'பல அவயவங்களாலும் சேர்த்துக் கோக்கப்பட்டது,' என்பது பொருள். கபியென்பது, கப்பியெனத் திரிந்து வந்தது. (உ0)

21. நரியி னுருரை கேட்டபி னல்லராய்ப்
புரிவி னல்லறஞ் செய்வர்பொய் யாக்கொளீஇ
அரிவ ரம்மக னப்பொருள் வேட்கையாற்
றெரிவித் திட்டறஞ் செய்பொருள் செப்பினுன்.

**(இ-ள்)** (மனிதராயினார்), நரியினுர் உரை-நரிவிருத்தமென்னும் இந்நூலுரையை, கேட்டபின்-படிக்கக் கேட்டுணர்ந்த பிறகு, நல்லராய்-நற்குணமுடையராய், பொய்யாக்கொளீஇ-உடல் பொருள் முதலியவற்றை நிலையற்றனவென மனத்திற்கொண்டு, புரிவின்-விருப்

பத்துடனே. நல்அறம்-நல்ல தருமத்தை, செய்வர்-செய்வார்கள், (இங்ஙனம் அவர்கள் செய்வார்களென்பதற் குதாரணமாக), அரிவர மகன்—அரிவரனென்னும் ஒரு மனிதன், அப்பொருள் வேட்கையால்-அந்த அறமாகிய, உண்மைப்பொருளின் விருப்பத்தினலே, (முனிவர் களிடம் சென்று), அறம் செய்பொருள்-தான் தருமத்தைச் செய்ய வேண்டுமென்று கருதியிருக்கின்ற உண்மையை, தெரிவித்திட்டு—அறிவித்து, (தனக்குத் தர்மோபதேசம் செய்யவேண்டுமென்று), செப்பினன்-சொல்லி அவர்கள் அங்ஙனமே அதனை உபதேசிக்கக் கேட்டுணர்ந்து அதன் வழி நின்று நற்கதியடைந்தான், (ஆதலின் இந்நூலைக் கேட்போரெல்லோரும் தருமத்தை அனுஷ்டிப்பீராக), எ-று,

(வி-ரை) 'இந்த நரியின் வரலாறு கேட்டபின் எந்தகையரும் நல்லராய் அறஞ்செய்ய நாடுவர்; இதற்குதாரணமாக அரிவரனென்பவன் பெரியோருரைகேட்டு அறஞ்செய்து நற்பயன் பெற்றான்; ஆதலின், யாவரும் இந்நீதியை மனங்கொண்டு அறம்புரிய வேண்டும், என்பது இச்செய்யுள் கருத்து. இதற் கூறப்படும் அரிவரன் கதை யாவது :—''அரிவரன் என்பானொருவன், அறம்புரிய வேண்டு மென்னும் விருப்பத்தால் முனிவர்களிடத்தில் தர்மங்கேட்டு அதை அனுஷ்டித்து நற்கதியடைந்தான்,'' என்பதாம். இக்கதை **கதா கோசம்** என்னும் நூலிலுள்ளதென்ப. அரிவரமகன்-இருபெயரொட்டு. அரிவர மகன்-எழுவாய்; செப்பினன்-பயனிலை. (உக)

22. அஞ்சு மின்னதி லோபமில் லோர்களுஞ்
செஞ்சு டர்நெடு வேற்றிரி யோதனன்
பஞ்ச வர்க்குமண் பாகங் கொடாமலே
துஞ்சி னன்கிளை தன்னொடு மென்பவே.

(இ-ள்) செம்-செம்மையாகிய, சுடர்—ஒளியின் கிரணங்களைக் கொண்ட, நெடு-நீண்ட, வேல்-வேலாயுதத்தையுடைய, திரியோ தனன்-திரியோதன னென்னும் அரசன், பஞ்சவர்க்கு-தன்னுடைய தாயாதிகளாகிய பாண்டவர் ஐவருக்கும், மண்-பூமியில், பாகங் கொடாமல்-பாகத்தைக் கொடாமையினலே, (அவர்களோடு விரோ தங்கொண்டு போர்செய்து), கிளை தன்னேடும்-தன்னுடைய சுற்றத் தாருடனே, துஞ்சினன் என்ப—இறந்தான் என்று அறிவுடையோர் கூறுவர், (ஆதலின்), இல்லோர்களும்-தம்மிடத்தில் பொருள் இல்லா தவர்களுங்கூட, அதிலோபம்-மிகுந்த ஈயாமைக் குணத்திற்கு, அஞ்சுமின்-பயப்படுங்கள் (அதாவது: கையில் பொருள் இல்லாவிட்

டாலும் இயன்றவளவு தருமம் செய்து அழியாத நற்பயனை யடை யுங்கள்), எ-று.

(வி-ரை) துரியோதனனென்பான், உலோப குணத்தினாலே, தன் பங்காளிகளாகிய பாண்டவர்களுக்குப் பாகத்தைக் கொடாமல் வண்கண்மைசெய்து முடிவில் தன் சுற்றத்தாருடனே அழிந்தனன்; ஆதலின், பொருளில்லாதவர்களுங்கூட உலோபகுணத்திற்கு அஞ்ச வேண்டுமென்பது இதன் கருத்து. பொருளில்லாதவர்கள் தங்கள் வறுமைக்கஷ்டத்தால் ஒருவர்க்கொரு பொருளைக்கொடுத்தற்கு மறுத்தல் இயல்பு; ஆயினும், அத்தகையரும் உலோபத்திற்கு அஞ்ச வேண்டும் எனவே, பொருளுள்ளார் உலோபத்தைக் கனவிலும் கருத லாகாதென்பது பெறப்படும். துரியோதனன், பாண்டவர்க்குப் பாகங் கொடாமல் அழிந்த கதை, பாரதம் முதலியவற்றால் எங்கும் பிரசித்தி யானதே. 'அஞ்சுமின்,' என்பதிலுள்ள, மின்-முன்னிலை யேவற் பன்மை விகுதி. அதி-அதிகம் என்பதன் ஈறுகெட்டு நின்றது. இல்லோர்-வினையாலணையும் பெயர். இல்லோர்க்கலும் என்றதிலுள்ள உம்மை இழிவு சிறப்புப் பொருளது. செஞ்சுடர், நெடுவேல்-பண்புத் தொகைகள். அஞ்சுமின்-ஏவற் பன்மைவினைமுற்று. துரியோதனன்- எழுவாய், துஞ்சினன்-பயனிலை. (உஉ)

23\. குட்ட நீர்த்துறைப் போம்வழிக் கூனியை
ஒட்ட லன்புன லுய்த்தவக் காகுத்தன்
திட்டை வேண்டிய தேர்ச்சியில் வாணிகன்
பட்ட தெய்துவ பற்றுளத் தார்களே

(இ-ள்) பற்று உள்ளத்தார்கள்—ஆசை பொருந்திய மனத்தை யுடையவர்கள், குட்டம்-குளத்தின், நீர்த்துறை-ஜலத்துறை யோர மாக, போம்வழி-செல்கின்ற மார்க்கத்தில், கூனியை-கூனலாகிய ஒரு ஸ்திரீயை, (அவளுடைய ஆபரணக்களை அபகரித்துக்கொள்ள வேண் டுமென்னும் பேராசையினாலே), ஒட்டலன்-அவள்மீது பற்றுதல் இல்லாதவனாய், புனல்-அக்குளத்தின் நீரிலே, உய்த்த-தள்ளியவனும், (பின்னர் தான் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று), திட்டை வேண்டிய-ஒருமேட்டு நிலத்தை விரும்பித்தேடி அஃது அகப்படாமை யால் உயிரைவிட்டவனுமாகிய, தேர்ச்சியில்-புத்தித் தெளிவில்லாத, வாணிகன்-செட்டியாகிய, காகுத்தன்—காகுத்தனென்பவன், பட்டது- அடைந்த கதியை, எய்துவ—அடைவார்கள், எ.று.

(வி-ரை) 'பொருளாசையால் ஒரு கூனியைக் குளத்துநீரில் தள்ளிய காகுத்தனென்பான், தானும் உயிரிழந்ததைப்போல,

பொருள் விருப்பால் தகாதன செய்வார் கேடுறுவர்,' என்பது இதன் கருத்து. காகுத்தான் கதையாவது:—''காகுத்தன் என்னும் வணிக னொருவன், கூனியாகிய ஒரு ஸ்திரீயுடன் வழிச்செல்லுங்காலத்தில் அவளுடைய ஆபரணங்களைக் கவர்ந்துகொள்ள வேண்டுமென்னும் பேராசையால், அவளை நடுக்குளத்தில் தள்ளி அந்த அணிகளைக் கைக்கொள்ளப் போனான். அப்போதவள், மரணபயத்தால் அவனை விடாதுபற்றி இறுகத் தழுவிக்கொண்டாள்; அவன் ஜலத்தில் அவள் கையினின்றும் நீங்கமுடியாமையால் அவளுடனே உயிரிழந்தான்,'' என்பதாம். பற்றுள்ளத்தார்கள்—எழுவாய். எய்துவ—பயனிலை. 'எய்துவ' என்பதில் வ-பலர்பால் விகுதி. (உ௩)

24. நட்ட வன்வந்து நல்லறங் காட்டவும்
ஒட்ட லன்னதி லோப முடைப் பெருஞ்
செட்டி யெய்திய தெய்துவ தேபொருட்
கிட்டி யம்மனத் தளர்கிளர்ந் தென்பவே.

(இ-ள்) பொருள்-திரவியத்தினிடத்தே, கிளர்ந்து—அதிகரித்து, கிட்டிய-பற்றுதல் அடைந்த, மனத்தார்-உள்ளத்தை யுடையவர்கள், எய்துவது-அடையும் கதி, (யாதென்றால்), நட்டவன்-தன்னோடு சிநே கித்தவன், வந்து-தன்னிடத்தே சார்ந்து, நல்லறம்-நல்ல நீதியை, காட் டவும்—சொல்லிக்காட்டியும், ஒட்டலன்-அந்நீதிப்படி நடக்கச் சம்மதி யாதவனான, அதிலோபமுடைய-மிகுந்த லோப குணத்தையுடைய, பெரும் செட்டி-பெரிய வணிகன், எய்தியதே-அடைந்ததே, என்ப -என்று கூறுவர் அறிவுடையார், எ-று.

(வி-ரை) 'சிநேகித்தவன் வந்து நல்ல தருமங்களை யெடுத் துரைத்தும் கேளாது தன்னுடைய உலோப குணத்தால், அவன் கொடுத்த திரவியத்தைக் கொடாமல் இல்லையென்ற செட்டியைப் போலவே மிகுந்த பொருளாசையால் நெறி பிசகி நடப்போர் கேட டைவர்,' என்பது இதன் கருத்து. ''தனதேவனென்பா னொருவன் தன்னுடைன் சிநேகிதனாகிய சிவதேவனிடம் ஒரு சமயத்தில் தனக்குச் சொந்தமான திரவியத்தைக் கொடுத்துக் காப்பாற்றிவைக் கும்படி கூறிச்சென்று மீண்டு வந்து கேட்டபோது அவன் அது தன் னிடமில்லையென்று கூறிக் கேடடைந்தான்,'' என்பது ஸ்ரீ புராண கதை [பக். 161]. 'எய்துவதே', என்பதிலுள்ள ஏகாரம், 'எய்தியது' என்பதனோடு கூட்டப்பட்டது. பொருட் கிட்டிய-பொருளிடத்து மிகுந்த. ஒட்டலன்னதி, கிட்டியம்மன என்பவற்றில் செய்யுளிசை பற்றி னகரவொற்றும், மகரவொற்றும் மிக்கன. அறிவுடையார்-தோன்றா எழுவாய். என்ப-பயனிலை. (உ௪)

25 நாட்டி யாத்திரை செய்பவ னன்மணி
காட்டி வைத்தவன் போய்வந்து கண்ணுறச்
சாட்டி யஞ்சொன்ன சத்திய கோட னும்
ஈட்டிய வைத்திழந் தான்பொரு ளென்பவே.

(இ-ள்) நாட்டு யாத்திரை-அந்நியதேசப் பிரயாணம், செய்பவன்-செய்பவனுகிய பத்ரமித்ரனென்னும் செட்டியானவன், (சத்திய கோஷனென்னும் மந்திரியினிடத்தில்), நன்மணி - நல்ல இரத்தினச் செப்பை, காட்டிவைத்தவன்-குறிப்பிட்டு வைத்தவனுகி, போய்வந்து-தன்னூர்க்குப்போய்த் திரும்பிவந்து, கண்ணுற - அவனைப்பார்த்துத் தான் கொடுத்த இரத்தினங்களைக் கொடுக்கும்படி கேட்க, (இரத்தினங்களை அபகரிக்க வேண்டுமென்னும் எண்ணத்தினல் அந்தச் செப்பைத் தன்னிடம் கொடுக்கவில்லை என்று),ச் சாட்டியம் சொன்ன-பொய்சாட்சி சொல்லி அதனை அபகரித்த, சத்தியகோடனும்-அந்தச் சத்திகோஷனென்னும் வேதியனும், பொருள் - அந்த திரவியத்தை, ஈட்டிவைத்து—அவ்வாறு மோசத்தால் தன்னிடத்தே சேகரம் செய்து வைத்து, இழந்தான் என்ப-பின்னர் அதைக்கைவிட்டு அப்பாவத்தினுலே சர்ப்பமாய் பிறந்தானென்று சொல்லுவர் அறிவுடையோர். (ஆதலின், எவரும் பேராசையால் பிறர் பொருளை அபகரிக்க நினைத்தல் கூடாது), எ-று.

(வி-ரை) 'பத்ரமித்திரனுடைய திரவியத்தை அபகரிக்க நினைத்து, சத்தியகோஷனென்னும் மந்திரி, பின் அதனை யிழந்து இராஜ தண்டனைக் குள்ளாகித் துன்பமுற்ருனுதலின், எவரும் பிறர் பொருளை அபகரித்தல் கூடாது,'' என்பது இதன் கருத்து. சத்திய கோஷன் கதையாவது:— ''ஜம்பூத்வீப பரத க்ஷேத்திரத்திலுள்ள ஹிம்ஹபுரத்தில், ஹிம்ஹஸேனனென்னும் அரசன் செங்கோலோச்சி வந்தான்; இவனிடம் ஸத்தியகோஷன் என்னும் பட்டப்பெயர் பூண்ட ஸ்ரீ பூதியென்னும் மந்திரி யொருவனிருந்தான்; பத்மஷண்டபுரத்து சுதத்த சிரேஷ்டிக்கும் சுமித்திரா தேவிக்கும் புத்திரனுன பத்ரமித்திரன் என்பான் கப்பல் யாத்திரை செய்து அநேகம் இரத்தினங்களைத் தேடிக்கொண்டு வந்து, ஹிம்ஹபுரத்திலே வசிக்க விரும்பி, சத்திய கோஷனிடம் சென்று தன்னுடைய இரத்தினங்களடங்கிய செப்பைக் கொடுத்து, 'நான் இதை மீண்டுவந்து வாங்கிக் கொள்கிறேன்,' என்று சொல்லித் தன்னூருக்குப் போய்த் திரும்பி வந்து அந்த இரத்தினச் செப்பைத் தரும்படி கேட்டான். சத்தியகோஷன், 'யான் உன்னை அறியேன்; இரத்தினச் செப்பை நீ என்னிடம் கொடுக்க வில்லை,' என்ருன் பத்ரமித்திரன் மனம் நொந்து, சத்தியகோஷ

னுடைய மோசச் செய்கையை நகரெங்கும் சொல்லிக்கொண்டு திரிந்தான்; அப்போது சத்தியகோஷன், 'இந்த பத்ரமித்திரன் தன் பொருளைச் சோரர் அபகரிக்க இழந்து அதனால் பயித்தியங் கொண்டு இவ்வாறு புலம்புகின்றனன்,' என்று சொல்லித் தன் மோசச்செய்கை வெளிப்படாமல் அதனை மறைத்தான். அரசன் மனைவியாகிய ராமதத்தை யென்பாள், பத்ரமித்திரன் எப்பொழுதும் ஒரே தன்மையாகப் புலம்புவதுணர்ந்து, 'இவனுக்குப் பயித்தியமானால் முன்னுக்குப்பின் விரோதமாகப் பேசுவான்; அங்ஙனமின்றி இவன் எப்பொழுதும் ஒரே தன்மையாகப் பேசுவதனாலே பித்தனல்லன்; சத்தியகோஷன் இவனுடைய பொருளை அபகரித்தே யிருப்பான்; இதனை நான் வெளிப்படுத்துகிறேன்,' என்று அரசன் பால் தெரிவித்து, சத்தியகோஷனைச் சூதாட்டத்திற் கழைத்து, அதில் அவன் பூணூலையும முத்திரை மோதிரத்தையும் பந்தயம் வைக்கச் செய்து அவற்றை ஜெயித்து, நிபுணமதி யென்னும் தாசிகையிற் கொடுத்து, 'இவற்றை நீ சத்தியகோஷனுடைய பொக்கிஷத் தலைவனிடம் காட்டி, அந்த சத்தியகோஷன், பத்ரமித்திரன் தன்னிடம் வைத்துச்சென்ற இரத்தினச்செப்பை வாங்கி வரச் சொன்னான் என்று சொன்னால் அவன் கொடுத்து விடுவான்; அதைக் பெற்றுக் கொண்டுவா,' என்றுகூறி அவளை அனுப்ப, அவள் அவ்வாறே இரகசியமாக அதனை வாங்கிக் கொண்டு வந்துவிட்டாள். இராமதத்தை அதை மன்னனிடம் சேர்த்தனள். அம்மன்ன, பத்ரமித்திரனுடைய உண்மையை நன்றாகப் பரீக்ஷித்தறியவேண்டி, அந்த இரத்தினச் செப்பில் தன்னுடைய சில இரத்தினங்களையும் கலந்து அவனிடங்கொடுத்தான். அவன், அரசனுடைய இரத்தினங்களை யெல்லாம் நீக்கிவிட்டுத் தன்னுடையவைகளை மாத்திரம் எடுத்துக் கொண்டான். உடனே அரசன் சந்தோஷித்து பத்ரமித்திரனுக்கு சத்தியகோஷ நாமமும் சிரேஷ்டி முக்கிய பதமுங் கொடுத்து, தர்மிளன் என்னும் வேதியனை மந்திரியாக்கிக்கொண்டு, சத்தியகோஷனென்னும் ஸ்ரீபூதிக்குத் தக்க தண்டனைகளைச் செய்யும்படி விதித்தான். பின் சத்தியகோஷன் அவற்றை அனுபவித்து மரணமாகி, அகந்தியனன் என்னும் சர்ப்பமாகப் பிறந்தான்,'' என்பதாம். இவ்வரலாறு ஸ்ரீ புராணத்து [ப. 253] விமலதீர்த்தகர தீர்த்தப்பிரஸித்தராகிய மேருமந்தர கணதரர்கள் சரிதத்தும், மேருமந்தரபுராணம் பத்ரமித்திரன் அறங்கேள்விச் சருக்கத்திலும் கூறப்பட்டுள்ளது. (உரு)

26. விழுமின் பொற்கலம் பெற்றங்கோ ரேழைபோய்க்
கழுவு வான்புகக் கைத்தலத் தின்னிரா
தழுவ நீர்புகுந் தாழ்தலிற் கெட்டுயிர்
வழுவி னூர்கதை வைகலுங் கேட்டுமால்

**(இ-ள்)** விழும்—விரும்பத்தகும், மின்-ஒளிபொருந்திய, பொற் கலம்-பொற்பாத்திரத்தை, ஓர் ஏழை-ஓர் அறிவில்லாதவனாகிய செட்டி, பெற்று-நாழி மிளகு கொடுத்து விலைக்கு வாங்கி, அங்கு—தானிருந்த அவ்விடத்திலே, போய்-ஓர் துரவினருகே சென்று, கழுவுவான்—அதன் பாசியைத் தேய்த்துக் கழுவும் பொருட்டு, புக-அக் கிணற்றின் கரையில் புகுந்து அதனைத் தேய்க்க, (அது), கைத்தலத்தின்—அவனுடைய கையினிடத்திலே, இராது-இல்லாமல் நழுவி, அழுவம்-பரப்பாகிய, நீர்புகுந்து-ஜலத்திற்குள்ளே புகுந்து, ஆழ்தலின்-அமிழ்ந்து விட்டதனாலும், கெட்டு-அதனை முன்னே ஒருவன் வாங்காது கைதவறவிட்டதனாலும், உயிர் வழுவினார்-உயிர் நீங்கின இருவருடைய, கதை-சரித்திரத்தை, வைகலும்—தினந்தோறும், கேட்டும்-நாம் கேட்டிருக்கின்றோம், (ஆதலின், எவரும் பேராசை கொள்ளலாகாது), எ—று.

**(வி-ரை)** ''ஒரு பொற்கலத்தை ஒருவனிடமிருந்து ஏமாற்றி வாங்கி அது கிணற்றில்விழ அதனால் உயிர்விட்ட செட்டியினுடைய சரித்திரத்தையும், முன்னே அதனை வாங்காமல் விட்டு அதனால் உயிர் விட்ட செட்டியின் கதையையும் நாம் கேட்டிருக்கின்றோமாதலின், உயிர்க்கு இறுதிபயக்கும் பேராசையையும், அபகார சிந்தையையுங் கொள்ளலாகாது,'' என்பது இதன்கருத்து. இங்குக்கூறிய செட்டிகளின் கதையாவது: ''ஓர் உழுதொழிலாளன் மண்வெட்டும்போது, கீழே புதைந்து பாசியேறிக் கிடந்த பொற்பாத்திரம் ஒன்றைக் கண்டெடுத்து, அதனைப் பொன்னென்று உணராது ஒரு செட்டிக்குக் காட்ட, அவன் அதனைப் பொன்னென்று அறிந்து, 'இதற்கு விலை யாது,' என்று கிருஷியாளனைக் கேட்டான்; அவன், 'அதற்கு நாழி மிளகு வேண்டும்,' என்றான். செட்டி, 'ஒரே முறையில் விலையை முடிவு செய்து விடலாகாது; ஆழாக்குத் தருகிறேன், உரி தருகிறேன் என்று சொல்லி இவனைப் போகவிட்டுத் திருப்பிப் பின் நாழியுங் கொடுத்து இதனைப் பெற்றால்தான் இவன் சந்தேகப்படமாட்டான்,' என்றெண்ணி அவ்வாறே செய்ய, கிருஷியாளன் மற்றொரு செட்டிக்குக் காட்டினான். அவன் உடனே அதனைப் பொன்னென்றுணர்ந்து கொண்டு நாழி மிளகையுங் கொடுத்து வாங்கிக்கொண்டு அதன் பாசி போகத் தேய்த்துக் கழுவும் பொருட்டு ஒரு பழங்கிணற்று அருகே போய் அதனைத் தேய்க்க, அது கையைவிட்டு நழுவிப் பாதாளத்தில் வீழ்ந்தது. அதுகண்டு அவன் பிரமைகொண்டு, 'அது கழுவாக் காலோ,' என்று பிதற்றி மரணமெய்தினான். முன்னே அதனை வாங்காமல் கைவிட்ட செட்டியும், அந்த கிருஷியாளனை எங்கும் தேடிக்காணாமையால், 'அம்மிளகு கொடுத்தாலோ,' என்று பிரமைகொண்டு பிதற்றி மரண மெய்தினான்,'' என்பதாம். இது ஜீவசம்போதனையிலுள்ளது [செ. 370]. **(உ௯)**

27 சந்த மாயினுந் தன்பழப் பிண்டியைக்
கந்த மாய்ப்புளி நீரொடு காடியாய்ச்
சிந்தை யொன்றில னுண்ட சிரேட்டியும்
அந்த மில்பொருள் காத்தவ னாயினன்.

(இ-ள்) தன்-தன்னுடைய, பழப்பிண்டியை-பழைய இலவமுள் மாவை, புளிநீரோடு-புளித்த நீருடனே கலந்து, காடியாய்-கூழாகக் காய்ச்சி, சந்தம் - அதன் இயற்கை நலமானது, மாயினும்-கெட்டிருந் தாலும், (அதனை), சிந்தை ஒன்றிலன்-மனத்திலே இழிவென்று கருதா தவனாய், கந்தமாய்-மிகவும் வாசனையுடையதாக, (அதனை எண்ணி), உண்ட-உண்டு பொருளை அதிகமாகச்சேர்த்துச் செலவு செய்யாமல் வைத்திருந்த, சிரேட்டியும்-செட்டியொருவனும், (அத்திரவிய வாஞ்சையினாலே மறு ஜன்மத்தில் பாம்பாய்ப் பிறந்து) அந்தமில்-அழகில்லாத, பொருள் - அத்திரவியத்தை, காத்தவனாயினன் - காத்துக் கொண்டிருந்தவனானான், எ-று.

(வி-ரை) 'இலவமுள் மாவைப் புளித்த கூழாக்கி உண்டு கொண்டு, பொருளீட்டி அதனை நல்வழியிற் செலவுசெய்யாமல், பேராசையால் காத்திருந் துயிர்விட்டுப் பாம்பாகப்பிறந்து, மீண்டும் அப்பொருளைக் காத்துத்துன்பப்பட்ட, செட்டிபோலப் பேராசையால் பொருள் தேடி அதனை நல்வழியில் உபயோகிக்காமல் புதைத்துக் காப்பவர் துன்புறுவர்,' என்பது இதன்கருத்து. இதிற்கூறப்பட்டுள்ள செட்டியின் கதையாவது:— ''ஓர் உலோபியாகிய செட்டி இலவமுள்ளை இடித்து மாவாக்கிப் புளித்த காடியிற் சேர்த்துக் கூழாகக் காய்ச்சி அதனைக் குடித்துக்கொண்டே மிகுந்த பொருள் தேடி வைத்து அத்திரவியாபேக்ஷையுடனே உயிர்விட்டுப் பாம்பாகப் பிறந்து அதனைக் காத்துக்கொண்டிருந்தான்,'' என்பதாம். இது ஜீவசம்போதனையிலுள்ளது. சந்தம்-இயற்கை நலம். மாய்தல்-கெடுதல். பிண்டி - மா. ஒன்றுதல் – பொருந்துதல்; அதாவது: சிந்தையிலே அதனைக் கருதுதல். 'கந்தமாய், கடியாய், என்பவற்றில், ஆக-வென்பது ஆய் எனத்திரிந்து வந்தது. (உஎ)

28 பொன்னி னேறுடைச் செட்டியிற் போந்திருட்
கன்ன மிட்டவ னப்பொருள் கொண்டு போய்த்
துன்னு தாபதன் றாங்குறி யிற்கிடந்
தின்ன லெய்தின னென்பதுங் கேட்டுமால்.

(இ-ள்) துன்னு–மோசவழியிற் பொருந்திய, தாபதன்-உறித் தாபதனென்னும் கபடசந்நியாசி, பொன்னின் எடை-திரவியத்தின்

மிகுதிப்பாட்டையுடைய, செட்டி-ஓர் வணிகனது, இல்—வீட்டிலே, இருள்—இராக்காலத்தில், போந்து—போய், கன்னமிட்டவன்-கன்னக் கோல் வைத்துச் சுவரைத்துளைத்து உட்புகுந்தவனாய், அப்பொருள்-அவனுடைய அத்திரவியத்தை, கொண்டுபோய்-திருடிக் கொண்டு போய், தூங்கு-தொங்குகின்ற, உறியிற்கிடந்து-உறியிலே தங்கி யிருந்து, (அப்பொருளாசையாற் செய்த சோரத் தொழிலினாலே அரசனால் தண்டிக்கப்பட்டு), இன்னல் எய்தினன் துன்பத்தை யடைந் தான், என்பதும்-என்ற கதையையும், கேட்டும்-கேட்டிருக்கின்றோம், (ஆதலின், பொருளபகார சிந்தை எவர்க்கும் கூடாதாம்), எ—று

(வி-ரை) 'உறித்தாபதனென்னும் ஒரு திருடன், சந்நியாசி வேடத்துடன் ஒரு செட்டியின் வீட்டுப் பொருளைக் கன்னம் வைத்துத் திருடிப் பின்னர், அரசனால் தண்டிக்கப்பட்டானென்பதை நாம் கேட்டிருக்கின்றோம் ஆதலின் நல்லவர் போன்று நடித்துப் பிறர் பொருளை அபகரித்தால் கேடுண்டாகு மென்பதை யுணர்ந்து அதனை விடுவோமாக' என்பது இதன் கருத்து. இங்குக் கூறிய உறித் தாபதன் கதையாவது: ''ஒரு திருடன் சந்நியாசி வேடந்தரித்து, ஆலமரமொன்றில் உறியைக் கட்டி, அதன்மேல் மகாயோகி போல் பகற்கால மெல்லாம் தங்கியிருந்து இராக்காலத்தில் வெளியேறிப் பிறர் பொருள்களை அபகரித்து வரும் வழக்கத்தைக் கொண்டிருந்து ஒருதினம் மிகுந்த திரவியமுள்ள ஒரு செட்டியின் மனையில் கன்னம் வைத்து உள்புகுந்து அவன் பொருள்களைத் திருடிக்கொண்டு போய் வைத்துவிட்டு உறியில் தூங்கினான். அவனுடைய இரகசியத் திருட்டை அரசன் உணர்ந்து அவனைத் தண்டித்தான்; அதனால் அவன் உயிர் இழந்தான்,'' என்பதாம். இது, சிராவகாசாரம் என்னும் நூலிற் காணப்படும் * ஏறு—மிகுதி. கன்னமிட்டவனாய்த் துன்னியதாபன் எனக் கூட்டுக. (உஅ)

29 நீடு நீணெறிச் செம்பவ னாடொறும்
பாடி கண்டங்கொர் பாசனத் தானிறை
நாடி நாடொறு நெய்தனக் கீட்டிய
தாடி வெண்ணெய் தனதுரை கேட்டுமால்.

(இ-ள்) பாடிகண்டு-ஓர் ஆயர் ஊரைக்கண்டு, நாள்தொறும்-தினந்தோறும், நீடுநீள் நெறி-மிகவும் நீண்ட வழியிலே கூடி, செல் பவன்-நடப்பவனாகி அவ்வூரில் சேர்ந்து, அங்கு-அவ்விடத்தில், ஓர் பாசனத்தால்-ஒரு பாத்திரத்தினாலே (மோரை வாங்கிப்பருகி அதி லிருந்து தாடியில் ஒட்டிய வெண்ணெயால்), நிறைநாடி-எடை அளவு

*அருங்கலச்செப்பு (குறள்—81)

குறித்து, நாள்தொறும்-தினந்தோறும், தனக்கு-தன்னுபயோகத்துக்கு, நெய் ஈட்டிய—சிறிது சிறிதாக நெய்யைச் சேர்த்து ஒரு சேராக்கி அதனுல் பொருள் சேர்க்கலாமென்று வீண் ஆலோசனை செய்துகொண்டே இறந்து நரகத்தையடைந்த, தாடி வெண்ணெய் தனது-தாடி வெண்ணெய்க்காரனுடைய, உரை-சரித்திரத்தையும், கேட்டும்-நாம் கேட்டிருக்கின்றோம், (ஆதலின், பேராசைகொண்டு வீண் ஆலோசனை செய்தல் கூடாது), எ-று.

(வி-ரை) ''மோர்வாங்கிப் பருகும்போது தாடியில் ஒட்டும் வெண்ணெயைச் சிறிது சிறிதாகச் சேர்த்துப் பொருள் சேகரிக்கலாமென்று வீண் ஆலோசனைசெய்து நரகமடைந்த தாடி வெண்ணெய்க்காரனென்னும் ஒருவனுடைய சரித்திரத்தை நாம் கேட்டிருக்கின்றோம் ஆதலின், அங்ஙனம் வீண் ஆலோசனை செய்யலாகாது'' என்பது இதன் கருத்து. தாடி வெண்ணெய்க்காரன் சரிதையாவது:''—பேராசைகொண்ட ஒருவன், பசுக்கூட்டம் மிகுந்த ஒரு ஆயர்பாடியில் தாடி வளர்த்துக்கொண்டு சென்று, ஆயர்களாற் கொடுக்கப்பட்ட மோரைத் தாடியிற்றேயும்படி குடித்து அதனுல் தாடிமயிரில் ஒட்டிய வெண்ணெயை நாள்தோறும் சிறிது சிறிதாகச்சேர்த்து ஒரு சேர் நெய்யாக்கினுன்; அதனுல் அவனுக்குத் தாடி வெண்ணெய்க்காரனென்னும் பட்டப்பெயருண்டாயிற்று. அதன்மேல் அத்தாடி வெண்ணெய்க்காரன், அந்த நெய்யையே முதலாகவைத்துப் பெருத்த வியாபாரஞ்செய்து அதிகப்பொருள் சம்பாதிக்கலாமென்னும் பேராசையை மனத்தில் வைத்துக்கொண்டேயிருந்து, அவ்வெண்ணம் நிறைவேருமல் இறந்து நரகத்தை அடைந்தான்'' என்பதாம். இக்கதை* அருங்கலச்செப்பிற்கு முதனூலாகிய ரத்னகரண்டகம் என்னும் நூலில் உள்ளது பாடி-இடையர் ஊர். பாசனம்-பாத்திரம். நீடுநீள்-சிறப்பின்வந்த ஒருபொருட் பன்மொழி. தாடி வெண்ணெய்-என்பது ஆகுபெயராய்த் தாடி வெண்ணெய்க்காரனை யுணர்த்திற்று.

30 அறத்தி னுற்பொருள் கேட்டது கொள்ளலன்
மறத்தி னலர விந்தனு மாநிதித்
திறத்தி லொன்றில னுனுடை யுண்டியுண்
டிறப்ப வுந்நர கத்திடை யெய்தினுன்.

(இ-ள்) அரவிந்தனும்-அளகாபுரிக்கு அரசனுகிய அரவிந்தனென்பவனும், அறத்தினுல்-தருமநூல்களினுலே, கேட்டது-கேட்டதாகிய, பொருள்-தருமோபதேசமாகிய நிலைபெற்ற சம்பவத்தை,

*அருங்கலச்செப்பு (குறள்—81)

கொள்ளலன்-மனத்திற்கொள்ளாது விடுத்தவனாகி, மறத்தினால்-பாபச் செய்கையினாலே, (தாகச் சுரநோய் வயப்பட்டு), மா-சிறந்த, நிதித் திறத்தில்-தான்பெற்ற வித்யாதர சம்பவத்தை அனுபவிக்குந் தன்மையில், ஒன்றிலன்-பொருந்தாதவனாய், ஊன் உடை-மாமிசத்தையுடைய, உண்டி-உணவை, உண்டு-சாப்பிட்டு, இறப்பவும்-இறந்த மாத்திரத்திலே, நரகத்திடை-நரகத்தினிடமாக, எய்தினான்-சார்ந்தான், (ஆதலின், எவரும் இத்தகைய பாபகர்மங்களைச் செய்யாதொழிவாராக), எ-று.

(வி-ரை) ''தான் கேட்ட தருமோபதேசங்ககளை மனத்திற் கொள்ளாதவனாகி, பாபகர்மங்களைச் செய்து தாகசுர பீடிதனாய்த் தன் வித்தியாதர சம்பத்தையும் அனுபவிக்காமல் மாமிசவுணவுண்டதனால், அரவிந்தனென்பான், இறந்தபின் நரகத்தை யடைந்தானாதலின், நற்கதியடைய விரும்புவோர் இத்தகைய பாபகர்மங்களைச் செய்யாதொழிவாராக'' என்பது இதன் கருத்து. அரவிந்தன் கதை யாவது:- ''அளகாபுரிக்கரசனாகிய அரவிந்தனென்பான், வித்தியாதர சம்பத்தைப் பெற்று, தான் கேட்டுக்கொண்ட தருமோபதேசங்களை மறந்து, கெட்ட சிந்தையுடையவனாய்ப் பாபகர்மங்களை அனுஷ்டித்துத் தான் பெற்ற வித்தியாதர சம்பத்தையும் அனுபவிக்காமல், மரணம் சம்பவித்தபோது, தான்செய்த பாபகர்மங்களினால் தாகச்சுரவியாதி பீடிதனாயினான். அப்பொழுது அவன் அப்பியசித்த வித்தைகளும் அவனுக்கு வசமாகாது ஒழிந்தன. அதனால் அவன், தன் ஜேஷ்ட புத்திரனாகிய அரிச்சந்திரனை அழைத்து அவனிடத்தில், 'புத்திரனே! தாகச்சுரத்கால் எனது சர்வாங்கமும் தகிக்கப்படுகின்றது; சுரசாந்தியின் பொருட்டு என் தேகத்தில் இடப்பட்ட சந்தனக்குழம்பு முதலியவைகளும் கரிந்துபோகின்றன; ஆதலால், நீ உத்தரகுருஷேத்திரத்து சீதா நதிதீரத்திலுள்ள சோலைப்பிரதேசங்களில் என்னை உனது வித்தைகளால் கொண்டுபோய்ச் சேர்ப்பாயானால் அங்குள்ள கல்பதருவனங்களிடையே சீதஜலத்தோடு கலந்தசைகின்ற மந்தமாருதம்வந்து வீசுவதால் எனது சுரவெப்பமானது தணியும்,' என்றனன். அதுகேட்டு அவ்வரிச்சந்திரன் அவ்வாறே செய்கவென்று தனது ஆகாசகாமினீ வித்தைகளை ஏவினன். அவை அரவிந்தனுடைய பாபத்தால் அவ்வாறு செய்யாதொழிந்தன. அதனால் அரிச்சந்திரன், 'தாகச்சுரமகாவியாதி அசாத்தியம் போலும்,' என்று நினைந்து சோகமுடையவனாய்ச் செய்வதொன்றும் அறியாமலிருந்தான். அப்படியிருப்ப ஒருநாள், அரவிந்தன் படுத்திருந்த இடத்திற்கு மேலே இரண்டு பல்லிகள் சண்டையிட்டுக்கொள்ள அவற்றினின்றும் இரத்தத் துளிகள் அரவிந்தன் சரீரத்தின்மேல் வீழ்ந்தன. அவை வீழ்ந்தவிடத்தில் சுரவெப்பமானது தணிந்தது. அதுகண்டு அரவிந்தன், 'நமது சுரவெப்பந் தணிவதற்கு இதுவே

பரமௌஷதம் போலும்,' என்று கருதித் தனக்கேற்பட்ட விபரீத ஞானத்தினாலே, 'இரத்தத்தில் மூழ்கினால் நமது சுரமுழுதும் தணியும்' என நிச்சயித்து, ஓரிடத்தில் மிருகக் கூட்டங்கள் நிற்கக்கண்டு உடனே தன் கனிஷ்ட புத்திரனாகிய குருவிந்தனென்பவனை நோக்கி, 'இந்த மிருகக் கூட்டங்களைக் கொன்று எனக்கு ருதிரவாவி சமைத்துத் தருவாயாக,' என்றனன். அது கேட்டுக் குருவிந்தன் பாபத்திற்கஞ்சி என் செய்வோமென்று கவலையுடன் போய்த் திவ்விய ஞானியாகிய, ஒருமுனிவரால் தன் தந்தை மரணமடைந்து நரக மெய்துவா னென்பதை யுணர்ந்து அக்காரியத்தைச் செய்யச் சம்மதி யில்லாதவனாயிருந்தான். அப்படியிருந்தும் அவன், 'தந்தை வாக்கி யத்தையும் நிறைவேற்ற வேண்டுமே,' என்று உதிரம்போன்ற வேறொரு வஸ்துவால், ஒருவாவியை உண்டாக்கி அரவிந்தனுக்குக் காட்டினன். அவன் அதனை, மிகுந்த திரவியங் கண்ட தரித்திரன் போலக் கண்டு மகிழ்ந்து அவ்வாவியில் வீழ்ந்து மூழ்கி, அதிலுள்ள போலி உதிரத்தை முகந்து பருகிக் கொப்பளித்தான். அவ்வாறு கொப்பளிக்குமளவில் அது உதிரம்போன்ற வேறு திரவமென்பது அவனுக்குத் தெரிந்தது. அதனால் அவன் அவ்வாறு செய்த குருவிந்தன்மீது கோபங்கொண்டு கத்தியையுருவிக் கொண்டு அவனை, வதைக்கும் பொருட்டு ஓடினான். அப்படி ஓடும் போது அவன், அடிதளர்ந்து தான் வைத்திருந்த கத்தியின் வாயிலேயே வீழ்ந்திறந்து நரககதியை அடைந்தான்'' என்பதாம். (௩௦)

31. மான வேன்மன்னன் மாதவத் தார்க்குண்டி
தான மீயுழிச் சத்திய பாமையும்
ஊன மின்மனத் தாலுடன் பட்டனள்
ஈன மில்குரு வத்திடை யெய்தினாள்.

(இ-ள்) மானம்-பெருமை பொருந்திய, வேல்-வேலாயுதத்தை யுடைய, மன்னன்-ஸ்ரீ ஷேண மகாராஜன், மாதவத்தார்க்கு-சிறந்த தவத்தினையுடையவர்க்கு, உண்டி-உணவை, தானம்-தானமாக, ஈயுழி-கொடுக்குமிடத்து, சத்தியபாமையும்-சத்திய பாமை என்ப வளும், ஊனம் இல்-குற்றம் அற்ற, மனத்தால்-உள்ளத்தினாலே, உடன் பட்டனள்-அதற்கு இசைந்தவளாகி, (அப்புண்ணியவிசேஷத் தினாலே), ஈனம் இல்-குறைவுபாடில்லாத, குருவத்திடை-உத்தரகுரு வென்னும் போக பூமியை, எய்தினள்-அடைந்து சுகம்பெற்றாள், எ-று.

(வி-ரை) 'ஸ்ரீஷேண மகாராஜனால், கபிலன் என்னும் தாசி புத்திரனுக்கு விவாகஞ் செய்விக்கப் பெற்ற சத்திய பாமை யென் பாள், அம் மகாராஜன், தபஸிகளுக்கு ஆகார தானத்தினைச் செய்யுங்

காலத்தில் தானும் அதற்கு உடன்பட்டிருந்த புண்ணிய விசேஷத் தால் உத்திர குரு வென்னும் போகபூமியிற் சார்ந்து சௌக்கியத்தை யடைந்தனள்' என்பது ஸ்ரீ புராண கதை. இது ஷை ஸ்ரீபுராணம் சாந்தி தீர்த்தங்கரர் மான்மியத்திலுள்ளது. [பக் 289] மாதவத்தார்-ஆதித்திய மதிகள் அரிஞ்சயர் எனபார். உண்டிதானம்-ஆகாரதானம்; இது ஆகார, அபய, ஔஷத, சாஸ்திரமென்னும் நால்வகைத் தானங்களு ளொன்று; அதாவது: மகாதபஸிக்கு விசுத்த ஆகாரத்தினை அளித் தல். குருவம்-உத்தரகுருவென்னும் போக பூமி; இது, புண்ணியஞ் செய்தாரெய்திப் போகத்தை யனுபவித்தின்புறுதற்குரியது. உழி-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. சத்திய பாமையும் என்பதிலுள்ள உம்மை இழிவு சிறப்புப் பொருளது. இறந்தது தழுவியதுமாம்.(௩௧)

32. கயக்கில் கற்புடைப் பார்ப்பனி போசனம்
வியக்கப் பட்டவள் வேதியற் கில்வழி
மயக்கின் மாதவத் தாற்குண்டி யீந்தவள்
இயக்கி யாயின ளென்பதுங் கேட்டுமால்

(இ-ள்) வியக்கப்பட்டவள் - எல்லோராலும் வியந்து கொண் டாடப்பட்டவளாகிய, கயக்கு இல் - வெறுத்தலில்லாத, கற்புடை-பதிவிரதா தருமத்தையுடைய, பார்ப்பனி - ஒரு பிராமணப் பெண் ணுனவள், போசனம் - உணவு, வேதியற்கு - தன் கணவனுகிய பிராமணனுக்கு, இல்வழி - இல்லாத போதும், மயக்கு இல் - மயக்க மில்லாத, மாதவத்தாற்கு-சிறந்த தவத்தையுடைய முனிவனுக்கு, உண்டி - உணவை, ஈந்தவள் - கொடுத்தவளாய், (அப்புண்ணிய வசத்தினுலே), இயக்கியாயினள் - தருமதேவி யென்ற யக்ஷியாகிப் பிறந்தனன், என்பதும் - என்ற சரித்திரமும், கேட்டும் - கேட்டிருக் கின்ரேம், (ஆதலின் ஆகார தானத்தினை விசேஷமாகச் செய் வோமாக), எ-று.

(வி-ரை) தன் கணவனுக்கு ஆகாரம் இல்லாத காலத்தும் எதிர்ப்பட்ட முனிவர்க்குப் பிரயாசையுடன் அன்னமிட்ட பிராமணப் பெண் அத்தான பலத்தால் யக்ஷியாயினளாதலின், மனிதர் எவ்வகைக் கஷ்ட காலத்திலும் ஆகாரதானத்தினை அவசியம் செய்தல் வேண்டுமென்பதும், அதனுல் நற்பயனுண்டாமென்பதும் இதனுற் பெறப்படும். பார்ப்பனியின் கதையாவது :— "திருமலை நகரில் சோமசன்மாவென்னும் ஒரு பிராமணனுடைய மனைவியாகிய அக்னிலா வென்பாள் ஒருதினம் தன் கணவனுக்கு ஆகார மில்லாமலிருக்கவும், வரதத்தாசாரிய ஜினமுனிவர் வீதியில் வரக் கண்டு அவரை எதிர்கொண்டழைத்து அவருக்கு நவபுண்ணியக் கிரமத்தினுல் ஆகாரதானம் செய்தாள், அதைக்கண்ணுற்ற

சோமசன்மா சில பிராமணர்களுடைய துர்ப்போதனையால் அவளை ஹிம்சித்தான். அத்துன்பத்தைச்சகியாத அவள், தன் புத்திரரிருவருடன் திருமலைக்குச் சென்று அங்கே தன்னால் தானம் பெற்ற முனிவரிருக்கக் கண்டு அவரிடம் நடந்ததைக் கூறிச் சம்சாரபந்தம் நீங்கும் மார்க்கத்தினைத் தனக்கு உபதேசிக்குமாறு வேண்ட அவர் அவ்வாறே அம்மார்க்கத்தினை யுபதேசித்தனர். அவள் அவ்வுபதேசங்களைப் பெற்று அங்கிருந்தனள். அப்போது அவளுக்குத் தீங்கு செய்யச் சோமசன்மாவைத் தூண்டிய பிராமணர் அக்கிராரங்கள் தீப்பட்டு வெந்தன. சோமசன்மன் இல்ல மாத்திரம் அவனுடைய மனைவி முனிவர்க்கு ஆகாரதானங் கொடுத்த புண்ணியத்தால் எரியாமலிருந்தது. இவ் வதிசயத்தைச் சகல பிராமணர்களும் கண்டு ஆச்சரிய முற்றுச் சோமசன்மாவின் மனைவி, முனிவர்க்கு இட்டு மிகுதியாயிருந்த ஆகாரத்தை உண்டார்கள். அத்தனை பேரும் புசித்தும் அஃதெள்ளளவுங் குறையாமலிருந்தது. அதனால் அவர்கள், 'இது சத்பாத்திரதான மகிமையே' என்று அக்னிலாவைப் புகழ்ந்து அவளைத் தேடி யழைத்து வரும்படி சோமசன்மனுக்குக் கூறினார்கள். சோமசன்மன் அவளைத் தேடிச் சென்றான். அப்போது, சூரியாஸ்தமன காலமாய் விட்டமையால் வாதத்தாசாரியர், தம்மிடமிருந்த அக்னிலாவை நோக்கி, 'இப்போது இராக்காலஞ் சமீபித்து விட்டபடியால் நீ இங்கிருப்பின் லோகாபவாதம் உண்டாகும்; ஆதலின், நீ செல்க' என்றனர். அக்னிலா அவ்விடத்தை விட்டு நீங்கி வந்து, வழியில் தனது தானபுண்ணிய வசத்தால் உலர்ந்த மரமானது செழித்துக் கனிகளையுடையதாயிருக்கவும், நீர் வற்றியிருந்த சுனையொன்று நீர் சுரக்கவும் கண்டு தன்னுடைய பிள்ளைகட்கு அம்மரக் கனிகளைப் பறித்துக் கொடுத்து அவர்களை உண்ணச்செய்து அச்சுனை நீரையும் பருகுவித்து அவ்விடத்தில் பஞ்ச நமஸ்கார மந்திரத்தை ஜெபித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்; அவளைத் தேடி வந்த சோமசன்மா, மிருக பயத்தினால் கையில் வாளேந்தி மறுநாளுதயத்தில் அங்கே வந்தான். அக்னிலா அவனைக் கண்டதும், அவன் தன்னைக் கொல்ல வருவதாகக் கருதி, ஸ்ரீநேமி பகவானைத் துதித்து அச்சுனையிற் குதித்து தேகம் நீத்து உடனே எக்ஷியாய் தன் பிரிவுக்காக அழுதிருந்த பிள்ளைகளைத் தேற்ற முன் வடிவங்கொண்டு அவர்களைத் தேற்றியிருந்தனள். அப்போது சோமசன்மன் அவளைக் கண்டு 'நான் செய்த குற்றத்தை மன்னித்து நீ என்னுடன் வருக' என்று அவள் கையைப் பிடிக்கப்போனான். உடனே அவள் எக்ஷி வடிவத்துடன் ஆகாயத்தெழும்பிநின்று, 'உன் மனைவியாயிருந்த யான் தானபிரபாவத்தால் எக்ஷியாயினேன்; நீ இனி என்னை விரும்பாது உன் மக்களுடன் இல்லஞ் சேர்வாயாக' என்று கூறித் தனக்குரிய இடஞ்சென்றாள்; பின்பு சோமசன்மனும் பத்தினி

சோகத்தால் தன் பிள்ளைகளுடன் அச்சுனையில் வீழ்ந்து பிராணனை விட்டு ஷை எக்ஷிதேவிக்கு வாகனமாய்ப் பிறந்தான். *பிள்ளைகள் அவளுக்குப் புத்திரராகப் பிறந்து நற்கதி பெற்றனர். இது ஸ்ரீ சைல மகாத்மியத்திற் கண்டது. தர்ம தேவதை கதையிலு முள்ளது. (கூஉ)

௩௩. சந்தனை யென்னு மாதர் சாரணர்க் கண்டு முன்றில்
வந்தனை செய்து பேணி வரகுநீர்ப் புற்கை யீந்தா
ளிந்திர ருவந்து நோக்கி யெல்லையில் செம்பொன் மாரி
அந்தரத் தமர ரார்ப்பச் சொரிந்துவந் தருச்சித் தாரே.

(இ-ள்) சந்தனை என்னும் மாதர்-சேடகமகாராஜன் புத்திரியாகிய சந்தனை யென்கின்ற பெண்ணானவள், (துன்பத்தை அடைந்திருந்த காலத்தில்), சாரணர்-ஸ்ரீவர்த்தமான சுவாமிகளை, கண்டு-பார்த்து, முன்றில்-வீட்டின் முன்னே, வந்தனை செய்து-வணக்கம் புரிந்து, பேணி-விரும்பி, வரகு நீர்ப்புற்கை-(அவர் தரிசனமகிமையினாலே திவ்ய நெல் அன்னமாகமாறிய) நீரோடு கலந்த வரகுக் கூழை, ஈந்தாள்-அவர்க்களித்துத் தன்னிடர் நீங்கப் பெற்றாள், (அப்புண்ணியத்தினாலே), இந்திரர்-இந்திரர்கள், உவந்து-சந்தோஷித்து, நோக்கி-அவளைப் பார்த்து, எல்லையில்-அளவில்லாத, செம் பொன் மாரி-சிவந்த பொன் மழையை, சொரிந்து-பொழிந்து, அந்தரத்து-பொன்னுலகத்திலுள்ள, அமரர்-தேவர்கள், ஆர்ப்ப-தேவ துந்துபியை முழக்கி ஆர்ப்பரிக்க, வந்து-மலரோடு கலந்த மந்தமாருதத்தாலே, அருச்சித்தார்-புஷ்பங்களைத் தூவி அவளுக்கு அர்ச்சனை புரிந்தார்கள் (அதனால் அவள் மிக்க நன்மையடைந்தாள்), எ-று.

(வி-ரை) சந்தனை யென்னும் இராஜ குமாரத்தி, தான் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகி யிருக்கும்போதும், பெரியோர்க்கு ஆகாரதானமீந்து நன்மை பெற்றாள்; ஆதலின், எல்லோரும் ஆகாரதானத்தினை அவசியம் செய்யவேண்டு மென்பது இதன் கருத்து. இங்கே சந்தனையை 'மாதர்' என்றது, ''உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும், இழிப்பினும் பால்திணை யிழுக்கினு மியல்பே'' என்றபடி [நன்னூல் 378] உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாக மாறி வந்த பால் வழுவமைதி, சாரணர்-ஜைன முனிவரர்; இதற்கு எங்கும் சஞ்சரிப்பவர் என்று பொருள்; இஃதிங்கே ஸ்ரீவர்த்தமான சுவாமியைக் குறித்தது. இவள் ஸ்ரீவர்த்தமான சுவாமிக்கு ஆகாரதானஞ் செய்ததால் அடைந்த நன்மையாவது: 'பஞ்சாச்சரியங்களைப் பெற்ற

* தேவர்கட்கு மகப்பேறு கிடையாது என்பதை இங்கே நினைவு கூர்க.

மையாம்; பஞ்சாச்சரியங்களாவன:—தேவர்களாற் சொரியப்பட்ட பொன்மாரி, அவரால் முழக்கப்படும் தேவ துந்துபி, சுகந்த மந்த மாருதம், தேவர்களாற் செய்யப்பட்ட ஸ்துதி, அவர்களால் அருச்சிக்கப்பட்ட புஷ்பமாரி என்பனவாம்; செம்பொன்மாரி எனவே கனகவர்ஷமும், அமரர் ஆர்ப்ப எனவே, தேவ துந்துபியும், தேவஸ்துதியும், அருச்சித்தார் எனவே புஷ்பவர்ஷமும், வந்து எனவே மந்த மாருதமும் அமைதல் காண்க. வந்து அருச்சித்து-மூன்றும் வேற்றுமைத் தொகை; வந்தால் அருச்சித்து என விரியும். 'அருச்சித்தார்' என்றதன்பின், 'அதனால் அவள் நன்மையை அடைந்தாள்; ஆதலின் எல்லோரும் ஆகார தானத்தினை இயற்றல் வேண்டும்' என்ற சொற்கள் இசை யெச்சமாக வருவித்துரைக்க வேண்டும்.

*சந்தனை ஆகாரதானத்தால் நன்மையடைந்த கதையாவது:—* சந்தனை யென்பாள், சேடக மகாராஜனுக்குப் புத்திரியாகப் பிறந்து பருவமடைந்திருந்தாள். அப்படி யிருக்கும்போது ஒரு வித்தியாதரன் ஒரு நாள் இவளை, பந்துக்களினின்றும் பிரித்தெடுத்துக்கொண்டு போய்த் தன் இருப்பிடத்திற்கு இவளுடன் சென்றால் தன்மனைவி கோபிப்பாளென்றெண்ணி, ஒரு காட்டிலே இவளைப் போட்டுவிட்டுப் போக, ஒரு வேடன் கண்டு அழைத்துக்கொண்டு போய், வத்ஸ விஷய கௌசாம்பி நகரத்திலே விருஷசேனனென்னும் வைசியனிடத்தே திரவிய லாபம் பெற்றுக்கொண்டு கொடுப்ப, அவன் இவளைப் பெற்றுப் புத்திரிபோலப் பாராட்டி வளர்த்து வந்தான். அப்போது அவ்வைசியன் மனைவியாகிய ஸுப்பிரபை யென்பவள் தன் கணவன், சந்தனையிடம் தோஷமான நடக்கையை யுடையவனா யிருப்பானென்று சந்தேகமுற்று, சந்தனைமேல் வெறுப்புக் கொண்டு, அவளுக்கு வரகாகாரத்தை சராவபாத்திரத்திலே யிட்டளித்தும், கால்களிலே விலங்கிட்டும், நீல வஸ்திரத்துண்டை உடையாகக் கொடுத்தும் அவளை வருத்தி வந்தாள். அக்காலத்தில், பகவான்-ஸ்ரீ வர்த்தமான சுவாமி அங்கே எழுந்தருளினர். அவ்வர வுணர்ந்த சந்தனை அவரை எதிர்கொண்டழைக்க வேண்டுமென்று மிகுதியும் நினைத்தனள்; அங்ஙனம் நினைத்த பொழுதே அவளுக்கிடப் பட்டிருந்த விலங்கு தானே கழன்றது; சிதைந்த கூந்தலும் அழகு பெற்றது; நீல வஸ்திரத்துண்டும் உயர்ந்தபட்டு வஸ்திரமாயிற்று; தேகமுழுவதும் ஸர்வாபரணாலங்கிருதமாயிற்று; வரகுக்கூழும் திவ்விய நெல்லன்ன மாயிற்று; சராவபாத்திரம் ஸ்வர்ணபாத்திர மாயிற்று; உடனே சந்தனை அதிக ஆனந்தத்தோடு நவ புண்ணியக் கிரமத்தால் சுவாமிகளை எதிர் கொண்டழைத்து, முன் வரகுக்கூழாயிருந்து நெல்லன்னமாக மாறிய திவ்விய ஆகாரத்தினை அவர்கட்களிக்க, அந்தத் தான மகிமையால் பஞ்சாச்சரியத்தை யடைந்து, தன் பந்துக்களிடம்

போய்ச் சேர்ந்து மேன்மைபெற்ருள். இக்கதை, ஸ்ரீபுராணம் [பக், 514-15] ஸ்ரீ வர்த்தமான தீர்த்தகர புராணத்திற் கண்டது.
(ங.ங.)

34. பற்றுள மென்ரூேர் பாவை பாவமும்
பழியு மாக்கிச்
சிற்றுள மிலேச்சர் பொல்லா நாற்கதி
நவையை நூக்கிச்
சொற்றுள வாய துன்பம் பயத்தலிற்
றுறந்து போகிக்
கற்றறி வுடைய மாந்தர் கடிந்தன
ரதனை யன்றே.

(இ-ள்) பற்று உள்ளம் என்று—ஆசை பொருந்திய உள்ளத்தை உடையவளாகிய, ஓர் பாவை-ஒரு பெண்ணுனவள், பாவமும்-பாதகத்தையும், பழி-நிந்தையையும், ஆக்கி-செய்ய, (அவை அவளுக்கு), சிற்று உள்ளம்-அற்ப எண்ணத்தையுடைய, மிலேச்சர்-சண்டாளர்க்குரிய, பொல்லா-கெட்டனவாகிய, நாற்கதி-நான்குகதியாகிய-நவையை-குற்றத்தை, நூக்கி-அடைவிக்க, (அதுகண்டு அந்நாற்கதி நவையானது), சொற்றுளவாய-வேதனை உடையனவென்று அறிவுடையோரால் கூறியனவாகிய, துன்பம்-துன்பங்களை, பயத்தலின்-கொடுத்தலினுலே (அதற்கஞ்சி), கற்றறிவுடைய-நூல்களைப் படித்து அதனுலே நல்ல ஞானங்களைப் பெற்ற, மாந்தர்-மனிதர்கள், (உலக பந்த கர்மங்கள் பாவத்தையும், பழியையு முண்டாக்குமென்று கருதி அவற்றை), துறந்து போகி-விலக்கித் துறவடைந்து தவத்திற்குச் சென்று, அதனை-அந்நாற்கதித் துன்பத்தை, கடிந்தனர்-நீக்கினுர்கள், (ஆதலின் வீட்டின்பம் பெற விரும்புவோர் உலகப் பற்றுக்களைத் துறந்து தவஞ்செய்க,) எ-று.

(வி-ரை) உலக ஆசை மிகுந்த மனத்தையுடைய ஒரு பெண், பாவமும், பழியுமாகிய காரியங்களைச் செய்து, சண்டாளர்க்குரிய நாற்கதித் துன்பத்தை அனுபவித்தாள்; அது கண்டு அறிவுடையோர் அக்கெட்ட கர்மங்களை விட்டு நீங்கித் துறவடைந்து அந்நாற்கதித் துன்பத்தை நீக்கி முத்தி யடைந்தனர்; ஆதலின், முத்தியடைய விரும்புவோர் இங்ஙனம் உலகப் பற்றினை யொழித்துத் தவஞ்செய்க என்பது இதன் கருத்தாம். 'அழுக்காறெனவொருபாவி' என்னும் குறளில், அழுக்காறென்பது குணவாகு பெயராய் அதனை யுடையானை யுணர்த்தினமைபோல, 'பற்றுளம்' என்பது அதனை யுடையாளை யுணர்த்திற்று. என்று என்னும் இடைச் சொல் இங்கே ஆகிய என்

னும் பொருள் பயந்து, பெயரோடு இயைந்து நின்றது, 'அழுக்காறென வொருபாவி' என்பதில் எனவென்னும் இடைச் சொல் நின்றது போல; ''வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறினும், எனவெனு மொழிவரு மென்று மற்றே'' என்பது விதி. [நன்னூல் 424] இனி, 'என்ற ஓர்' என்பது, 'ஒன்றோர்' எனத்தொகுத்தலாகி வந்ததெனக் கொண்டு, 'பற்றுள்ளத்தை யுடையவளென்று சொல்லப்பட்ட ஓர்பாவை'யெனப் பொருள் கோடலு மொன்று. 'பற்றுளமாகிய பாவை' என்பது இரு பெயரொட்டுப் பண்பு. ஆக்க, நூக்க என்னும் செயவெனெச்சங்கள், ஆக்கி, நூக்கி எனச் செய்தெனெச்சங்களாய் மாறி வந்தன, இங்ஙனம் எச்சங்கள் திரிந்து வருவதற்கு, ''சொல் திரியினும் பொருள் திரியா வினைக்குறை'' என்பது விதி. [நன்னூல் 346] நாற்கதிகளாவன:— தேவகதி, மனுஷகதி, திரியக்கதி, நரககதி என்பனவாம். அன்றே-ஈற்றசை. (௩௪)

35. ஓங்கிய தவத்தின் மிக்க வுறுதவர்க்
குறுதி நாடின்
ஈங்கிரண் டல்ல தில்லை யிசைகொடா
நிற்ப மண்மேற்
பாங்கமை செல்வ ராகிப் பகுத்துண்டு
வாழ்த லொன்றே
தாங்கிய தவத்தின் மிக்க தவநிலை
நிற்ற லொன்றே.

(இ ள்) ஓங்கிய - உயர்ந்த, தவத்தின் மிக்க - தவத்தினாலே மேன்மை யடைந்த, உறு - நன்மார்க்கத்திற் பொருந்தி யிருக்கின்ற, தவர்க்கு - தவத்தினையுடையவர்க்கு, ஈங்கு - இவ்விடத்திலே, நாடின் - ஆராய்ந்து பார்க்குமிடத்து, உறுதி - நிச்சயமான பொருள், (அதாவது புருஷார்த்தம்), மண்மேல்—இப்பூமியில், (அவர்கள்), பாங்கு அமை - அழகு பொருந்திய, செல்வராகி - ஐசுவரியத்தை யுடையவராகி, பகுத்து உண்டு - தம்பொருளைப் பலருக்கும் பகிர்ந்து கொடுத்துத் தாமும் உண்டு அனுபவித்து, வாழ்தல் ஒன்று-ஜீவித்தல் ஒன்றும், தாங்கிய - மேற்கொண்ட, தவத்தின்மிக்க - பூர்வ புண்ணியத்தினாலே மிகுந்த, தவநிலை - தபசின் நிலையிலே, நிற்றல் ஒன்று - நிற்பது ஒன்றும் (ஆகிய), இரண்டு அல்லது-இல்லறம் துறவறமென்னும் இரண்டேயல்லாமல், இசை - கீர்த்தியை, கொடா நிற்ப - கொடுக்கக் கூடியவைகள், இல்லை - வேறில்லை, (ஆதலின், அறிஞர் இரண்டிலொன்றைச் செய்யவேண்டும்), எ—று.

(வி-ரை) தவமுடையார்க் குறுதிப் பொருள், முறையோடு செய்யும் இல்லறமுந் துறவறமுமாகிய இரண்டுமேயாதலின், மனிதர் இவ்விரண்டிலொன்றைச் செய்யவேண்டு மென்பது இதன் கருத்து. 'தவமுடையார்க்கு உறுதி, மண்மேல், பகுத்துண்டு வாழ்தலும், தவநிலையில் நிற்றலுமாகிய இரண்டல்லது இசைகொடா நிற்ப (வேறு) இல்லை' என இயைக்க. ஆசிரியர், துறவையே சிறப்பித்துக் கூறிவரினும், இங்கு இல்லறத்தையும் அவசியமான தெனக் கூறியது பகுத்துண்டு வாழுதலாகிய இல்லறமும் நற்கதி யளித்தற்கு ஏதுவாயிருத்தல் பற்றியென்க. முன்னே துறக்கத் தக்கதெனவென்று கூறியவை, பற்றுளத்தோடு கூடிய இல்லறங் களாம். தாங்கியதவம் - மேற்கொண்ட ஜன்மாந்தர புண்ணியங்கள். இல்லறம்-சிராவம் தர்மம்; துறவறம்-யதிதர்மம். இவையிரண்டுமே நற்கதியளித்தற் குரியன; ஆதலினாலேயே, 'உறுதி இரண்டல்ல தில்லை' என்றார் ஆசிரியர். உறுதவர் - வினைத்தொகை. உறுதி- நிச்சயம்; அஃது இங்கே ஆகுபெயராய் நிச்சயமான பொருளை யுணர்த்திற்று. ஒன்றே என்னும் இரண்டு சொற்களின் ஈற்று ஏகாரங்களிரண்டும் எண்ணுப் பொருளன. (௩௫)

86. இல்லறத் தியல்பு குன்ற வேந்துபூண்
முலையி னார்தோள்
புல்லற புல்லி மண்மேற் பூவணை
பொருந்த லொன்றே
நல்லறத் திறைவன் சொன்ன நாற்கதி
நவையை நீக்கும்
தொல்லறத் துணிவி லாதார் துன்பத்தைத்
துணிந்து நின்றார்.

(இ-ள்) இல்லறத்து-குடும்ப தருமத்தினுடைய, இயல்பு- இலக்ஷணங்களில், குன்ற-குறைவுபடாத, பூண் ஏந்து-ஆபரணங் களைத் தாங்குகின்ற, முலையினார் - தனபாரங்களையுடைய மனைவி யரின், தோள் - தோள்களை, புல்லற - இழுக்கு நீங்க, புல்லி- இல்லற தருமத்திற் கேற்பக்கூடி, மண்மேல் - பூமியில், பூ அணை - மலர்ச் சயனத்திலே, பொருந்தல் ஒன்றே - சேர்ந்து வாழ்தலாகிய ஒரு செய்கையே, நல் அறத்து - நல்ல தருமத்தையுடைய, இறைவன்- அருகக் கடவுள், சொன்ன - கூறிய, நாற்கதி - நான்கு வகைக் கதிகளின், நவையை - துன்பத்தை, நீக்கும் - விலக்கும், தொல் - பழமையாகிய, அறத்துணிவு - இந்த இல்லறத்தின் உறுதியான செய்கை, இல்லாதார் - இல்லாதவர்கள், துன்பத்தை - மேற்கூறிய

நாற்கதி துன்பத்தை, துணிந்து நின்றூர் - உறுதி கொண்டு செய்து அதன் வழியிலே நின்றவராவார், எ - று.

(வி-ரை) இல்லற தர்மத்தின் இயற்கையிற் குறைவு படாத இல்லாளுடன் கூடி, முறைப்படி இல்லறம் நடத்துதலே, இறைவனூற் கூறப்பட்ட நாற்கதித் துன்பங்களை நீக்கி நற்கதியை யுண்டாக்கும்; ஆதலின், கிரமப்படி இல்லறத்தை நடத்துவோர் நாற்கதி நவையினின்றும் நீங்கி நற்கதி யடைவர்; பழமையாகிய இவ்வில்லறத்திற் சேர்ந்து இதனைக் கிரமப்படி நடத்துதலாய உறுதிப்பாடில்லாதவர்கள் அந்நாற்கதிகளிற் சார்ந்து அவற்ருலுண்டாம் துன்பங்களை அனுபவிப்பார்கள் என்பது இதன் கருத்து. இல்லறம் என்பது சிராவக தர்மம் எனப்படும்; முறைப்படி செய்யும் இல்லறமும், பிறப்பினை நீக்கி முத்தியின்பதை யுண்டாக்கற்கு ஏதுவாயிருத்தலின், இதனை இங்ஙனம் சிறப்பித்துக் கூறினர் ஆசிரியர். உலகப்பற்றின்றி நடத்தும் இல்லறமும் முத்திக்கு ஏதுவாம் என்பது நூல்களின் துணிபு. ''இல்வாழ்வா னென்பானியல்புடைய மூவர்க்கு, நல்லாற்றினின்ற துணை'' என்ற திருவள்ளுவர் வாக்கின்படி, இல்லறத்தான், மற்றைய மூன்று ஆச்சிரமத்தார்க்கும் துணையாயிருந்து, அறங்களை வழுவாது புரிந்து தாமரையிலைத் தண்ணீர்போல் இல்லறத்திலிருந்தாலும் அதில் பற்றின்றியிருந்து வீடுபெறுதலின், இல்லறத்தைத் துறவறத்தினும் சிறந்ததெனக் கூறுவர் பெரியோர். இதுபற்றியே திருக்குறளாசிரியரும், ''அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை யஃதூஉம், பிறன் பழிப்பதில்லாயினன்று'' என்று கூறினர். (௩௬)

87 ஈகைநற் ருன மீந்தா ரிணையிலாக்
குருவின் மிக்க
போகத்தைக் கொடுத்துப் புத்தே ளுலகமும்
கொடுத்து மண்மே
லேகநல் லின்ப மாக்கி யிறைவனற்
காட்சி யீயும்
மேகத்து மின்னே டொக்கும் விழுச்செல்வ
மதிக்க வேண்டா.

(இ-ள்) ஈகை-இரப்பவர்க்குக்கொடுத்தலாகிய கொடையையும், தானம்-பெரியோர்க்கிடும் சாஸ்திரதானம் முதலிய தானங்களையும், ஈந்தார்-கொடுத்தவர்க்கு, இறைவன்-அருகக் கடவுள், இணையில்லா-ஒப்பில்லாத, குருவில்-உத்தர குருவென்னும் போக

பூமியிலே, மிக்க-மிகுதியாகிய, போகத்தை-சுகானுபவத்தை, கொடுத்து-அளித்து, புத்தேள் உலகமும்-தேவலோக பதவியையும், கொடுத்து-நல்கி, மண்மேல்-இந்தப் பூமியின்மேலும், ஏகம்-ஒரே தன்மைத்தாக்கிய, நல் இன்பம்-நல்ல சுகத்தை, ஆக்கி-உண்டாக்கி, நற்காட்சி-நல்லதாகிய அனந்த தரிசனத்தையும், ஈயும்-கொடுப்பான், [ஆதலால் பொருளை ஈகையிலும் தானத்திலும் செலவிட வேண்டும்; அங்ஙனம் செலவிடாமல் புதைத்துக் காப்பாற்றி வைத்தால்], விழுச் செல்வம்-விரும்பத்தக்க ஐசுவரியமானது, மேகத்து மின்னோடு-மேகத்தில் தோன்றி மறையும் மின்னலோடு, ஒக்கும்-நிகர்த்துத் தோன்றி மறையும், (ஆதலால் அதனை), மதிக்க வேண்டா-நிலையுள்ளதென நம்புதல் கூடாது, எ-று.

(வி-ரை) நிலையற்ற செல்வத்தைப் பெற்றவர்கள், அஃதிருக்கும் போதே நல்ல தானதருமங்களைச் செய்ய வேண்டும்; அங்ஙனம் செய்வார்க்கு, இறைவன், உத்தர குருவின் போகத்தையும், தேவலோக பதவியையும் அளித்து, இவ்வுலகத்திலும் இருக்கும் வரையில் சுகத்தை நல்கி, முடிவில் அனந்த தரிசனத்தையும் ஈவான். ஆதலின், செல்வப் பொருளுள்ளவர்கள் விரைந்து தான தர்மங்களைச் செய்ய வேண்டும்; அப்பொருளோ மின்னலைப்போலத் தோன்றி மறைவது; அதனை நிலையுள்ளதென மதித்துத் தானமுதலியவற்றை செய்யாமல் மறந்திருக்கலாகாது என்பது இதன் கருத்து. ஈகை - ஏற்றோர்க்கு வேண்டுவன நல்கல். தானம்-சற்பாத்திரத்திலிடும் நால்வகைத் தானங்களுமாம். குரு-உத்தர குரு; இஃது அறஞ்செய்தார் போகம் அனுபவிக்கும் பூமியாம். காட்சி-அநந்த தரிசனம். இஃது அநந்த சதுட்டயங்களிலொன்று. இந்த நான்கும் வீட்டின்பம் பெறுவார்க்கு உறு பயன்களாம். அநந்த தரிசனம்-முழுதுணர்ச்சி. ஈந்தார் போகத்தைக் கொடுத்து எனக் கூட்டுக. ஈந்தார் போகத்தை-நான்காம் வேற்றுமைத் தொகை; ஈந்தார்க்குப் போகத்தை எனவிரியும். (௩எ)

38. பற்றுள மகல நீக்கிப் பாசிழைப்
பரவை யல்குற்
பொற்றொடி மகளிர் தங்கள் புணர்முலைக்
குவட்டின் வைகிச்
சுற்றத்தார் சுற்ற வாழ்த லன்றெனிற்
றுறந்து போகி
நற்றவம் புரிவில் லாதார் நடலைநோய்க்
கடலு ளாழ்ந்தார்;

(இ-ள்) உள்ளம்-மனதிலே, பற்றுநீக்கி-ஆசையை அகற்றி, பாசிழை-பசிய ஆபரணங்களையும், பரவை அல்குல்-பரந்த அழகிய கடிதடத்தையும், பொற்றொடி-பொன்னாலாகிய வளையலையுமுடைய, மகளிர் தங்கள்-இல்லக்கிழத்திகளாகிய பெண்களின், புணர்-இணையாகிய, முலைக்குவட்டின்—தனங்க ளென்னும் மலைகளின் மேல், வைகி—சேர்ந்து (அதாவது : மனைவியரோடு கூடி இல்லறம் நடத்தி), சுற்றத்தார்-பந்துக்கள், சுற்ற-தம்மைச்சூழ, வாழ்தல்-இல்லறத்தில் வாழ்தல், அன்றெனில்—அஃதில்லாவிடில், துறந்து போகி-இல்லறத்தைவிட்டு நீங்கிக் காட்டிற்குச் சென்று, நற்றவம்-நல்ல தவத்தை, புரிவு-செய்தல், (ஆகிய இவ்விரண்டில் ஒன்று), இல்லாதார்-இல்லாதவர்கள், நடலை-துன்பமாகிய, நோய்க்கடலுள்—பிணிவாதியிலே, ஆழ்ந்தார்-மூழ்கினவராவார், எ-று.

(வி-ரை) ''பற்றுற்றவர் போலிருப்பர்பற்றறற்றவரே'' என்ற நியாயப்படி, இல்லறத்திலிருந்தாலும் உலகப்பற்றின்றிப் பற்றுடையவர் போல நடித்துக்கொண்டு, இல்லக் கிழத்திகளோடு கூடி மோக்ஷ விருப்பொன்றே யுடையவர்களாய்ச் சுற்றந்தழுவி இல்லறம் நடத்துதலையாவது, அல்லது, அவ்வில்லறத்தைத் துறந்து போய்த் தவஞ் செய்தலையாவது புரியாதவர்கள் துன்பக் கடலில் மூழ்குவார்கள் என்பது இதன் கருத்து. பற்றுளத்தோடு கூடிய இல்லறம் பிறவிக்கு ஏதுவாம்; பற்றை நீக்கி நடத்தப்படும் இல்லறம் துறவறத்தால் அடையப்படும் முத்தியையும் நல்கிவிடும். ஆதலின், 'பற்றுளமகல நீக்கிப் பாசிழைப் பரவையல்குற் பொற்றொடி மகளிர் தங்கள் புணர் முலைக் குவட்டின் வைகிச் சுற்றத்தார் சுற்றவாழ்தல்'' என்றார் ஆசிரியர். துறவறத்தைக் காட்டினும், இல்லறம் அதிலிருந்தபடியே அகத்தில் பற்றின்றி ஒழுக வேண்டியதாதலின் மிக்க பிரயாசையை யுடையதாம். ஆதலின் அதனை முதலிற் கூறி அதைச் செய்ய முடியாத பக்ஷத்தில் துறவை யேனும் செய்தல் வேண்டும் என்று துறவறத்தைப் பிற் கூறினர். மனையாளோடு மனமொத்து வாழ்தலும், சுற்றந்தழுவுதலுமே இல்லறத்திற்குச் சிறந்தவைகளாதலின், ஆசிரியர், அவற்றை இல்லறத்திற்கு இங்கு விசேஷமாக எடுத்துக் கூறினர். ஆகவே பற்றற்ற இல்லறத்தை யேனும், துறவறத்தை யேனும் நடத்திறோரே நற்கதி யடைவார்; மற்றையர் பிறந்திறந்து துன்பக் கடலுள் மூழ்குவர் என்பது இச்செய்யுளால் உணரப்படும். பாசிழை-பண்புத்தொகை. பரவை-பரப்பு. பொற்றொடி-மூன்றும் வேற்றுமையுருபும்பயனு முடன்றொக்க தொகை. புரிவு-தொழிற் பெயர். ஆழ்வார் ஆழ்ந்தார் என வந்தது தெளிவினால் ஏற்பட்ட காலவழுவமைதி,

(௩அ)

89. கலையெலா நிறைத்த லொன்றோ கதிர்நகைப
பவளச் செவ்வா
யலைகடலமிர்த னாரோ டகிற்புகை
யளாய சேக்கை
முலையுற முயங்க லொன்றோ முனிவனம்
புகுத லொன்றோ
புலைகொலை களவோ டொன்றிப் பொழுதவங்
கழிப்ப ரன்றே.

(இ-ள்) (அறிவற்ற மனிதர்), கலை எல்லாம்-சாஸ்திரங்களை யெல்லாம் (பிரமசரிய நிலையிலிருந்து கற்று), நிறைத்தல் ஒன்றோ-மனதில் நிறைத்துக் கொள்ளுதலாகிய ஒரு காரியமோ, (செய்யார்), கதிர்-பிரகாசம் பொருந்திய, நகை-தந்தவரிசைகளையும், பவளச் செவ்வாய்-பவளம் போன்ற சிவந்த வாயையும் உடைய, அலைகடல்-அலைபொருந்திய சமுத்திரத்தில் தோன்றிய, அமிர்து அன்னாரோடு-அமுதத்தை நிகர்த்த இனிமை வாய்ந்த இல்லக் கிழத்திகளோடு, அகில் புகை-அகிலின் புகையானது, அளாய-கலந்த, சேக்கை-சயனத்தில், முலை உற-கொங்கைகளிற் பொருந்த, முயங்கல் ஒன்றோ-சேர்ந்து இல்லற வின்பத்தை அனுபவித்தலாகிய ஒரு காரியமோ, (செய்யார்), முனிவனம்-முனிவர்கள் வாசம் செய்கின்ற காட்டிலோ, புகுதல் ஒன்றோ-புகுந்து தவம் செய்தலாகிய ஒரு காரியமோ (செய்யார்), புலை-ஊன் தின்னுதலாகிய புலைத்தொழிலினும், கொலை-கொல்லுதற்றொழிலிலும், களவோடு-சோரத்தொழிலிலும், ஒன்றி-பொருந்தி, பொழுது-நேரத்தை, அவம்-வீணே (பாவமாகிய வழியில்), கழிப்பர்-போக்குவர், எ-று.

(வி-ரை) அறிவற்ற மனிதர், பிரமசரிய நிலையினராய்ச் சாஸ்திரங்களைச் கற்றலையோ, மனைவியரோடு கூடி இல்லற தர்மத்தை நடத்துதலையோ காட்டிற்குச்சென்று தவம்புரிதலையோ செய்யார்; புலை, கொலை, களவு ஆகிய இவற்றைச் செய்து வீணே காலத்தைக் கழிப்பர் என்பது இதன் கருத்து. ஆகவே, மக்களாய்ப் பிறந்தோர் பிரமசரிய நிலையிற்சார்ந்து சாஸ்திரம் பயில்தலையோ இல்லாளோடு கூடிச் சிராவக தர்மத்தை நடத்துதலையோ, காட்டிற்குச்சென்று யதி தருமத்தை அனுஷ்டித்தலையோ செய்யவேண்டு மென்பதும், அங்ஙனம் செய்வோரே நற்கதியடைவா ரென்பதும், இவற்றைச் செய்யாமல் புலை, கொலை களவு முதலியவற்றைச் செய்து காலத்தை

வீணே கழிப்பவர் துர்க்கதியடைவரென்பதும் இதனுற் பெறப்படும். கழிப்பர் என்ற பயனிலைக்கேற்ப அறிவற்ற மனிதர் என்னும் சொல் தோன்ரு எழுவாயாக வருவித் துரைக்கப்பட்டது. ஒன்ரே என்பவை மூன்றிலும் உள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருளதாதலால், ஒவ்வொன்றிலும் செய்யார் என்ற எதிர்மறை வினைமுற்று விரித்துரைக்க வேண்டும். ''ஒழியிசை வினுச்சிறப் பெதிர்மறை தெரிநிலை, கழிவசை நிலைபிரிப் பெனவெட்டோவே'' என்பது (நன்-இடை-சு) சூத்திரம். அன்றே-ஈற்றசை. (ங.கூ)

40 இருந்தவர்க் கிசைவ தொன்ரே கரப்பில
தாக வீந்து
கருந்தடங் கண்ணி ஞர்தோட் கதிர்முலைக்
கரத்த லொன்ரே
பொருந்திய சுற்றமென்னு நிகளத்தைப்
பரிந்து போகி
அருந்தவ முயற்சி யில்லா ராசையு
ளழுந்து கின்ருர்

(இ-ள்) இருந்தவர்க்கு-மிக்கதவமுடைய முனிவர்க்கு, கரப்பிலதாக-ஒளித்தலில்லாமல், ஈந்து-தானத்தைக் கொடுத்து, இசைவது ஒன்ரே-இணங்கி உபசரித்தலாகிய ஒரு காரியமோ, (மேற் கூறிய படி), கரும்-கரிய, தடம்-விசாலமாகிய, கண்ணினுர்-கண்களையுடைய இல்லாள்களின், கதிர்முலை-பிரகாசம் பொருந்திய கொங்கைகளிடத்தே, தோள்-தங்களுடைய புஜங்களை, கரத்தல் ஒன்ரே-அழுத்தி மறைத்துவைத்த லென்னும் இல்லறவின்பம் நுகர்தலாகிய ஒரு காரியமோ, (செய்யார்; அங்ஙனம் இல்லறத்தை நடத்தாவிடினும் துறவறத்தை யேனும் பற்றவேண்டும்; அவ்வாறு), பொருந்திய-தம்மைச் சார்ந்த, சுற்றமென்னும்-பந்துக்கள் என்கின்ற, நிகளத்தை-பாசத்தை, பரிந்து போகி-அறுத்துச் சென்று, அரும்-அருமையாகிய, தவமுயற்சியில்லார்-தவத்தைச் செய்யும் முயற்சியில்லாதவர்கள் ஆசையுள்-உலக ஆசையிலே, அழுந்துகின்ருர்-அழுந்தி வருந்துகின்றவராவார், எ-று.

(வி-ரை) 'பெரிய தவத்தையுடையவர்க்கு வேண்டுவன நல்கி அவரை உபசரித்தலையோ இல்லறத்திலிருந்து மனைவியரோடு கூடிக் கிரமப்படி இல்லறம் நடத்துதலையோ மனிதர் செய்யார்; இவ்வாறு நடத்தாவிடினும் உலக பந்தத்தை விட்டு நீங்கித் துறவறத்தையேனும்

பற்றவேண்டும்; அங்ஙனம் துறவுக்கும் முயற்சியில்லார் இரண்டும் கெட்டவர்களாய் உலக ஆசையில் மூழ்கிப் பிறந்திறந்துழல்பவரா கின்றார்' என்பது இதன் கருத்து இல்லற தர்மத்தை ஒழுங்காக நடத்தினாலும், துறவறத்தை முறைப்படி அனுஷ்டித்தாலும் முத்தி யின்பம் கைகூடும்: இரண்டையும் விட்டவர்களுக்கு மாயை அதிகரித்துத் துர்க்கதி கிடைக்கும். முந்தின செய்யுட் கருத்தே பெரும்பாலும் இதிலும் அமைந்தது.

''செய்யார்'' என்னுஞ்சொல் இதை யெச்சமாக வருவித்துரைக் கப்பட்டது. (சுO)

41. உத்தம தான மீந்தே யொண்பொரு ளுவந்து நல்ல
உத்தமர்க் குவந்து முன்னே யுத்தம தான மீந்தே
உத்தம நெறிநின் றார்க்கு முவமையொன் றில்லை யாகும்
உத்தம குருவும் புத்தே ளுலகமு முடைய ரன்றே

(இ-ள்) (எல்லாவற்றிற்கும் சிறந்ததாகிய தவத்தை அவசியம் செய்ய வேண்டும்; அவ்வாறு செய்ய முடியாவிடின் இல்லறத்தி லிருந்து தானத்தை யேனும் செய்யவேண்டும்; அங்ஙனம்), நல்ல உத்தமர்க்கு – நற்குணமுடைய தவ சிரேஷ்டருக்கு, உவந்து- சந்தோஷித்து, உத்தமதானம் ஈந்து-உயர்ந்த ஆசனம் அளித்து உபசரித்து ஒண்பொருள்–ஒள்ளிய பொருளை, முன்னே–அவர்க்கு எதிரில், உவந்து–விரும்பி, உத்தம தானம-மேலானதானமாக, ஈந்து- கொடுத்து. உத்தமநெறி–மேலான இல்லற மார்க்கத்திலே, நின்றார்க்கும்-நின்றவர்களுக்கும், உவமை-சமம், ஒன்று இல்லை ஆகும்–வேறொன்று மில்லாததாகும். (அவர்), உத்தம குருவும்– உயர்ந்த போகபூமியாகிய உத்தர குருவையும், புத்தேள் உலகமும்- தேவலோக பதவியையும், உடையர்-உடையராவார், எ–று.

(வி-ரை) 'முன் செய்யுட்களிற் கூறியபடி தவத்தைச் செய்ய வேண்டும்; அங்ஙனம் தவஞ்செய்ய முடியாவிடின் இல்லறத்திலிருந் தேனும் உத்தமர்களுக்கு உத்தமதானம் ஈந்து சன்மார்க்கத்தில் நின்றொழுக வேண்டும்; அங்ஙனம் ஒழுகுவார்க்கு எந்த உயர்ந்த பொருளும் உவமையாகாது; அவர்கள் உத்தரகுருவென்னும் போக பூமியையும், தெய்வலோக பதவியையும் அடைவார்கள்' என்பது. இதன் கருத்து. இவர்கள் இங்ஙனம் நற்பதவிகளைப் பெறினும் நாளடைவில் துறவடைந்து முத்தியின்பத்தையும் எய்துவர்.

முதலில் உள்ள 'உத்தமதானம்' என்பதற்கு, 'உயர்ந்த ஆசனம்' எனப் பொருள் கொள்ள வேண்டும்; தானம்–ஸ்தானம் என்னும் வட

மொழித் திரிபு. ஒண்பொருள்-பிரகாசமுள்ள பொருள்; அதாவது: எங்கும் புகழினால் விளங்கிய பொருள்; அது பழிப்பின்றி நல்வழியில் ஈட்டிய பொருள்; இத்தகையபொருளை உலகத்தார் புகழ்ந்து கொண்டாடுதல் இயற்கை. இது பற்றியே ஆசிரியர் இதனை, 'ஒண்பொருள்' என்றார். இத்தகைய பொருளை உத்தமர்க்குஈதலே உத்தமதானமாம்; இதனை, "அறத்தினாற்றிய அரும்பெரும் பொருளைப், புறத்துறை குற்றமூன்றறுத்த நற்றவர்க்கு, உள்ளமுவந்தீதல் உத்தமதானம்" என்ற திவாகரச் செய்யுளடிகளானுணர்க. அன்றே-அசை.

42. மறுவிலாக் குணத்தின் மிக்க மறுவறு
தவத்தி னார்க்கு
மறுவறு தான மீந்தே மறுவிலாப்
போக பூமி
மறுவிலாப் பயன் கொடுத்து மறுவில
ராவர் மாதோ
மறுவிலா மண்ணும் விண்ணு மறுவின்றி
விளங்க வன்றே

(இ-ள்) (மனிதர் இல்லறத்திலிருந்து), மறு இல்லா-குற்றமில்லாத, குணத்தின் மிக்க-நல்ல ஒழுக்கங்களினாலே மிகுந்த, மறு அறு குற்றமற்ற, தவத்தினார்க்கு-தவத்தினையுடைய எதிகளுக்கு, மறு அறு-தீங்கற்ற, தானம்-உத்தமதானத்தை, ஈந்து-ஈய, மறு இல்லா-கெடுதலில்லாத, போகபூமி-உத்தரகுருவென்னும்போக பூமியானது, மறு இல்லா-குற்றமில்லாத, பயன்-நற்பயனை, கொடுத்து-அவர்க்குக் கொடுப்ப (அவர்), மறுஇல்லா-தோஷமில்லாத, மண்ணும்-இம்மண்ணுலகத்திலும், விண்ணும்-தேவருலகத்தினும், மறுஇன்றி-குற்றமில்லாத, விளங்க-தம்முடைய பெயர் விளங்க (முடிவில்), மறு இலராவர்-நாற்கதித்துன்பமாகிய கேடில்லாதவர்களாய் முத்தி இன்பத்தை அனுபவிப்பவராவார்கள், எ-று.

(வி-ரை) 'மனிதர் இல்லறத்திலிருந்து குற்றமற்ற தவசிரேஷ்டர்களுக்கு நல்லதானத்தை நல்குவார்களேயானால் அத்தானப் பயனால் இவ்வுலகத்திலும் தேவருலகத்திலும் தம்பெயர் விளங்கப் புகழை நிலைநிறுத்தி மறுஜன்மத்தில் போக பூமியிற் பிறந்து, அங்குள்ள இன்பங்களை யெல்லாமனுபவித்து முடிவில் பிறப்பிறப் பின்றிமுத்தியின்பத்தைக் கைக்கொள்வர்' என்பது இதன் கருத்து. சற்பாத்திர தானப் பயனானது இங்ஙனம் இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் புகழையும்,

போக பூமியின் இன்பத்தையும், முத்திப் பேற்றையும் அளிக்குமென்றதனால், இவற்றிற் கெல்லாம் முதற்காரணமாகிய இல்லறம் யாவற்றினும் சிறந்ததென்பது பெறப்படும். ஈய என்னும் எச்சம் ஈந்து எனவும், கொடுப்ப என்னும் எச்சம் கொடுத்துஎனவும் திரிந்து வந்தன. தானமீய, பயன் கொடுப்ப, விளங்க மறுவிலராவர் எனமுடிக்க. மாதோ, அன்றே-அசைகள். (சஉ)

43. நடரிடைப் பட்ட நாளும் நாற்கதி
நவையை நீக்கி
யிடரிடை யுய்த்த லின்றி நீண்மணத்
தொகுப்பி னார்க்குஞ்
சுடர்கொள்பூம் பிண்டி நாதன் றொல்லறந்
துணிந்து முன்னே
படர்கள்பூஞ் சிந்தை வைத்தார் பவக்கட
லெல்லை காண்பார்.

(இ-ள்) நடர் இடைப்பட்ட-நடுக்கத்தினிடமாகத் தோன்றுகின்ற, நாற்கதி நவையை-நான்குகதிகளாகிய துன்பத்தை, நாளும்-தினந்தோறும், நீக்கி-விலக்கி, பூம் சிந்தை-அழகிய சித்தத்தை, இடர் இடை-துன்பமாகிய வழிகளினிடத்தே, உய்த்தல் இன்றி-செலுத்துதலில்லாமல், நீள் - அதிகரித்த, மணத்தொகுப்பின் - வாசனைச் சேர்க்கையுடைய, ஆர்க்கும்-நிறைக்கும், பூ-மலர்கள் பொருந்திய, பிண்டி-அசோகமரத்தடியில் வீற்றிருக்கின்ற, சுடர் கொள்-பிரபாவலயம் மூன்றினையுடைய, நாதன் - அருகக்கடவுளின், தொல்-பழமையாகிய, அறம்-தருமமார்க்கத்திலே, துணிந்து-துணிவு கொண்டு, முன்னே-முன்னர், படர்கள்-தொண்டர்களாய், வைத்தார்-சேர்த்தவர்கள், பவக்கடல்-பாவக்கடலின், எல்லை காண்பார்-கரையைக் காண்பவர்களாவார்கள், ஏ-று,

(வி-ரை) 'நடுக்கத்தினிடமாகத் தோன்றிய நாற்கதித் துன்பத்தை நீக்கி, மனத்தைத் துன்பமாகிய வழிகளிலே செலுத்தாமல் மலர்கள் நிறைந்த அசோகமரத்தினடியில் வீற்றிருக்கும் பிரபாவலயம் மூன்றினையுடைய அருகக் கடவுளினது தர்ம மார்க்கத்திலே துணிந்து பிரவேசித்து அக்கடவுளுக்குத் தொண்டர்களாய்ச் செலுத்தினவர்கள் பவக்கடலைத் தாண்டுவார்கள்' என்பது இதன் கருத்து. 'நடரிடைப்பட்ட நாற்கதி நவையை நாளும் நீக்கி, நீண்மணத் தொகுப்பினார்க்குஞ் சுடர்கொள் பூம்பிண்டி நாதன்றொல்லறந்

துணிந்து முன்னே படர்களாய் பூஞ்சிந்தை இட்ரிடை உய்த்தலின்றி வைத்தார் பவக்கடல் எல்லே காண்பார்' என இயைக்க. நடலை என்பது ஐ விகுதி குன்றி நடல் என நின்று ஈற்றுலகரத்திற்கு ரகரம் போலியாக நடர் என வந்தது ; ஆதலின், நடலை என்பதற்கேற்பட்ட பொருள் இதற்குக் கூறப்பட்டது; நடலை-நடுக்கம்; நாற்கதிகள் நடுக் கத்தைச் செய்யக் கூடியனவாதலின் அவற்றை, 'நடரிடைப்பட்ட நாற்கதி' என்றூர் ஆசிரியர். (சுங)

44. உள்ளறப் பற்று நீக்கி யுத்தம
தான மீந்தே
கள்ளவிழ் கோதை மாதர் கதிர்முலைக்
கரத்த லொன்றோ
புள்ளுறைந் தினிது நீண்ட தவவனம்
புரிந்து போகி
எள்ளற நோற்றல் செய்யா ரிடும்பைநோய்க்
கிரைக ளாவார்.

(இ-ள்) உள்-மனதில், பற்று அற-ஆசையானது நீங்க, நீக்கி-அதனை அடியோடு விலக்கி, உத்தமதானம்-சற்பாத்திரத்தில் இடக் கூடிய நல்ல தானத்தை, ஈந்து-கொடுத்து, கள் அவிழ்-தேன் ஒழுகுகின்ற, கோதை-மாலையை அணிந்த, மாதர்-இல்லக் கிழத்திகளாகிய பெண்களின், கதிர்-பிரகாசம் பொருந்திய, முலை-தனங்களில், கரத்தல்-அழுந்தி மறைந்து இன்பம் நுகர்ந்து இல்லறம் நடத்துதலாகிய, ஒன்றோ-ஒரு காரியமோ, புள்-பறவைகள், உறைந்து-தங்கி, இனிது-இனிமையாக, நீண்ட-நீட்சி பெற்ற, தவவனம்-தவம் செய்தற்குரிய தாகிய காட்டில், புரிந்து-விரும்பி, போகி-சென்று, எள் அற-இகழ்ச்சி நீங்க, நோற்றல்-தவஞ் செய்தலாகிய, ஒன்றோ-ஒரு காரியமோ, செய்யார்-செய்யாதவர்கள், இடும்பை - துன்பமாகிய, நோய்க்கு-வியாதிக்கு, இரைகளாவார்கள், எ-று.

(வி-ரை) 'தாமரையிலைத் தண்ணீர்போல, இல்லறத்திலிருந்தாலும் பற்றற்றிருந்து உத்தம தானங்களைப் பற்றற்றுச் செய்து இல்லக் கிழத்திகளோடு கூடி இல்லறம் நடத்துதலாகிய ஒரு காரியத்தையோ, வனத்தில் சென்று இகழ்ச்சி நீங்கத் தவஞ் செய்தலாகிய ஒரு காரியத்தையோ செய்யாதவர்கள் துன்பமாகிய நோய்க்கு இரைகளாவார்' என்பது இதன் கருத்து. இச்செய்யுட் கருத்தும், 34, 35, 37, 38, 39 ஆம் செய்யுட்களின் கருத்தும் ஒன்றே. இல்லறம்

நடத்தினும் தான தர்மங்களைச் செய்யினும் மனிதர் தமக்கென எதையும் கருதாத தன்மையுடையவர்களாய் எல்லாவற்றையும் பகவனுக்கே அர்ப்பணஞ் செய்து நடத்தவேண்டும்; அங்ஙனம் நடத்தப்படும் இல்லறத்தாலும் முக்தியே யுண்டாகும்; எதனாலெனின், இதில் உள்ளத்துறவு அமைதலான் என்க. இல்லறத்தை நீத்துச் செய்யும் துறவறம் பழிப்பற்றதா யிருத்தல் வேண்டும்; அங்ஙனமானால் மாத்திரந்தான் அதற்கு நற்பயன் கிடைக்கும். இது பற்றியே, 'உள்ளறப் பற்று நீக்கி உத்தமதான மீந்து கள்ளவிழ் கோதை மாதர் கதிர்முலைக் கரத்தல்' என்றும், 'எள்ளற நோற்றல்' என்று கூறினார் ஆசிரியர். இவ்விரண்டும் நற்பயனை அளிக்கக் கூடியனவா யிருத்தல் பற்றியே இவ்விரண்டில் ஒன்றைச் செய்யாதவர் துன்பத்திற்கு இரையாவார் என்றுங் கூறினார். தனத்திற்கரத்தலாவது அதில் அழுந்தி இல்லறவின்பத்தை அனுபவித்தலாம். இங்குக் கூறியபடி செய்யப் படாத இரண்டறங்களும் பயனற்றனவாம்.

ஒன்றோ என்பது இரண்டிடங்களினுங் கூட்டப்பட்டது. (சுசு)

45. கோற லோம்புமின் கொன்றபி னூன்றடி
மேற லோம்புமின் மெய்ப்பொரு ளல்லன
தேற லோம்புமின் றீயவை யாவையுங்
கூற லோம்புமின் நற்குண மல்லன.

(இ-ள்) (மனிதர்களே! நீங்கள் நற்கதியடைய வேண்டின்), கோறல்-(உயிர்களைக்) கொல்லுதலை, ஓம்புமின் - பரிகரியுங்கள் (அதாவது: நீக்கிவிடுங்கள்), கொன்றபின்-ஒரு ஜீவனைக் கொலை செய்த பிறகு, ஊன்-அதன் உடலிலுள்ள, தடி-தசையை, மேறல்-மென்று தின்னுதலை, ஓம்புமின் - பரிகரியுங்கள், மெய்ப்பொருள் அல்லன - உண்மைப் பொருள்களல்லாதனவாகிய பொய்ப் பொருள்களை, தேறல்-நிலையுள்ளனவென்றுணர்தலை, ஓம்புமின்-பரிகரியுங்கள், தீயவையாவையும் - தீங்கானவைகளெல்லாவற்றையும், கூறல்-சொல்லுதலையும், நற்குணமல்லன-நற்குணமல்லாத தீக்குணங்களையும், ஓம்புமின்-அகற்றுங்கள், எ-று.

(வி-ரை) மனிதராயினோர் நற்கதியடைய வேண்டுமாயின், உயிர் கொல்லுதலையும், கொன்றபின் அதன் ஊனைத் தின்றுதலையும், பொய்ப்பொருள்களை உறுதிப்பொருள்களென்றுணர்தலையும், தீயன கூறுதலையும், துர்க்குணங்களையும் ஒழித்தல் வேண்டும். ஆதலின், இவற்றை நீக்குமாறு கூறினார் ஆசிரியர். கொலைத்தொழில் ஊன் தின்றற் பொருட்டும், பிறகாரணங்களாலும் நிகழ்வதாம். ஆதலின்,

பிறகாரணங்களால் நிகழுங்கொலையைக் 'கோறலோம்புமின்' என்றதனுலும், ஊன் தின்றற்பொருட்டு நிகழுங்கொலையை 'கொன்றபின் ஊன்றடி மேறலோம்புமின்' என்றதனுலும் கடியுமாறு கூறினர் தேவர். ஊன்தின்றலே கொலைக்குக் காரணமாதலின், அதனைக் கடிதலே கொலைகடிதலாம். ஆகவே, 'ஊன்றடி மேறலோம்புமின்' என்றதனுனே, 'கொலையை நீக்குங்கள்' என்பது தானே போதரும். ''தினற்பொருட்டாற் கொல்லாதுலகெனின்யாரும், விலைப்பொருட்டா லூன்றருவாரில்'' என்னுந் திருக்குறள் வெண்பா இங்கு ஆராயத் தக்கது. மெய்ப்பொருள் - வீடெய்தற்குரிய அறநூற் பொருள். பொய்ப்பொருள்கள்-உலகத்தில் தோன்றி மறையும் சிற்றின்பப் பொருள்கள். தீயவைகூறல்-அசத்தியம், கடினமொழி முதலியவற்றைச் சொல்லுதல், நற்குணம்-கள், காமம், கொலை, களவு, சூது என்னும் பஞ்சமாபாதங்களை விட்டு நீங்கிய தருமசிந்தனை. தீக்குணம்-அப்பாதகங்களின் வயப்பட்ட கெட்டசிந்தனை. கோறல், மேறல், தேறல், கூறல் என்பன தொழிற் பெயர்கள். கொல்லுதல், மெல்லுதல் என்னுந்தல்லீற்றுத் தொழிற் பெயர்கள் புணர்ச்சி விதியால் விகாரப் பட்டுக் கோறல், மேறல் எனவந்தன. மெல்லுதல் தின்றன்மேற்று. கூறல் என்பதை அல்லீற்று எதிர்மறை வியங்கோள் வினை முற்ருகக் கொண்டு, தீயவையாவையுங் கூருதிருக்க' எனப் பொருளுரைப் பினும் அமையும். மின்—ஏவற்பன்மை முன்னிலை விகுதி. (சரு)

46. விட்டு நீங்குமின் பற்றுள மின்மையாற்
கட்டு மெண்வினை காற்றளை கட்டலால்
ஒட்டி யின்னுயிர் கோறல் பிறர்மனை
விட்டு நீங்குமின் கற்றறிந் தீரெலாம்.

(இ-ள்) (அறிஞர்களே!), கற்று அறிந்தீரெல்லாம்-உறுதி மார்க்கத்தைக் கற்றுணர்ந்த நீங்களெல்லாரும், உளம்—நெஞ்சில், பற்று-உலக ஆசையை, விட்டு நீங்குமின்—விட்டு அகலுவீராக, (அங்ஙனம் விடுவீரேல் இருவினைகளும் நீங்கி வீடெய்துவீர்கள்), இன்மையால்-இங்ஙனம் பற்றெழித்தல் அல்லாமையினலே (அதாவது : பற்றுடனிருந்தால்), எண்வினை-அஷ்டகருமங்களும், கட்டும்-உங்களைப் பந்திக்கும், (ஆதலின், அவசியம் பற்று நீங்கவேண்டும். இன்னும்), ஒட்டி-ஒரு பிராணியின் சமீபத்திற் சேர்ந்து, இன் உயிர்-அதன் இனிய உயிரை, கோறல்-கொல்லுதலும், பிறர்மனை-அன்னியர் மனைவியின் சேர்க்கையை விரும்புதலும், கால்தளை-கால்விலங்காக, கட்டலால்-அவற்றையுடையாரைப் பிணிந்து நரகத்தில் வீழ்த்துதலால், (அச்செயல்களையும்), விட்டுநீங்குமின்-விட்டு விலகுவீராக, எ-று.

(வி-ரை) மனிதர், எத்தகைய விவேகிகளாயிருப்பினும், பற்று நீங்காத உள்ளத்தையுடையவர்களாயிருந்தால், அவர்களை எண் வினைகளும் பந்திக்கும்; கொலையும், பிறர்மனை விரும்புதலுமுடையவர்களாயிருந்தால், அப்பாவங்களே அவர்கட்குக் கால்விலங்காய் அவர்களைப் பிணித்து நரகத்தில் வீழ்த்திவிடும். ஆதலின், நரகத்தைச் சாராமல் எண்வினைகளையும் விட்டு நீங்கி முத்தியடைய விரும்புவோர், கொலை, பிறர்மனை நயத்தல், பற்றுளம் ஆகியவற்றை நீக்கவேண்டுமென்பது தோன்ற ஆசிரியர் இங்ஙனம், "பற்றுளம் விட்டு நீங்குமின்; உயிர்கோறல் பிறர்மனைவிட்டு நீங்குமின்" என்று கூறினர். எண் வினைகளாவன :—ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் என்பனவாம். (சுசு)

47. ஊக்கி யொண்பொரு ளெட்டுணைத் தாயினு
மாக்கி நல்லறஞ் செய்வர்பொய் யாக்கொளின்
நீக்கி நல்லற நிற்ப நிலாவிடிற்
றேக்கு மேற்றுணைச் செல்கதி யில்லையே.

(இ-ள்) (நற்கதியடைய விரும்புவோர் சிராவக தர்மத்தினின்று), ஊக்கி-பொருள்தேடும் முயற்சியைச் செய்து, எள் துணைத்து ஆயினும்—எள்ளளவாவது, (சிறிதேனும் என்றபடி), நுண் பொருள்—ஒள்ளிய பொருளை, ஆக்கி—தேடி, (அதுகொண்டு இல்லறத்தைச் செவ்வனே நடத்தி), நல்அறம்-நல்லதர்மங்களை, செய்வர்—இயற்றுவார்கள், (இதுவல்லாமல்), பொய்யாக்கொளின்— யாக்கை செல்வங்களைப் பொய்யாகக் கொண்டால், (அதாவது : நிலையற்றனவெனக் கருதினால்), நீக்கி - அவற்றிலுள்ளபற்றை விலக்கி, நல்அறம்-நல்ல யதிதர்மத்தில் (அதாவது : துறவறத்தில்), நிற்ப-நிற்பார்கள், (இவ்வாறு இவ்விரண்டறங்களுள் ஒன்றில்), நில்லாவிடில்-நிலைத்து நிற்காவிட்டால், (அவர்க்கு), தேக்கும் இன்பங்களை நிறையச் செய்கின்ற, துணைச்செல்-மேற்கூறிய தர்மங்கள் துணையாகச் செல்கின்ற, மேற்கதி - மேலானகதி, (அதாவது : சுவர்க்கப்பதவியேனும் முத்திப்பதவியேனும்), இல்லை- இல்லையாம், எ-று.

(வி-ரை) நற்கதியடைய விரும்புவோர் சிராவக தர்மத்தினின்று (அதாவது : இல்லற தர்மத்திலிருந்தாவது) நியாயவழியிற் பொருள்தேடும் முயற்சியைச் செய்து சிறிது பொருளையாவது தேடி இல்லறத்திற் செய்யத்தக்க நல்ல தர்மங்களை இயற்றவேண்டும்;

இவ்வாறு செய்தால் சுவர்க்காதி பதவிகளையேனு மடையலாம். இங்ஙனமடையும் இல்லறவின்பமும், சுவர்க்காதிபதவிகளின் இன்பமும் நிலையற்றனவெனத் தெரிந்தால், இவற்றிலுண்டாம் பற்றினை யொழித்துத் துறவெய்தி நிஷ்காமியதவத்தைச் செய்தல் வேண்டும்; இதனைச் செய்யின் எப்பொழுதும் நிலைத்த இன்பமாகிய முத்திப்பேற்றை அடையலாம். இங்ஙனம் இரண்டிலொன்றைச் செய்யாவிடில் ஒரு நற்கதியு மில்லாமற்போம்; ஆதலின், இவ் விரண்டு தர்மங்களில் ஒரு தர்மத்தையேனும் செய்யவேண்டுமென்பது இதன் கருத்தாம்.

ஊக்குதல்-முயற்சி செய்தல். ஒண்மையென்னும் பண்படியின் மை விகுதி கெட்டு ஒண் - என நின்றது. ஒண்மை - பிரகாசம்; பொருளுக்குப் பிரகாசமாவது பரிசுத்தத் தன்மையாம்; பரிசுத்த மான பொருளாவது நல்லாற்றில் ஈட்டிய பொருளாம். எள் துணை-சிறுமையை விளக்கி நின்றது. ஆக்குதல்-உண்டாக்குதல்; இங்குத் தேடல் பொருளின் நின்றது. மூன்றும் அடியில் உள்ள நல்லறம்-துறவறத்தை உணர்த்தி நின்றது; சீவகசிந்தாமணி நாமகள் இலம்பகம் 77-ஆம் செய்யுளில் 'நற்றவஞ் செய்வார்க்கிடம்' என்றதற்கு, 'வீடுபெறத் தவஞ் செய்வார்ககு இடம்' என்று துறவின் மேலேற்றிப் பொருள் வரைந்திருத்தல் காண்க; இதிலேயே, இரண்டாவது, 'தவம்' என வருவதற்கு, 'மறுமை கருதிய இல்லறம்' என உரை கண்டிருத்தலும் ஆராயத்தக்கது. இச்செய்யுளாலும் 'இல்லறஞ் செய்வோர் சுவர்க்காதி மறுமையின்பங்களை அடைவார்' என்பதும், துறவறஞ் செய்வோர், 'முத்தியின்பமடைவா'ரென்பதும் உணரப் படும். நிற்ப-என்பதில், ப-பலர்பாற்படர்க்கை விகுதி. 'தேக்கும் துணைச்செல் மேற்கதி' என மாற்றுக. நற்கதியடைவோர்க்கு, அவரவர் செய்த தர்மங்களே துணைவருவனவாதலின், 'துணைச்செல்' என்பதற்கு, 'தர்மங்கள் துணையாகச் செல்லக்கூடிய' என்று பொருள் வரையப்பட்டது. துணைச்செல் - பண்புத்தொகை; மூன்றும் வேற்றுமைத் தொகையாகக் கோடலுமொன்று; அங்ஙனங்கொள்ளு மிடத்து, 'துணையோடு அல்லது துணையால் செல்லக்கூடிய' என விரிக்கவேண்டும். ஏ-ஈற்றசை. (சஎ)

48. திருத்த மொன்றலிர் தேர்ச்சி யிலாநரி

விருத்தங் கேட்டலு மெய்யென வோர்ந்துள

வருத்த முற்றவர்க் கீந்தருள் செய்திரேல்

வருத்த மொன்றில செல்கதி மாவடலாம்.

(இ-ள்) திருத்தம் ஒன்றலிர்—நல்லொழுக்கமாகிய தர்மத்தைப் பொருந்ாதவர்களே!, தேர்ச்சி இல்லா-நல்லுணர்ச்சியில்லாத, நரி விருத்தம்-நரியினது சரித்திரமடங்கிய விருத்தப் பாக்களாலாகிய இந் நூலை, கேட்டலும்-கேட்டமாத்திரத்திலேயே, (இதிற் கூறப்பட்ட நீதி), மெய் என-சத்தியம் என்று, ஓர்ந்து-அறிந்து, (வறுமையினால்), உள்ள வருத்தம் உற்றவர்க்கு—மனவருத்தம் பொருந்தியவர்களுக்கு, ஈந்து-வேண்டும் பொருளைக் கொடுத்து, அருள்செய்திரேல்-கிருபையைச் செய்வீர்களேயானால், செல்கதி மாடு எல்லாம்—நீங்கள் இப்பிறவி நீங்கிச் செல்கின்ற கதிகளில் எல்லாம், வருத்தம் ஒன்றில-உங்களிடத்தே துன்பங்கள் பொருந்தமாட்டா, எ-று.

(வி-ரை) நல்லொழுக்கம் இல்லாதவர்களும், இந்த நரி விருத்தம் என்னும் நூலைக்கேட்ட பின்னராவது, இதில் சொல்லிய நீதியை மெய்யென உணர்ந்து, தர்மஞ் செய்தலே தகுதி என்பதைச் சிந்தித்து, வறுமையால் வருந்தியவர்களுக்குப் பொருளைக் கொடுத்து உதவி செய்து அவர்களுடைய வருத்தத்தை நீக்கினால், இப்புண்ணிய விசேஷத்தினாலே, தாங்கள் செல்கின்ற கதிகளிலெல்லாம் துன்பத்தை அடையாமல் இன்பமுறுவார்கள் என்பது இதன் கருத்து. இந்நூலில், ஒரு நரி, யாக்கையும் வாழ்வும் நிலையுள்ளனவென்றுன்னி, வீண்மனோ ராஜ்ஜியம் செய்து உடனே உயிர் துறந்த கதை கூறப் படுகின்றதாதலின், இது, நல்லொழுக்கம் இல்லாதவர்க்கும் தர்மத்தால் உயர்வுண்டென்னும் நீதியை வற்புறுத்திக் கூறி அவர்களை நல்வழிப் படுத்துமாதலின், அன்னாரை விளித்து, "ஒழுக்கமற்றவர்களே! இந்நூலைக் கேட்டவுடன் தருமஞ் செய்வீரேல், நீங்கள் செல்லுங் கதிகளில் துன்பமடைய மாட்டீர்கள்" என்று இங்ஙனங் கூறினார் ஆசிரியர். இல்லார்க்கு ஒன்று ஈதலே எல்லாத் தர்மங்களினுஞ் சிறந்த தாதலின், "வருத்தமுற்றவர்க் கீந்தருள் செய்திரேல்" என்று அது சிறப்பித்துக் கூறப்பட்டது. இதனால், வருத்தமற்றார்க்கு ஈயுந்தர்மம் சிறந்தது என்றென்பது பெறப்படும். மனிதர்க்கு, ஜைனநூல் வழக்கப்படி, அவரவர் செய்யுங் கர்மங்கட்குத்தகப் பிறப்புக்கள் பலவுண்டாகலின், 'செல்கதிமாடெலாம்' என்றார் தேவர்.

ஒன்றலிர்-விளி; இதில், ஒன்று-பகுதி, அல்-தொழிற்பெயர் விகுதி; இவ்விரண்டும் ஓர் பகுதியாய் இர்-என்னும் பன்மை முன்னிலை விகுதியோடு புணர்ந்தன; இப்புணர்ச்சியில் எதிர்மறை ஆகாரம் புணர்ந்து கெட்டது. விருத்தம்-கருவியாகு பெயராய் நூலை உணர்த்திற்று. செய்திரேல்—எதிர்காலம் இறந்தகாலமாக மாறிவந்த கால வழுவமைதி. வருத்தம், கதிஎன்பன ஜாதியொருமைகளாய்ப் பன்மை முடிபுகளை ஏற்றன. மாடு—ஏழாம் வேற்றுமைச் சொல் லுருபு. (சஅ)

49. வரைத்த நாளன்றி வாழ்பவ ரின்மையால்
உரைத்த மாட்சி யிலாநரி யுற்றகோட்
டிறத்தி னொன்றில னூனுடை யுண்டியுண்
டிறப்ப வுந்நர கத்திடை யெய்தினன்.

(இ-ள்) வரைத்த-(கடவுளால் ஒருவர்க்கு இவ்வளவுதான்* என்று) அளவுபடுத்தி விதிக்கப்பட்ட, நாள் அன்றி-ஆயுள் நாளை யல்லாமல், (வேறு அதிகமான நாட்கள்), வாழ்பவர்-(உலகத்தில்) வாழ்பவர்கள், இன்மையால்-இல்லாதபடியால், உரைத்த-இந்நூலில் கூறப்பட்ட, மாட்சி இல்லா-அறிவின் சிறப்பில்லாத, நரி-நரியானது, உற்ற-(பேராசையால்) அடைந்த, கோள்திறத்தின்-குற்றத்தின் தன்மையினால் (அதாவது : நரி நெடுநாளைக்கிருப்பதாக நினைத்தது போல நினைத்ததனால்), ஒன்றிலன்-நல்வழியிற் பொருந்தாத ஒருவன், (தேகம் நிலையாமையை உணராமையால்), ஊன் உடை உண்டி-புலால் சேர்ந்த உணவை, உண்டு-தானுண்டு பிறர்க்குமிட்டு, இறப்பவும்-ஆயுள் குறுகி இறந்தவுடனேயே, நரகத்திடை-நரகத்தில், எய்தினன்-சேர்ந்தான், எ-று.

(வி-ரை) உலகத்தில் தமக்குக் கடவுளால்* விதிக்கப்பட்ட ஆயுள் நாளைக்கடந்து வாழ்பவரில்லாதபடியால், இந்நூலிற் கூறப்பட்ட நரியின் குணத்தைக் கொண்டதனால் ஒருவன் ஒழுக்கந்தவறி, நெடுங்காலம் வாழ்வதாக நினைத்துப் புலாலுணவுண்டு தன்னாயுள் விரைவிற் குறுகினதும் இறந்து உடனே நரகத்தை யடைந்தான் என்பது இதன் கருத்து. இதனால், தேகம் நிலையாமையைக் கருதி, மானிடர் தீயவொழுக்கங்களிற் சேராது நல்லொழுக்கத்தை நாட வேண்டுமென்பது பெறப்படும். ஊனுடையுண்டியுண் டிறப்பவும் நரகத்திடையெய்தினவன், விசித்திரமதி யென்பான். அஸ்தின புரத்தரசன் பிரீதிபத்திரனுக்கும் மனைவி வசுந்திரிக்கும் பிறந்த பிரீதிங்கரனும், மந்திரி சித்திரமதிக்கும் மனைவி கமலைக்கும் பிறந்த விசித்திர மதி யென்பானும் இளமையிலேயே துறந்து தருமருசி யென்னும் சாது பால் தருமங்கேட்டு அயோத்திக்கருகில் தங்கி யிருக்கும்போது பிரீதிங்கரன் என்பான் அயோத்திக்குள் புகுந்து புத்திசேனை யென்னும் தாசிபால் பிக்ஷையேற்று அவளுக்குத் தருமோபதேசஞ்செய்து வந்தான். விசித்திரமதி, அவனால் தாசியின் விருத்தாந்தம் சொல்லக்

* வாழ்நாள்களை வரையறுக்க தனிக்கடவுள் இல்லை. மனிதனுக்குப் புறத்தே ஒரு கடவுள் உண்டு என்பதைச் சைனம் ஒப்புக் கொள்வதில்லை. 'கடவுளால்' என்ற சொல் சைனக் கோட்பாட்டோடு ஒட்டி வராது. 'வரைத்த' என்பதற்கு 'வினையால் அல்லது கர்மாவால் வரையறுக்கப்பட்ட' என்ற பொருள் கொள்ளலே தகும்.

கேட்டு அவள்மீது மோகமுற்றுத் தவத்தைவிட்டு அவள் பாற்சென்று தன் எண்ணத்தைத் தெரிவித்து அவள் அதற்கு இணங்காததால், மாமிச போஜனம் செய்யும் அந் நகர மன்னனுக்குப் புலால் உணவாக்கிப் படைத்துத் தானும் உண்டு அவனுறவு கொண்டு அவன் உதவியால் அத் தாசியைச் சேர்ந்து அவளின் சீலத்தைக் கெடுத்து இறந்ததும் நரகம் எய்தி மிருக கதியில் சுழன்றான். இக்கதை மேரு மந்தர புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இனி, இச் செய்யுளின் பின் இரண்டு அடிகளில் கூறப்பட்டவன் யசோதரன் என்பாரும் உளர். இவன் மாவினால் கோழி யுருவமைந்து காளிக்குப் பலியிட்டு அப்பாவத்தால் பல இழிபிறப்புக்களெய்தினனாதலின், "ஊனுடை யுண்டியுண் டிறப்பவுந் நாகத்திடை யெய்தினான்" என்பதற்கு இவனைக்கூறுதல் பொருந்தாமை யுணர்க.

கோள்-குற்றம்; குணம் எனினுமாம். இச்செய்யுள் முன்னிரண் டடிகள் ஓரெதுகையாகவும் பின்னிரண்டடிகள் ஓரெதுகையாகவும் அமைந்திருத்தலால் யாப்புவழுடைய தெனினும், பெரியோர்கள் பொருள் நோக்கம் ஒன்றையேகருதி எதுகைமோனை முதலியன பொருந்தாமல் இயற்றப்படும் செந்தொடையின் பாற்படுமென்க. "முந்தியமோனை முதலாமுழுது மொவ்வாது விட்டாற், செந்தொடை நாமம் பெறுநறுமென்குழற் றேமொழியே" என்பது யாப்பருங்கலக் காரிகை. 'இறப்பவும்' என்பதிலுள்ள உம்மை விரைவுப் பொருளை யுணர்த்தி நின்றது. மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்புப் புத்தகத்தில் இச்செய்யுள் இங்ஙன மிருந்தமையின், அதிலிருந்தவாறே நாமும் இதனை அச்சிட்டு இதற்குத் தக்கவாறே உரையும் எழுதி யாப்பு வழுவிற்கு அமைதியுங் கூறினோம். எனினும் இவ்வமைதி சிறந்ததாக எமக்குத் தோற்றவில்லை. நன்றாக ஆராயுமிடத்து, இச்செய்யுளின் பின்னிரண்டடிகளும் இந்நூலின் 30-ஆம் செய்யுளின் பின்னிரண்டடி களாகவே யிருக்கின்றன. ஆதலின் எதுகைவழுவுள்ள இச்செய்யு ளானது ஏட்டுப்பிரதிகளில் பிழைபட எழுதப்பட்டிருந்து அவ்வாறே சங்கப்பதிப்பில் அச்சிடப்பட் டிருக்கின்றதென்பது நிச்சயமாக விளங்குகின்றது. இதன் சரியான பாடம் தெரிந்தோர் எழுதினால் அப்பாட பேதத்தின்படியே இதனை மறுபதிப்பில் திருத்தி அச்சிட்டு வெளியிடுவோம் *

---

* இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ள கதைகள் பொருந்துவனவாகத் தோன்றவில்லை. யசோதரன் மாக்கோழியைப் பலியிட்டான்; விசித்திரமதி புலால் உணவைச் சமைத்தான். அவ்வளவே. அவர்கள் புலால் உண்டதாகக் கதையில் குறிப்பில்லை. மேலும் அவர்கள் விலங்குகதியில் உழன்றனரே தவிர நரககதிக்குப் போனதாகவும் குறிப்பில்லை. எனவே செய்யுளின் ஈரடிகள் இரண்டும் பிழை பட்டன என்று உரைகாரர் கூறும் கருத்து உண்மையாகலாம்.

50. மற்றிம் மண்மிசைப் பற்றுளத் தாற்கிளை
யுற்ற மாந்த ருரைபல வுண்மையாற்
குற்ற மாய்க்கொண்டு லோபெனும் பாவியைக்
கற்ற மார்ந்தர் கடிர்தன ரென்பவே

(இ-ள்) மற்று-பின்னரும், இம் மண்மிசை-பூவுலகில், பற்று உள்ளத்தால்-ஆசை பொருந்திய மனத்தினாலே, கிளை-பந்து மித்திரர் களாகிய சுற்றத்தார்களை, உற்ற-பொருந்திய, மாந்தர்-மனிதர் களுடைய, உரை பல-பல சரித்திரங்கள்,* உண்மையால்-இருக்கின்ற மையினாலே, (அதாவது, பேராசைக் குணம் பொருந்திய பல மனிதர் கள் சுற்றத்தாரோடு பொருந்தியிருந்தும் தருமஞ் செய்யாமல் உலோப குணம் பொருந்தி அச்சுற்றத்தாரோடு அழிந்துபோன சரித்திரங்கள் இருக்கின்றமையினாலே), கற்ற மாந்தர்-நீதி நூற்களைப் படித்துணர்ந்த மனிதர்கள், லோபு என்னும் பாவியை-உலோபமென்கின்ற பாவியை, குற்றமாய்க்கொண்டு-குற்றமாக மனத்திலெண்ணி, கடிந்தனர் என்ப- நீக்கினார்கள் என்று அறிவுடையோர் கூறுவர் எ-று.

(வி-ரை) இவ்வுலகில் பந்துமித்திரர்களோடு கூடிச் செல்வாக் காக வாழ்ந்த மனிதர்களும் பேராசைக் குணத்தால் உலோபகுணம் பொருந்தித் தான தருமங்களைச் செய்யாமல் வீணேமடிந்து தீக்கதிக் காளாயினர் என்ற சரித்திரங்கள் பல இருக்கின்றமையினாலே நீதி சாஸ்திரங்களைக் கற்றமனிதர்கள், உலோபத்தைக் குற்றமென எண்ணிக் கடிந்தார்கள் என்று அறிஞர் கூறுவர் என்பது இதன் கருத் தாம். இதனால், யாவரும் தேகநிலையாமையை நோக்கி விரைவில் தான தருமங்களைச் செய்து நற்கதியடைய வேண்டுமென்பது பெறப் படும்.

மற்று-என்பது முன்னுரைத்தவற்றை நீக்கிப் பின் வருவதைச் சுட்டிப் பிறிதெனும் பொருளில் நின்றது; அசையெனினுமாம்; "வினைமாற் றசைநிலை பிறிதெனுமற்றே" என்பது [நன்-இடை. 14] சூத்திரம். கிளை-ஒன்றன்பக்கக் கூட்டம்; இஃதாகுபெயராய், அங்ஙனம் ஒருவனைச் சூழ்வோராகிய சுற்றத்தார்களை யுணர்த்தி நின் றது. உரை-சொல்; அஃதாகு பெயராய்ச் சரித்திரத்தை விளக்கிற்று. லோபு-உலோபம்; அதாவது ஈயாமை; வடமொழியில் லுபு-என்பது பகுதி. உலோபத்தைப் பாவி என்றது இழிவினால் வந்த திணைவழு வமைதி; "உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும், இழிப்

* சுமித்திரை, உலோலுபன், புடகஸ்தன், சகர அரசன் ஆகியோர் கதை களை நினைவு கூர்க.

பினும்பால் திணையிமுக்கினும் இயல்பே'' என்பது [நன். பொது-28] சூத்திரம் என்ப என்பதில், ப-பலர்பாற் படர்க்கை விகுதி. 'என்ப' என்னும் பயனிலைக்கு ஏற்ப 'அறிவுடையோர்' என்னும் எழுவாய் வருவித்து உரைக்கப்பட்டது; இது தோன்ரு எழுவாய் எனப்படும். ஏ-ஈற்றசை. (௫0)

## வேறு

51. ஆக்குவ தேதெனி லறத்தை யாக்குக
போக்குவ தேதெனில் வெகுளி போக்குக
நோக்குவ தெதெனில் ஞான நோக்குக
காக்குவ தேதெனில் விரதங் காக்கவே.

(இ-ள்) (உலகத்தவர்), ஆக்குவது ஏது எனில்-செய்யத்தக்கது யாதென்ருல், அறத்தை ஆக்குக-தருமத்தையே செய்யக்கடவர், போக்குவது ஏது எனில்-போக்கத்தக்கது யாதென்ருல், வெகுளி போக்குக-கோபத்தையே போக்கக்கடவர், நோக்குவது ஏதுஎனில்-பார்க்கத்தக்கது யாதென்ருல், ஞானம் நோக்குக-ஞானத்தையே பார்க்கக்கடவர், காக்குவது ஏது எனில்-காக்கத்தக்தது யாதென்ருல், விரதம் காக்க-விரதங்களைக் காக்கக்கடவர், எ-று.

(வி-ரை) உலகத்தவர் அறத்தையே செய்யவேண்டும்; கோபத்தையே போக்கவேண்டும்; ஞானத்தையே பார்க்கவேண்டும்; விரதங்களையே காக்கவேண்டும் என்பது இதன் கருத்தாம். விரதங்களான:—ஜைன நூற்களிற் கூறப்படும் அணுவிரதம் குணவிரதம், சிக்ஷாவிரதம், மகாவிரதம் என்பனவாம்; இவற்றுள் மகாவிரதம் துறவறத்தார்க் குரியது; மற்றவை இல்லறத்தார்க்குரியன; இவற்றின் விரிவுகளைச் சிந்தாமணி, மேருமந்தரம் முதலிய ஜைன நூல்களிற் காண்க.

ஆக்குக, போக்குக, நோக்குக, காக்க என்பன 'வியங்கோள்கள். 'காப்பது' என்பது 'காக்குவது' என விகாரப்பட்டு வந்தது. இச் செய்யுள் மேருமந்தர புராணத்தின் ஈற்றிலும் உள்ளது; அதில் நான்கடிகளின் ஈற்றிலுமுள்ள முற்றுக்கள் இதில் குறித்தவாறே அமைந்து இருக்கின்றன. மு. இராகவையங்கார் அவர்களால் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப்பட்ட நரிவிருத்தப் புத்தகத்தில், இம் முற்றுக்கள், ஆக்குவ, போக்குவ, நோக்குவ, காப்பவே என்றிருக்கின்றன; பாடபேதங்கள் இங்ஙனம் இருப்பினும் இவற்றை வியங்கோள் முற்றுக்களாகவே கொண்டு பொருளுரைத்தலே நேர். ஏ. ஈற்றசை. (௫௧)

மதுரைத் தமிழ்ச் சங்கப்பதிப்பில், இதன் கீழ் "மாலுநான் முகனும்......" என்ற செய்யுளொன்று சேர்த்தச்சிடப்பட்டு அதனடியில் 'இது சில பிரதிகளில் இறுதியிற் காணப்படுகிறது' என்ற குறிப்பு விளக்கப்பட்டிருந்தது. ஆதலின், தருமசீலன் சஞ்சிகையில் அதற்கும் உரை யெழுதப்பட்டிருந்தது. எனினும், அச்செய்யுள் இந்நூலைச் சாராததென விளங்குகின்றமையின் இதிற் சேர்க்கப் படவில்லை. அச்செய்யுளுரையைப் பார்க்க விரும்புவோர் தருமசீலன் புத்தகம்-5, சஞ்சிகை-8-ல் பார்க்கக்கொள்க.

## நரிவிருத்தம் மூலமும் உரையும்

சம்பூர்ணம்.

* உரைகாரர் ஐயம் ஏற்றுக் கொள்ளக் கூடியதே. செய்யுளின் நடையையும் கருத்து போக்கையும் ஆராய்ந்தால் இது இடைச் செருகலாகத் தோன்றுகிறது. இருப்பினும் இச் செய்யுளுக்கும் உரை எழுதினமையால் இங்கே சேர்க்கப்பட்டுள்ளது.

[அச்செய்யுளுரை கீழே தரப்பட்டுள்ளது — பதிப்பாளர்]

மாலு நான்முக னும்மதி சூடிய கண்ணுதல்
திண்டோண்மேற்

சேலே சூடிய சேசர வானவர் தானவ ராலும்

மேலை வல்வினை துகளற விளக்கிய விளங்கொளி
மணிச்சோதிக்

கோல முக்குடை யுடையவர்க் கல்லதென் கைத்தலங்
குவியாதே.

(இ-ள்) மாலும்-விஷ்ணுவும், நான் முகனும்-நான்கு முகங்களை யுடைய பிரமனும், மதி சூடிய-சடையில் சந்திரப் பிறையைத் தரித்த, கண்ணுதல்-நெற்றிக் கண்ணையுடைய சிவனும், திண்-வலிமை பொருந்திய, தோள்மேல்-புஜங்களின் மீது, சேலை சூடிய-வஸ்திர மணிந்த, சேகரவானவர்-கூட்டமாகிய தேவர்களும், தானவர்-அசுரர்களும், ஆலும்-என் முன் ஆலும் (எதிர்ப்படினுமென்ற படி), துகள் அற-குற்றம் நீங்க, மேலை-முன் ஜன்மங்களிற் செய்யப் பட்ட வல்வினை-வலிய வினைகளை விளக்கிய- விளக்கிக் காட்டி மேலும் தீவினை சேராதபடி என்னை நன்மார்க்கத்திற் புகுத்தி உய் வித்த, விளங்கு-பிரகாசிக்கின்ற, ஒளி-பிரபையையுடைய, மணி-இரத்தினங்களால் அமைந்த, சோதி-சுடர் பொருந்திய, கோலம்-அழகினை உடைய, முக்குடை-மூன்று குடைகளை, உடையவர்க்கு அல்லது-உடைய ஜினேசுவரர்க்கல்லாமல், (மேற்கூறியவர்களுக்கு), என் கைத்தலம்-என்னுடைய கையிடமானது, குவியாது-கூடி வணங்க மாட்டாது, எ-று.

(வி-ரை) இச் செய்யுளில் அருகக் கடவுள் வணக்கம் கூறப் பட்டுள்ளது. முக்குடைச் செல்வராகிய அருகக் கடவுளுக்கேயன்றி மற்ற விஷ்ணுவாலும், பிரமாவாலும், சிவலாலும், வானவர் களாலும், தானவர்களாலும் அவர்கட்கு என்கை குவியாது

என்பது இதன் கருத்து. அருகக் கடவுளையன்றி மற்றையரைத் தொழமாட்டேன் என்பது இதனுற் பெறப்படும்.

கண்ணுதல்-கண்ணையுடைய நெற்றி; இது நுதற்கண் என மாறி ஆகு பெயரால் நெற்றிக் கண்ணையுடைய சிவனை யுணர்த்தி நின்றது. மேலை வல்வினையை விளக்கிக் காட்டுவதனுல் ஞானமுண்டாகும், அதனுல் தவமாய் நற்கதி கைகூடும். முக்குடைகளும் மணிகள் முதலியவற்ருல் அமைந்தன வென்பதை, "பொன்னுநன் மணியு. முத்தும் புனைந்த முக்குடை நிழற்ற" எனச் சூடாமணி நிகண்டில் [செ. 1] கூறியிருத்தலால் உணர்க. இச் செய்யுள் நரிவிருத்தப் பிரதிகள் சிலவற்றில் இலதெனினும், சில பிரதிகளிற் காணப்படு கின்றது. இதற்கு முந்திய செய்யுள் மேருமந்தர புராணத்தின் ஈற்றிற் காணப்படுவதாலும், இச் செய்யுள் சில பிரதிகளிற் காணப் பட்டும் சிலவற்றில் காணப்படாமலும் இருத்தலாலும் இவ்விரண்டும் இந்நூலிற் சேராதவைகளோ என ஐயுறுதற்கு இடம் உண்டாகிறது.

# செய்யுள் முதற்குறிப்பு


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அஞ்சுமின் | 23 | சுற்றினார் | 9 |
| அத்தியு | 3 | சென்றுயர் | 2 |
| அறத்தினா | 31 | திருத்தமொ | 53 |
| ஆக்குவ | 58 | நடரிடைப் | 48 |
| இருந்தவர் | 45 | நட்டவன் | 25 |
| இல்லறத் | 40 | நரியினாரு | 22 |
| இளமையும் | 16 | நல்லசூழ்ச் | 20 |
| ஈகைநற் | 41 | நாகத்தை | 5 |
| உண்டலோ | 13 | நாட்டியா | 26 |
| உத்தமதா | 46 | நாட்டினா | 12 |
| உள்ளறப் | 49 | நின்றனவல் | 16 |
| ஊக்கி | 52 | நீடுநீ | 30 |
| ஒக்கத் | 19 | பற்றுளமெ | 38 |
| ஓங்கியத | 39 | பானிலா | 1 |
| கடிமணக் | 14 | பொன்னினை | 29 |
| கயக்கில் | 34 | மறுவிலாக் | 47 |
| கருவியா | 4 | மற்றிம் | 57 |
| கலையெ | 44 | மாணவேன் | 33 |
| களிறறு | 7 | மெய்ப்பொரு | 21 |
| குடற்படு | 10 | வரைத்தநா | 55 |
| குட்டநீர்த் | 24 | வாங்குவிற் | 3 |
| கேத்திரநன் | 17 | விடுகலை | 6 |
| கோறலோ | 50 | விட்டுநீங் | 51 |
| சந்தமா | 29 | விண்ணினார் | 5 |
| சந்தலை | 36 | விழுமின் | 27 |

# நீதிக் கதைகளின் பட்டியல்


| வரிசை எண் | பெயர் | சுட்டப்படும் செய்யுள் எண் |
|---|---|---|
| 1. | நரிக்கதை | 2–9 |
| 2. | சேனை கண்ட நரிக்கதை | 11 |
| 3 | சுகுமாரன் கதை | 12 |
| 4. | பொன் மயிற் கதை | 18 |
| 5. | உலோலுபன் கதை | 19 |
| 6. | நாகதந்தன் கதை | 20 |
| 7. | அரிவரன் கதை | 21 |
| 8. | பஞ்சபாண்டவர் கதை | 22 |
| 9. | காருத்தன் கதை | 23 |
| 10. | தனதேவன் கதை | 24 |
| 11. | பத்திரமித்திரன் கதை | 25 |
| 12. | உழவன் கதை | 26 |
| 13. | செட்டிக் கதை | 27 |
| 14. | உறித்தாபசன் கதை | 28 |
| 15. | தாடி வெண்ணெய்க்காரன் கதை | 29 |
| 16. | அரவிந்தன் கதை | 30 |
| 17. | சத்தியபாமை கதை | 31 |
| 18. | தர்மதேவதை கதை | 32 |
| 19. | சந்தனையார் கதை | 33 |
| 20 | விசித்ரமதி கதை | 49 |
| 21. | யசோதரன் கதை | 49 |
| 22. | உலோபத்தால் கெட்டார் கதைகள் | 50 |

# மேற்கோள் அகரவரிசை :

## இலக்கியம்

| | பக்கஎண் | தோன்றும் பாடல் எண் |
|---|---|---|
| அது கழுவாக்காலோ | 28 | 26 |
| அம்மிளகு கொத்தாலோடு | 28 | 26 |
| அழுக்காறெனா | 38 | 34 |
| அறனெனப்பட்டதே | 41 | 36 |
| இல்வாழ்வான் | 41 | 36 |
| உத்தமர்க்கொன்பது | 18 | 17 |
| கடல் வண்ணன் | 1 | 1 |
| கண்ணெனக் | 5 | 4 |
| கொலையிலாழி | 1 | 1 |
| சீவகசிந்தாமணி 225-30 | 18 | 17 |
| தவம் | 53 | 47 |
| திங்கண் மூன்று | 2 | 1 |
| தினற்பொருட்டால் | 51 | 45 |
| நற்றவஞ்செய்வார் | 53 | 47 |
| பற்றுற்றவர் | 43 | 38 |
| மாலுநான்முகனும் | 59 | 51 |

## இலக்கணம்

| | பக்க எண் | தோன்றும் பாடல் எண் |
|---|---|---|
| உவப்பினும் | 36, 57 | 33, 50 |
| ஒருமையிற் | 16 | 15 |
| ஒழியிசைவினா | 45 | 39 |
| சொல்திரியினும் | 39 | 34 |
| பல்லோர் படர்க்கை | 8 | 8 |
| பூமலியசோகின் | 2 | 1 |
| மக்கடாமே | 13 | 13 |
| மாவுமாக்களும் | 13 | 13 |
| முந்தியமோனை | 56 | 49 |
| வினைபெயர் | 39 | 34 |
| வினைமாற்று | 57 | 50 |

## நிகண்டு

| | | |
|---|---|---|
| அறத்திறுற்றிய | 47 | 41 |
| பொன்னுநன்மணி | 1 | 1 |

# மேற்கோள் நூல்கள் அகரவரிசை

## இலக்கியம்


| | பக்கஎண் |
|---|---|
| அருங்கலச்செப்பு | 18, 30, 31 |
| இரத்னகரண்டகம் | 31 |
| கதா கோசம் | 23 |
| சிராவகாசாரம் | 30 |
| சிலப்பதிகாரம் | 2 |
| சீவகசிந்தாமணி | 1, 2, 5, 18, 53, 58 |
| தர்மதேவதை கதை | 36 |
| திருக்குறள் | 33, 41, 51 |
| மேருமந்தரபுராணம் | 27, 56, 58 |
| ஜீவசம்போதனை | 15, 28, 29 |
| ஸ்ரீ சைல மகாத்மியம் | 36 |
| ஸ்ரீ புராணம் | 10, 21, 22, 25, 27, 33, 38 |


## இலக்கணம்


| | பக்கஎண் |
|---|---|
| தொல்காப்பியம் | 13 |
| நன்னூல் | 2, 8, 16, 36, 39, 45, 57, 58 |
| யாப்பருங்கலக்காரிகை | 56 |


## நிகண்டு


| | |
|---|---|
| திவாகரம் | 47 |
| நிகண்டு (சூடாமணி) | 1 |


## திங்களிதழ்


| | |
|---|---|
| தருமசீலன் | 59 |

# அருஞ்சொல் அகரவரிசை

(எண், பாட்டல் எண்)

அ

அகில், 4
அச்சம், 18
அத்தி–யானை, 9
அமர்தல்-அடங்குதல், 5
அரவு-பாம்பு, 9
அழல்–நஞ்சு, 6

ஆ

ஆகம்-உடப்பு, 7
ஆதன்-மூடன், 16
ஆரம்-சந்தனம், 4

இ

இட்டிகை-செங்கல், 19
இந்திரவில், 8
இப்பர்-பொன்னை இடையே குவித்து வைத்து இருபுறமும் யானைமேல் ஏறி நின்றால் ஒருவரை ஒருவர் காணக்கூடாத அளவுக்குப் பொன்குவியலை உடையவர், 14
இல்பொருளுடைமை, 1

ஈ

ஈட்டினார்–சம்பாதித்தவர் 10,

உ

உண்டல், 13
உணா–தானியம், 1
உறங்கல், 13

ஊ

ஊதியம்-பயன், 16
ஊன்-மாமிசம், 1, 2

ஏ

ஏரிடுதல், 8

ஒ

ஒக்கம்-உயர்ச்சி, 18
ஒண்மை–தூய்மை, 47

க

கதி-பிறப்பு, 47, 48
கந்தம்-மணம், 27
கபி–குரங்கு, 20
கற்பூரம், 4
கவிப்பர்-பொன்னின் குவியலை நடுவே குவித்து வைத்து இருபுறமும் எருதின்மேல் ஏறி நின்றால் ஒருவரை ஒருவர் காணமுடியாத அளவு பொன் குவியலை உடையவர், 14
களமகள்-மனைவி, 15

கா

காடி-கூழ், 27

கி

கிருஷியாளன்–உழவன், 26

கு

குதை, 9
குறம்–குறி, 4
குறிச்சி–குறிஞ்சி நிலத்து ஊர், 2

கெ

கெடி–பயம், 14

கே

கேத்திரம்-நிலம், 17

கோ

கோறல்-கொல்லுதல், 45

ச

சந்தம்-இயற்கை நலம், 27

சி

சிலம்பு–மலை, 8
சினவரன்–அருகன், 16

சு

சுற்று–கட்டு, 10

செ

செய்-நிலம், 9

த
தடி-தசை, 45
தி
திமிசு-வேங்கை மரம், 4
திருத்தம்-நல்லொழுக்கம், 18
தே
தேறல்-தெளிதல், 45
ந
நன்னூல்-அறநூல்கள், 16
நடலை-நடுக்கம், 43
நவை-குற்றம், துன்பம், 34, 43
நறவு-கள், 3
நா
நாகம்-பாம்பு, 7, 8, 9
நாகு-புற்று, 7
நாரகர்-நரகத்தில் வாழ்வோர்
நாள் செய்தல், 3
நி
நிதி-செல்வம், 16
நிகளம்-பாசம், 40
நு
நுங்க-மூழ்க, 6
நோ
நோற்றல்-தவம், 44
ப
படித்தரம்-நிபந்தனை, 18
பண்டிதர்-அறிவுடையவர், 13
பத்திரம்-வாள், 7
பத்மகுல்மம்-விமானம், 14
பா
பாசனம்-பாத்திரம், 29
பாத்திரம்-தகுதியான இடம், 15
பார்-பூமி, 12
பி
பிட்டு, 19
பிண்டி-மா 27
பிண்டி-அசோகமரம், 1
பிண்டிநாதன், 43
பிறிது மொழிதல், 18
பு
புத்தேள் உலகம், 41
புரிந்து-விரும்பி, 44
புரிவு-விருப்பம், 21
புள்-பறவை, 44
புன்மை-அற்பம், 11
பெ
பெருங்குடியர்-பொன்னின் குவியலை நடுவே குவித்து வைத்து இருபுறமும் மிதியடி மேலேறி நின்றால் ஒருவரை ஒருவர் காணமுடியாத அளவு பொன் குவியலை உடையவர், 14
ம
மத்தகம்-நெற்றி, 5
மா
மான்-குதிரை, 11
மு
முக்குடை, 1
முழை-குகை, 7, 12
மே
மேறல்-மெல்லுதல், 45
மோ
மோகம்-ஊறுசை, 7
யா
யாக்கை-உடல், 12, 18
வ
வரை-மலை, 5
வவ்வி-கைப்பற்றி, 10
வி
விடயம், பொருள், 14
வெ
வெறுக்கை-தனம், 10
வெளிறு நீர்மை-மதியின்மை, 10
வே
வேங்கை மரம், 3

SREMATI PRINTERS, MADRAS-600 002